# சுவிசேஷங்கள்

**பாடம் 3**

## மாற்கு எழுதின சுவிசேஷம்

Manuscript

thirdmill
Biblical Education. For the World. For Free.

© 2021 by Third Millennium Ministries

அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டுள்ளன. இந்த வெளியீட்டின் எந்த பகுதியும் Third Millennium Ministries,Inc. 316 Live Oaks Blvd., Casselberry, Florida 32707. இன் வெளியீட்டாளரினுடைய எழுத்துப்பூர்வ அனுமதியின்றி எந்தவொரு வடிவத்திலும் அல்லது லாபத்திற்கான எந்த வகையிலும் மீண்டும் உருவாக்கப்படக் கூடாது. மதிப்பாய்வுக்கோ, கருத்து தெரிவிக்கவோ அல்லது ஆழ்ந்த அறிவுத்திறன் சம்பந்தப்பட்ட நோக்கங்களுக்காகவோ சுருக்கமான மேற்கோள்களாக எடுக்கப்படலாம்.

சுட்டிக்காட்டப்படாவிட்டால் எல்லா வேத மேற்கோள்களும் பரிசுத்த வேதாகமத்திலிருந்து வந்தவை, The Bible Society of India Version Tamil-O.V. (New Orhto), copyright © 2018 . அனுமதியுடன் பயன்படுத்தப்பட்டுள்ளது. அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டுள்ளன.

## THIRDMILL ஊழியத்தைப் பற்றி

1997 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட இந்த Thirdmill ஒரு இலாப நோக்கம் இல்லாத சுவிசேஷ மார்க்க கிறிஸ்தவ ஊழியமாகும்.

**வேதாகம கல்வி. உலகத்திற்காக. இலவசமாக.**

ஊழியத்திற்கு போதுமான பயிற்சி இல்லாத உலகெங்கிலும் உள்ள நூறாயிரக்கணக்கான போதகர்கள் மற்றும் கிறிஸ்தவ தலைவர்களுக்கு இலவச கிறிஸ்தவ கல்வியை வழங்குவதே எங்கள் குறிக்கோளாகும். ஆங்கிலம், அரபு, மாண்டரின், ரஷ்ய மற்றும் ஸ்பெயின் நாட்டு மொழிகளில் இணையற்ற பல்லூடகவியல் பாடசாலை பாடத்திட்டத்தை உருவாக்கி உலகளவில் விநியோகிப்பதன் மூலம் இந்த இலக்கை அடைகிறோம். எங்கள் பாடத்திட்டம் எங்கள் கூட்டு ஊழியங்கள் மூலம் பன்னிரண்டிற்கும் மேற்பட்ட மொழிகளில் மொழிபெயர்க்கப்படுகிறது. இந்த பாடத்திட்டத்தில் வரைகலை மூலம் இயக்கப்படும் காணொளி காட்சிகள், அச்சிடப்பட்ட கல்வி உபகரணங்கள் மற்றும் இணைய வழி கல்வி உபகரணங்கள் உள்ளன. இது இணைய வழியாகவும் நேரடியான கல்வி நிலையங்கள் மூலமாகவும் கற்றுக்கொடுப்பதற்கு  பள்ளிகள், குழுக்கள் மற்றும் தனிநபர்களால் பயன்படுத்தப்படும் பொருட்டு வடிவமைக்கப்பட்டுள்ளது.

பல ஆண்டுகளாக, மிகச்சிறந்த உள்ளடக்கம் மற்றும் தரத்திற்கான விருது பெற்ற பல்லூடகவியல் பாடங்களை உருவாக்கும் அதிக செலவு குறைந்த முறையை நாங்கள் உருவாக்கியுள்ளோம். எங்கள் எழுத்தாளர்கள் மற்றும் தொகுப்பாளர்கள் இறையியல் ரீதியாக பயிற்சி பெற்ற கல்வியாளர்கள் ஆவர், எங்கள் மொழிப் பெயர்ப்பாளர்கள் அவர்களின் சொந்த மொழிகளில் இறையியல் புலமை பெற்றவர்கள், மற்றும் எங்கள் பாடங்களில் உலகெங்கிலும் உள்ள நூற்றுக்கணக்கான மரியாதைக்குரிய பாடசாலை பேராசிரியர்கள் மற்றும் போதகர்களின் நுண்ணறிவு உள்ளது. இதனோடு கூட,

எங்கள் வரைகலை வடிவமைப்பாளர்கள், விளக்குபவர்கள் மற்றும் தயாரிப்பாளர்கள் அதிநவீன உபகரணங்கள் மற்றும் நுட்பங்களைப் பயன்படுத்தி மிக உயர்ந்த உற்பத்தித் தரங்களை வழங்குகின்றனர்.

எங்கள் விநியோக இலக்குகளை நிறைவேற்றுவதற்காக, Thirdmill ஊழியமானது சபைகள், பாடசாலைகள், வேதாகம பள்ளிகள், மிஷனரி ஊழியர்கள், கிறிஸ்தவ ஒளிபரப்பாளர்கள் மற்றும் செயற்கைக்கோள் தொலைக்காட்சி வழங்குநர்கள் மற்றும் பிற அமைப்புகளுடன் திறம் சார்ந்த கூட்டாண்மைகளை உருவாக்கியுள்ளது. இந்த உறவுகள் ஏற்கனவே தனியாக ஊழியம் செய்கிற தலைவர்கள், போதகர்கள் மற்றும் பாடசாலை மாணவர்களுக்கு எண்ணற்ற காணொளி பாடங்களை விநியோகித்துள்ளன. எங்கள் வலைத்தளங்கள் விநியோகத்திற்கான வழிகளாக உள்ளன. மேலும் உங்கள் சொந்த கற்றல் சமூகத்தை எவ்வாறு தொடங்குவது என்பதற்கான பாட உபகரணங்களையும் எங்கள் பாடங்களுக்கு கூடுதல் உபகரணங்களையும் வழங்குகின்றன.

Thirdmill ஊழியம் IRS என்கிற அமைப்பினால் 501(c)(3) கழகமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. சபைகள், நிறுவனங்கள், வணிகங்கள் மற்றும் தனிநபர்களின் தாராளமான, வரி விலக்கு பெற்ற பங்களிப்புகளை நாங்கள் சார்ந்து இருக்கிறோம். எங்கள் ஊழியத்தைப் பற்றிய கூடுதல் தகவலைப் பெறுவதற்கும் நீங்கள் எவ்வாறு ஈடுபடலாம் என்பதை அறிவதற்கும் தயவுசெய்து www.thirdmill.org. யைப் பார்வையிடவும்.

# பொருளடக்கம்


**முன்னுரை ... 1**

**பின்னணி ... 1**

**எழுத்தாளர் ... 2**

பாரம்பரிய கண்ணோட்டம் ... 2

தனிப்பட்ட வரலாறு ... 4

**முதல் வாசகர்கள் ... 6**

ஆரம்பகால சபையின் சாட்சி ... 6

சுவிசேஷத்தின் விவரங்கள் ... 7

**எழுதப்பட்ட தருணம் ... 8**

தேதி ... 8

நோக்கம் ... 9

**அமைப்பு மற்றும் உள்ளடக்கம் ... 12**

**மேசியாவைப் பற்றிய அறிவிப்பு ... 12**

**மேசியாவின் வல்லமை ... 14**

முன்னுரை ... 15

கப்பர்நகூமிற்கு அருகில் ... 15

கலிலேயா பகுதி ... 18

கலிலேயாவிற்கு அப்பால் ... 21

**மேசியாவைப் பற்றிய அப்போஸ்தலர்களின் உறுதிமொழி ... 25**

**பாடுபடுகிற மேசியா ... 26**

ஆயத்தம் ... 27

எதிர்கொள்ளுதல் ... 31

அனுபவம் ... 33

**மேசியாவின் வெற்றி ... 35**

**முக்கிய கருப்பொருள்கள் ... 37**

**பாடுபடுகிற ஊழியர் ... 38**

எதிர்பார்ப்புகள் ... 38

இயேசுவின் ஊழியம் ... 40

சரியான பதில் ... 43

**ஜெயங்கொள்ளும் ராஜா ... 47**

பிரகடனப்படுத்தப்பட்ட ராஜ்யம் ... 47

வெளிப்படுத்தப்பட்ட வல்லமை மற்றும் அதிகாரம் ... 48

ஜெயங்கொள்ளப்பட்ட எதிரிகள் ... 50

**முடிவுரை ... 54**

# முன்னுரை

ஒவ்வொரு நாளும், ஆயிரக்கணக்கான கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவைப் பின்பற்றுவதால் உபத்திரவத்திற்கு ஆளாகிறார்கள். தினமும் இலட்சக் கணக்கான விசுவாசிகள் தங்கள் சொத்துக்கள் பறிமுதல் செய்யப்படுவதற்கான வாய்ப்பை எதிர்கொள்கின்றனர்; அவர்களின் தலைவர்கள் அடிபட்டு சிறையில் அடைக்கப்படுகின்றனர்; மற்றும் அவர்களது குடும்பங்கள் பாதிக்கப்படவும் கடத்தப்படவும் கொலை செய்யப்படவும் செய்கின்றன.

உண்மையில், புதிய ஏற்பாட்டின் இரண்டாவது சுவிசேஷமான மாற்கு சுவிசேஷம் எழுதப்படும் போது, கிறிஸ்தவர்களின் உபத்திரவம் மாற்குவின் மனதில் இருந்தது. ஆரம்பகால கிறிஸ்தவ சபை பல வழிகளில் பாதிக்கப்பட்டது. ஆனால் விசுவாசிகள் தங்கள் உபத்திரவத்தின் முக்கியத்துவத்தை எவ்வாறு புரிந்துகொள்ள முடிந்தது? அவர்களுடைய கஷ்டங்களைப் பற்றி இயேசுவின் முன்மாதிரி அவர்களுக்கு என்ன கற்பிக்க முடிந்தது? ஆரம்பகால கிறிஸ்தவர்களின் விசுவாசத்தைப் பலப்படுத்தும் விதத்தில் இயேசுவினுடைய வாழ்க்கையின் கதையைச் சொல்லி, உறுதியுடன் இருக்க அவர்களை ஊக்குவிக்கும் விதத்தில் மாற்கு இதுபோன்ற கேள்விகளுக்கு பதிலளித்தார்.

இது நம் தொடரான சுவிசேஷங்களின் மூன்றாவது பாடமாகும், மேலும் இதற்கு "மாற்கு எழுதின சுவிசேஷம்" என்று தலைப்பிட்டுள்ளோம். இந்தப் பாடத்தில், இயேசுவின் வாழ்க்கையைப் பற்றிய மாற்குவின் பதிவை நாம் உன்னிப்பாகக் கவனிப்போம், அதனால் அவருடைய போதனைகளை நம் நவீன வாழ்க்கையில் மிகவும் திறம்பட கடைபிடிக்க முடியும்.

மாற்கு சுவிசேஷத்தைப் பற்றிய நமது ஆய்வு மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்படும். முதலில், மாற்கு சுவிசேஷ புத்தகத்தின் பின்னணியைக் கருத்தில் கொள்வோம். இரண்டாவதாக, அதன் அமைப்பு மற்றும் உள்ளடக்கத்தை ஆராய்வோம். மூன்றாவதாக, மாற்கு சுவிசேஷத்தில் சில முக்கிய கருப்பொருள்களைப் பார்ப்போம். மாற்கு சுவிசேஷத்தின் பின்னணியுடன் ஆரம்பிக்கலாம்.

# பின்னணி

எழுத்தாளர் மற்றும் அவரது அசல் வாசகர்கள் மற்றும் அவர் எழுதின சந்தர்ப்பம் அல்லது சூழ்நிலை ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு மாற்கு



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

சுவிசேஷத்தின் பின்னணியை ஆராய்வோம். மாற்கு சுவிசேஷத்தின் எழுத்தாளர் பற்றி முதலில் பார்ப்போம்.

## எழுத்தாளர்

மாற்கு சுவிசேஷத்தின் எழுத்தாளர் பற்றி இரண்டு பகுதிகளாகப் பார்ப்போம். முதலில், அதன் எழுத்தாளரைப் பற்றிய பாரம்பரிய பார்வையைப் பார்ப்போம். இரண்டாவதாக, எழுத்தாளரின் தனிப்பட்ட வரலாற்றை ஆராய்வோம். இந்த சுவிசேஷத்தின் எழுத்தாளர் பற்றிய பாரம்பரிய கண்ணோட்டத்துடன் ஆரம்பிக்கலாம்.

### பாரம்பரிய கண்ணோட்டம்

> மாற்கு சுவிசேஷத்தை மாற்கு தான் எழுதினார் என்று ஆரம்பகால சபை பாரம்பரியம் ஒருமனதாக ஏற்றுக்கொண்டிருந்தது. நாம் புதிய ஏற்பாட்டில் பார்க்கும்போது, மாற்கு பர்னபாவின் உடன் பிறவா சகோதரர் என்று விவரிக்கப்படுகிறார். அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்தில் முதல் மிஷனரி பயணத்தில் பவுல் மற்றும் பர்னபாவுடன் அவர் சென்றார். அவரது தாயாருக்கு எருசலேமில் ஒரு வீடு இருந்ததாகவும், அதில் ஆரம்பகால சீஷர்கள் சந்தித்ததாகவும் விவரிக்கப்பட்டுள்ளது . பேதுரு தனது நிருபம் ஒன்றில் மாற்குவை தனது மகன் என்று குறிப்பிடுகிறார். மாற்கு ரோமில் பேதுருவைப் பின்தொடர்ந்து சென்று அவருடைய போதனைகளை துல்லியமாக எழுதினார் என்று பாப்பியஸ் கூறுகிறார்.
>
> Dr. ராபர்ட் எல். ப்ளம்மர்

பாப்பியஸ் தான் மாற்கு இரண்டாவது சுவிசேஷத்தை எழுதியதாகக் கூறிய ஆரம்பகால கிறிஸ்தவ எழுத்தாளர் ஆவார். பாப்பியஸ் இரண்டாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வாழ்ந்தார். மேலும் கி.பி.130 இல் ஆசியா மைனரில் ஒரு பேராயராக இருந்தார்.

கி.பி.325 இல் எழுதிய புகழ்பெற்ற சபை வரலாற்றாசிரியர் எசூபியஸிடமிருந்து, பாப்பியஸின் கண்ணோட்டத்தை நாம் அறிவோம். எசூபியஸ் தனது திருச்சபை வரலாறு, புத்தகம் 3, அத்தியாயம் 39, பிரிவு 15 இல், பாப்பியஸிடமிருந்து இந்த மேற்கோளை வழங்கினார்:

> பேதுருவின் மொழிபெயர்ப்பாளராக மாறிய மாற்கு, கிறிஸ்து சொன்ன அல்லது செய்த விஷயங்களை அவர் நினைவில் வைத்திருந்ததை ஒழுங்கின்படி இல்லாவிட்டாலும்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> துல்லியமாக எழுதினார். ஏனென்றால், அவர் கர்த்தரின் போதனைகளை நேரடியாக கேட்கவுமில்லை, அவரைப் பின்பற்றவுமில்லை, ஆனால் நான் சொன்னது போல், அவர் பேதுருவைப் பின்பற்றினார், அவர் தனது போதனைகளை கேட்பவர்களின் தேவைகளுக்கு ஏற்ப கொடுத்தார்.

பாப்பியஸின் கூற்றுப்படி, மாற்கு சுவிசேஷம் அப்போஸ்தலனாகிய பேதுருவின் போதனையை பெரிதும் சார்ந்துள்ளது. இயேசுவின் ஊழியத்தை மாற்கு நேரில் கண்டதில்லை, ஆனால் பேதுரு இயேசுவிடம் பார்த்ததையும் கேட்டதையும் அவர் பதிவு செய்தார்.

> நம்மிடம் உள்ள ஆரம்பகால சபை மரபுகள் சுவிசேஷங்கள் எழுதப்பட்ட காலத்திற்கும், மக்கள் சில நல்ல தகவல்களை பெற்றுக்கொள்ளும்படி சுவிசேஷங்களின் ஆரம்பகால சுற்றறிக்கைக்கும் போதுமான அளவு நெருக்கமாக உள்ளன என்று நான் நினைக்கிறேன். இரண்டாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஆசியா மைனரில் உள்ள ஹைராபோலிஸின் பேராயராக இருந்த பாப்பியஸிடமிருந்து நாம் அறிந்ததே இதற்கு மிகச் சிறந்த உதாரணம். பாப்பியஸ் ஒரு பெரிய புத்தகத்தை எழுதினார், அது துரதிர்ஷ்டவசமாக, குறுகிய காலத்தில் அழிந்து விட்டது, அவர் எழுதியவற்றின் சில சிறிய துண்டுகள் மட்டுமே நம்மிடம் உள்ளன, ஆனால் இவற்றில் சுவிசேஷங்களைப் பற்றிய சில கருத்துகள் உள்ளன. மற்றும் குறிப்பிடத்தக்க வகையில், பேதுருவின் பிரசங்கத்தைப் பொறுத்து மாற்கு தனது சுவிசேஷத்தை எழுதினார் என்று பாப்பியஸ் கூறுகிறார். அவர் பேதுருவின் மொழிபெயர்ப்பாளராக இருந்தார் என்று பாப்பியஸ் கூறுகிறார். அதாவது அவர் பேதுருவின் அராமிய மொழியை கிரேக்கம் அல்லது லத்தீன் மொழியில் மொழிபெயர்த்தார் என்று அர்த்தம். பேதுருவின் பிரசங்கத்தைப் பற்றிய தனது அறிவிலிருந்து அவர் சுவிசேஷத்தை இயற்றினார் என்று பாப்பியஸ் கூறுகிறார். சுவிசேஷங்களைப் பற்றி நாம் வைத்திருக்கும் மிகவும் உண்மையான மற்றும் ஆரம்பகால பாரம்பரியம் இதுவாக இருக்கலாம் என்று நான் நினைக்கிறேன், உண்மையில், அதைக் கேள்வி கேட்க நான் என்னிடம் எந்த காரணமுமில்லை.
>
> Dr. ரிச்சார்ட் பாக்கம்

ஆரம்பகால சபையில் இருந்த மற்ற எழுத்தாளர்களும் இந்த சுவிசேஷத்தை மாற்கு எழுதினார் என்ற பாரம்பரிய நம்பிக்கையை



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

உறுதிப்படுத்தினர். எடுத்துக்காட்டாக, கி.பி.170 இல் எழுதப்பட்ட இரண்டாவது சுவிசேஷத்தைப் பற்றிய ஆன்டி மார்சியனைட் ப்ரோலாக் என்கிற ஒரு நூல், மாற்கு தான் இந்த சுவிசேஷத்தை எழுதினர் என்று நேரடியாக உறுதிப்படுத்துகிறது. கி.பி.177 இல் எழுதிய சபை பிதாவான ஐரேனியஸும் இந்தக் கருத்தை உறுதிப்படுத்தினார். இதைத் தவிர, இந்தப் புத்தகத்திற்கு ஒரு தலைப்பைக் கொடுக்கும் ஆரம்பகால கிரேக்க கையெழுத்துப் பிரதிகள் இதை ”மாற்கு எழுதின சுவிசேஷம்” என்று அழைக்கின்றன.

மாற்கு இரண்டாவது சுவிசேஷத்தை எழுதினார் என்பதை உறுதிப்படுத்தும் சான்றுகள் ஆரம்பகால சபையில் பரவலாக இருந்தன. உண்மையில், பண்டைய சபையில் அவர் தான் எழுதினார் என்பது குறித்து குறிப்பிடத்தக்க விவாதங்கள் எதுவும் இல்லை. சமீபத்திய நூற்றாண்டுகளில் சில அறிஞர்கள் இந்த பாரம்பரியக் கண்ணோட்டத்தை மறுக்க முயன்றாலும், அவர்களால் மாற்கு தான் இதன் எழுத்தாளர் என்கிற பண்டைய சாட்சியத்தை மறுக்க முடியவில்லை, அல்லது மாற்கு இதை எழுதவில்லை என்பதற்கான எந்த ஆதாரத்தையும் இந்த சுவிசேஷத்திலிருந்து அவர்களால் சுட்டிக்காட்ட முடியவில்லை. இந்தக் காரணங்களுக்காக, மாற்கு இந்த சுவிசேஷத்தை எழுதினார் என்பதை நவீன கிறிஸ்தவர்கள் நம்பிக்கையுடன் உறுதிப்படுத்த முடியும்.

மாற்கு இந்த சுவிசேஷத்தை எழுதினார் என்ற பாரம்பரியக் கண்ணோட்டத்தை இப்போது நாம் உறுதிப்படுத்தியுள்ளோம், அவருடைய தனிப்பட்ட வரலாற்றை ஆராய்வோம், இதன் மூலம் அவர் இந்த சுவிசேஷத்தில் தரும் தகவல்களை நாம் நன்றாகப் புரிந்துகொள்ள முடியும்.

## தனிப்பட்ட வரலாறு

அப்போஸ்தலருடைய நடபடிகள் 12:12 இன் படி, எருசலேமில் வாழ்ந்த மரியாள் என்ற பெண்ணின் மகன் மாற்கு ஆவார். பேதுரு சிறையில் இருந்தபோது எருசலேமில் இருந்த சில கிறிஸ்தவர்கள் அவருடைய வீட்டில்தான் ஜெபிக்கச் சந்தித்தார்கள். எனவே, பேதுரு மற்றும் பிற அப்போஸ்தலர்களுடன் மாற்குவின் தொடர்பு ஆரம்ப காலத்திலேயே தொடங்கியது.

கொலோசெயர் 4:10 இல் பவுல் குறிப்பிட்டுள்ளபடி, மாற்கு பர்னபாவின் உறவினர் ஆவார். பவுல் மற்றும் பர்னபாவின் முதல் மிஷனரி பயணத்திற்கு அவர் உதவினார். ஆனால் அப்போஸ்தலருடைய நடபடிகள் 13:13 இல் நாம் கற்றுக்கொள்வது போல், பயணத்தின் நடுவில் மாற்கு அவர்களை விட்டுவிட்டு எருசலேமுக்குத் திரும்பினார்.

இதன் விளைவாக, பவுல் தனது இரண்டாவது மிஷனரி பயணத்தில் மாற்கு தன்னுடன் வர அனுமதிக்க மறுத்தார். அப்போஸ்தலருடைய நடபடிகள் 15:36-41 இல் பவுலும் பர்னபாவும் பிரச்சனையில் பிரிந்தனர் என்று வாசிக்கிறோம். எனவே, பர்னபா சீப்புருவில் ஊழியம் செய்வதற்காக



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

மாற்குவை தன்னுடன் அழைத்துச் சென்றார், அதே நேரத்தில் பவுல் பர்னபாவுக்குப் பதிலாக சீலாவைத் தனது பயணத் துணையாகத் தேர்ந்தெடுத்தார்.

இருப்பினும், கொலோசெயர் 4:10 இன் படி, மாற்கு பின்னர் பவுலின் நம்பிக்கையைத் திரும்பப் பெற்றார், மேலும் பவுலின் ஒரு சிறைவாசத்தின் போது கூட பவுலுடன் இருந்தார்.

பின்னர், பேதுரு ரோமில் ஊழியம் செய்தபோது மாற்கு அவருக்கும் உதவினார். பேதுரு 1 பேதுரு 5:13 இல் மாற்கு "என் குமாரன்" என்று அன்புடன் அழைக்கும் அளவுக்கு பேதுருவுடன் அவருக்கு நெருக்கமான உறவு இருந்தது. மாற்கு சுவிசேஷத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள இயேசுவின் பூமிக்குரிய ஊழியத்தைப் பற்றிய பெரும்பாலான விவரங்களை பேதுரு மாற்குவுக்குக் கற்பித்திருக்கக்கூடும்.

> யோவான் மாற்கு அல்லது மாற்கு என்கிற இவர் வேதத்தில் ஒரு கவர்ச்சிகரமான பாத்திரம் ஆவார். அவர் ஒரு சில நிகழ்வுகளில் சிறிதளவே வந்து போகிறார். அவரது தாயார் பெயர் மரியாள். அவரது தாயார் எருசலேமில் ஒரு வீட்டை வைத்திருந்தார், சபை சில நேரங்களில் அந்த வீட்டில் கூடியது என்பது நமக்குத் தெரியும். அவர் அப்போஸ்தலனாகிய பவுலின் மிஷனரி தோழர்களில் ஒருவராக இருந்த பர்னபாவின் உறவினர் ஆவார். பவுல் மற்றும் பர்னபாவின் முதல் மிஷனரி பயணத்தில் அவர் சென்றார். அவர் பேதுருவுடன் நெருங்கிய கூட்டாளியாகவும் இருந்தார் என்று சபை வரலாறு சொல்கிறது. மாற்கு சுவிசேஷம் பேதுருவின் நினைவுகள் தான் என்று சபை பாரம்பரியம் நமக்குச் சொல்கிறது. எனவே சிலர், "சரி, இந்த மாற்கு யார்? அவர் அபோஸ்தலன் இல்லையா" என்கிறார்கள். அவர் ஒரு அப்போஸ்தலரல்ல என்பது நிச்சயமாக உண்மை, ஆனால் அவருடைய நற்சான்றிதழ்களைப் பாருங்கள்; மிகவும் அற்புதமான சான்றுகளாக இருக்கின்றன. அவர் இளைஞனாக இருந்தபோது இயேசுவை பார்த்து அவரைப் பற்றி அறிந்திருப்பார். எனவே, அவர் இயேசுவை கண்ணால் பார்த்த சாட்சியாக இருந்தார், கிட்டத்தட்ட உயிர்த்தெழுதலையும் நேரில் கண்ட சாட்சியாக இருந்தார். அவருடைய வழிகாட்டிகள் யார்? அவருடைய இரண்டு முக்கிய வழிகாட்டிகள் புறஜாதிகளுக்கு அப்போஸ்தலனாகிய பவுலும் பன்னிரண்டு அப்போஸ்தலர்களின் பிரதிநிதியான பேதுருவும் ஆவார்கள். அப்படியானால், இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்தை எழுத அவர் தகுதி உள்ளவரா? முழு தகுதி உடையவர் ஆவார்.

Dr. மார்க் எல். ஸ்ட்ராஸ்

இந்த சுவிசேஷத்தின் எழுத்தாளராக மாற்குவைப் பற்றி இப்போது நாம் பேசிவிட்டோம், மாற்குவின் அசல் வாசகர்களின் அடையாளத்தை நாம் ஆராய வேண்டும்.

## முதல் வாசகர்கள்

பண்டைய சபையின் சாட்சி மற்றும் மாற்கு சுவிசேஷத்தின் பல விவரங்கள் இத்தாலியிலுள்ள சபைகள், குறிப்பாக ரோம் நகரத்தில் உள்ள சபைகள் மாற்குவின் அசல் வாசகர்கள் என்று சுட்டிக்காட்டுகின்றன.

ஆரம்பகால சபையின் சாட்சியையும், மாற்கு சுவிசேஷத்தின் சில விவரங்களையும் சுருக்கமாகப் பார்த்து, இத்தாலி மற்றும் ரோம் சபைகளுக்கு மாற்கு எழுதிய காரியங்களை ஆராய்வோம். ஆரம்பகால சபையின் சாட்சியைப் பற்றி முதலில் பார்ப்போம்.

### ஆரம்பகால சபையின் சாட்சி

நாம் முன்னர் குறிப்பிட்ட மூன்று பழங்கால சாட்சிகள் - பாப்பியஸ் (கி.பி. 130 இல் எழுதியவர்), மார்சியோனைட் எதிர்ப்பு முன்னுரை (கி.பி. 170 இல் எழுதப்பட்டது), மற்றும் ஐரேனியஸ் (கி.பி. 177 இல் எழுதியவர்) - அனைவரும் மாற்கு தனது சுவிசேஷத்தை இத்தாலியில் எழுதினார் என்றும் மேலும் சிலர் குறிப்பாக ரோம் நகரில் எழுதினார் என்றும் கூறினார். மேலும், அவர்களில் யாரும் மாற்கு தனது சுவிசேஷத்தை வேறு எந்த நகரத்திலும் உள்ள சபைக்கு அனுப்பியதாகக் கூறவில்லை. மாற்கு தான் வாழ்ந்த உள்ளூர் சபைகளுக்கு எழுதியதை இது குறிக்கிறது. இந்த முடிவு 1 பேதுரு 5:13 ஆல் பலப்படுத்தப்படுகிறது, இது பேதுருவுடன் சேர்ந்து ஊழியம் செய்த நாட்களில் ரோமில் மாற்கு இருப்பதைக் காட்டுகிறது.

எல்லா சுவிசேஷங்களையும் போலவே, மாற்கு சுவிசேஷத்தை எல்லா காலங்களிலும் முழு சபையும் பயன்படுத்த வேண்டும் என்று தேவன் விரும்பினார் என்பதை வரலாறு நிரூபிக்கிறது. ஆனால், இத்தாலியர்களுக்கு குறிப்பாக அவருடைய காலத்து ரோம கிறிஸ்தவர்களுக்கு என்ன நடக்கிறது என்பதைக் குறித்த ஆழ்ந்த அக்கறையினால் அவர் எழுதினார் என்பதை புரிந்து கொள்ளும்போது, மாற்குவின் சுவிசேஷத்தை அவர் விரும்பிய விதத்தில் அர்த்தப்படுத்துவதற்கு நாம் சிறப்பான முறையில் தயாராக இருக்கிறோம்.

ஆரம்பகால சபையின் சாட்சி மட்டுமல்லாமல், மாற்கு சுவிசேஷத்தின் பல விவரங்கள் அவர் இத்தாலியிலுள்ள சபைகளுக்கு குறிப்பாக ரோம் நகரில் உள்ள சபைகளுக்கு எழுதியதாகக் கூறுகின்றன. இத்தாலி மற்றும் ரோம



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

சபைகளுக்கு அவர் எழுதிய கூற்றை ஆதரிக்கும் மாற்கு சுவிசேஷத்தின் நான்கு விவரங்களைக் குறிப்பிடுவோம்.

## சுவிசேஷத்தின் விவரங்கள்

முதலாவதாக, பல சந்தர்ப்பங்களில், மாற்கு பாலஸ்தீன பழக்கவழக்கங்களை தனது வாசகர்களுக்கு விளக்கினார். உதாரணமாக, பரிசேயர்கள் தங்கள் கைகளை கழுவும் பழக்கத்தை மாற்கு 7:3-4 இல் விளக்கினார். மாற்குவின் வாசகர்களில் கணிசமான எண்ணிக்கையிலானவர்கள் பாலஸ்தீனத்திற்கு வெளியே வாழ்ந்த புறஜாதிகள் என்று இது போன்ற விளக்கங்கள் கூறுகின்றன.

மாற்கு அராமிய மொழி சொற்களை விளக்கியது அவர் இத்தாலி மற்றும் ரோம வாசகர்களுக்கு எழுதியதற்கான இரண்டாவது சான்றாகும். உதாரணமாக, மாற்கு 3:17 இல் யாக்கோபு மற்றும் யோவான் ஆகியோருக்கு கொடுக்கப்பட்ட பெயர்களைப் பற்றிய அவருடைய விளக்கத்தைக் கவனியுங்கள்:

> செபெதேயுவின் குமாரனாகிய யாக்கோபு, யாக்கோபின் சகோதரனாகிய யோவான், (இவ்விருவருக்கும் இடிமுழக்க மக்களென்று அர்த்தங்கொள்ளும் பொவனெர்கேஸ் என்கிற பெயரிட்டார்) (மாற்கு 3:17).

மாற்கு 5:41, 7:34, மற்றும் 15:22, 34 இல் இதே போன்ற விளக்கங்களை அளித்தார். அராமிய மொழி பேசும் பாலஸ்தீனியர்களுக்கு இந்த விளக்கங்கள் தேவைப்பட்டிருக்காது, மேலும் பாலஸ்தீனத்திற்கு வெளியே உள்ள பல யூதர்கள் கூட தங்கள் ஜெப ஆலயங்களில் இருந்து அராமியம் மற்றும் எபிரெய மொழியை நன்கு அறிந்திருப்பார்கள். எனவே, பாலஸ்தீனத்திற்கு வெளியே உள்ள புறஜாதிகளுக்கு மாற்கு இந்த சுவிசேஷத்தை எழுதினர் என்பதை இது தெளிவாக காட்டுகிறது.

இத்தாலி மற்றும் ரோமில் உள்ள வாசகர்களுக்கு இன்னும் தெளிவாகச் சுட்டிக்காட்டும் மூன்றாவது விவரம் என்னவென்றால், வேறு எந்த சுவிசேஷ எழுத்தாளரையும் விட மாற்கு அதிக லத்தீன் சொற்களைப் பயன்படுத்தினார், இது அவரது வாசகர்களில் கணிசமான பகுதியினர் லத்தீன் மொழியைப் புரிந்துகொண்டனர் என்பதைக் குறிக்கிறது.

முதல் நூற்றாண்டில், மத்தியதரைக் கடல் உலகில் லத்தீன் பரவலாகப் பேசப்படவில்லை. இது முதன்மையாக ரோமப் பேரரசின் தாயகமான இத்தாலியில் மட்டுமே இருந்தது. எனவே, மாற்கு குறைந்தது 15 முறை லத்தீன் வார்த்தைகளைப் பயன்படுத்தினார் என்பது குறிப்பிடத்தக்கது. உதாரணமாக, மாற்கு 12:42 இல், அவர் ஒரு சிறிய செப்பு நாணயத்தைக் குறிக்கும் லத்தீன் வார்த்தையான லெப்டாவைப் பயன்படுத்தினார். அவர் கிரேக்க எழுத்துக்களில் இந்த வார்த்தையை உச்சரித்தாலும், அந்த வார்த்தையே லத்தீன்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

வார்த்தையாகும் மேலும் இந்த வார்த்தை லத்தீன் பேசாதவர்களால் புரிந்து கொள்ளப்பட வாய்ப்பில்லை.

இத்தாலி மற்றும் குறிப்பாக ரோம சபைகளுக்கு மாற்கு எழுதிய நம்பகத்தன்மையைக் காட்டும் நான்காவது விவரம் என்னவென்றால், ரூப்பு என்ற மனிதரை மாற்கு குறிப்பிட்டார்.

மாற்கு 15:21 இல், இயேசுவின் சிலுவையை கொல்கொதா சுமந்தவர் ரூப்பு மற்றும் அலெக்சாண்டரின் தந்தை என்று நமக்குக் கூறப்பட்டுள்ளது - மாற்குவின் சுவிசேஷத்தில் எந்தப் பங்கையும் வகிக்காத இரண்டு மனிதர்கள் இவர்கள் ஆவார்கள். அப்படியென்றால் மாற்கு ஏன் அவர்களைக் குறிப்பிட்டார்? அவர்கள் மாற்குவின் வாசகர்களுக்குத் தெரிந்தவர்கள் அல்லது அவர்களில் ஒரு பகுதியினர் என்பதுதான் இதற்கான சிறந்த விளக்கங்களில் ஒன்றாகும். உண்மையில், ரூப்பு என்ற நபர் ரோமர் 16:13 இல் ரோம சபையின் உறுப்பினராக குறிப்பிடப்பட்டுள்ளார். அவர் மாற்கு குறிப்பிட்ட அதே ரூப்பு என்று கருதினால், மாற்கு ரோமில் உள்ள சபைக்கு எழுதினார் என்று நாம் அறிந்து கொள்ள முடியும்.

இந்த விவரங்கள் எதுவும் தனித்தனியாக ரோம் தான் மாற்கு சுவிசேஷத்தின் இலக்கு என்பதை நிரூபிக்கவில்லை. ஆனால் அவற்றின் ஒட்டுமொத்த விளைவு பண்டைய சபையின் வலுவான சாட்சியை உறுதிப்படுத்துகிறது. ரோம வாசகர்களை மனதில் வைத்து சுவிசேஷத்தை வாசிப்பது, மாற்குவின் குறிப்பிட்ட சில முக்கியத்துவங்களை புரிந்து கொள்ளவும், நவீன சபையில் நம் சொந்த வாழ்க்கையில் அவற்றைப் பயன்படுத்தவும் உதவும். இந்த பாடத்தில் நாம் பின்னர் இதைப் பார்ப்போம்.

இந்த சுவிசேஷத்தின் ஆசிரியர் மற்றும் அசல் வாசகர்களை மனதில் கொண்டு, மாற்கு சுவிசேஷத்தின் பின்னணியின் மூன்றாவது அம்சமான ‘அதன் தொகுப்புக்கான சந்தர்ப்பம் அல்லது சூழ்நிலைகள்’ என்பதை ஆய்வு செய்ய நாம் தயாராக உள்ளோம்.

## எழுதப்பட்ட தருணம்

மாற்கு சுவிசேஷத்திற்கான சந்தர்ப்பத்தின் இரண்டு அம்சங்களை ஆராய்வோம். முதலில், மாற்கு எழுதிய தேதியைக் கருத்தில் கொள்வோம். இரண்டாவதாக, மாற்கு இந்த சுவிசேஷத்தை எழுதியதன் நோக்கத்தை ஆராய்வோம். மாற்கு சுவிசேஷத்தின் தேதியை முதலில் பார்க்கலாம்.

### தேதி

மாற்கு சுவிசேஷம் தொகுக்கப்பட்ட தேதியை முழுமையான உறுதியுடன் தீர்மானிக்க முடியாது. ஆனால் ஒட்டுமொத்தமாக, சான்றுகள் முதல் நூற்றாண்டின் நடுப்பகுதி முதல் 60-களின் பிற்பகுதி வரையிலான தேதியை சுட்டிக்காட்டுகின்றன.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

ஐரேனியஸ் போன்ற பண்டைய சாட்சிகள் மற்றும் மாற்குக்கு எதிரான மார்சியோனைட் முன்னுரை, பேதுருவின் மரணத்திற்குப் பிறகு மாற்கு தனது சுவிசேஷத்தை எழுதினார் என்று கூறுகின்றன. கி.பி.64 இல் ரோம் எரிக்கப்பட்டதைத் தொடர்ந்து, ரோம பேரரசர் நீரோவால் சபையின் மீது சுமத்தப்பட்ட துன்புறுத்தல்களின் போது பேதுரு ரோமில் கொல்லப்பட்டிருக்கலாம். பேதுரு உயிருடன் இருந்தபோதே மாற்கு தனது வேலையைத் தொடங்கினார் என்று பாப்பியஸ் குறிப்பிடலாம், ஆனால் மாற்கு எழுதி முடிக்கப்படுவதற்குள் பேதுரு இறந்துவிட்டதற்கான சாத்தியத்தை அவர் நிராகரிக்கவில்லை. எனவே, மாற்கு தனது சுவிசேஷத்தை நிறைவு செய்திருக்கும் ஆரம்ப தேதி, கி.பி.64 இல் பேதுருவின் மரணத்தைச் சுற்றி இருந்திருக்கும் என்பதை ஏற்றுக்கொள்வது நியாயமானது.

மாற்கு எழுதிய சமீபத்திய ஆண்டு தீர்மானிக்க கடினமாக உள்ளது. முந்தைய பாடத்தில் நாம் பார்த்தது போல், பல அறிஞர்கள் மாற்கு எழுதப்பட்ட முதல் சுவிசேஷம் என்றும், மத்தேயு மற்றும் லூக்கா இருவரும் தங்கள் சொந்த சுவிசேஷங்களை எழுதும் போது மாற்குவை ஒரு குறிப்பாகப் பயன்படுத்தினர் என்றும் நம்புகிறார்கள். கி.பி.70 இல் நடந்த எருசலேம் மற்றும் அதன் தேவாலயத்தின் அழிவை இந்த மூன்று சுவிசேஷங்களில் எதுவும் குறிப்பிடாததால், பல அறிஞர்கள் மத்தேயு, மாற்கு மற்றும் லூக்கா ஆகியவை அந்த காலத்திற்கு முன்பே எழுதப்பட்டவைகள் என்று முடிவு செய்கிறார்கள். மத்தேயுவும் லூக்காவும் தங்கள் சொந்த படைப்புகளை முடிப்பதற்கு முன்பு மாற்குவின் சுவிசேஷத்தைப் பெற்றுப் பயன்படுத்தி இருந்தால், மாற்கு கி.பி 70 க்கு முன்பே விரைவில் முடிக்கப்பட்டது என்று சொல்வது பாதுகாப்பானது. நிச்சயமாக கி.பி.69 இல், மற்றும் அநேகமாக கி.பி.67 க்கு முன்னதாக இது எழுதப்பட்டிருக்கலாம். இது மத்தேயு மற்றும் லூக்கா ஆகியோர் தாங்கள் எழுதும் முன், மாற்கு சுவிசேஷத்தை நன்கு அறிந்திருக்க அதிக நேரத்தை வழங்கும்.

மாற்கு சுவிசேஷத்தின் தேதியை மனதில் கொண்டு, அவர் எழுதிய நோக்கத்தைப் பரிசீலிப்போம்.

## நோக்கம்

ஒரு வகையில், மாற்கும் மற்ற அனைத்து சுவிசேஷங்களும் 'இயேசுவின் வாழ்க்கை மற்றும் போதனைகளின் உண்மையான வரலாற்றுப் பதிவைப் பாதுகாப்பது' என்கிற ஒரே நோக்கத்தைப் பகிர்ந்து கொண்டன. கி.பி.50 முதல், இயேசுவின் வாழ்க்கை, மரணம் மற்றும் உயிர்த்தெழுதலை நேரில் கண்ட சாட்சிகள் மற்றும் அப்போஸ்தலர்கள் அதிகமாக மரித்துக் கொண்டிருந்தனர். எனவே, அவர்களின் சாட்சியத்தையும் சாட்சியையும் பாதுகாக்க வேண்டிய தேவை அதிகரித்தது. எசூபியஸ் மற்றும் பிற ஆரம்பகால சபை எழுத்தாளர்கள் குறிப்பிட்டது போல, இயேசுவின் ஊழியத்தைப் பற்றிய பேதுருவின் பதிவைப் பாதுகாப்பதே மாற்குவின் நோக்கத்தின் ஒரு பகுதி.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

ஆனால் இந்தப் பதிவைப் பாதுகாப்பது மட்டும் மாற்குவின் நோக்கமாக இருக்கவில்லை. ஒவ்வொரு சுவிசேஷ எழுத்தாளரையும் போலவே, மாற்கு தனது வாசகர்கள் இயேசுவைப் பற்றி அறிந்து கொள்ள மட்டும் விரும்பவில்லை. இயேசுவின் வாழ்க்கையிலிருந்து அவர்கள் தங்கள் சொந்த வாழ்க்கையில் பயன்படுத்தக்கூடிய பாடங்களை கற்றுக்கொள்ள வேண்டும் என்றும் அவர் விரும்பினார். ஆனால் அவர்களின் வாழ்க்கை எப்படி இருந்தது?

> ரோமில் கி.பி.60-களில் கிறிஸ்தவர்களுக்கு மிகவும் கடினமான காலமாக இருந்தது. அதுவரை, ரோம சட்டத்தில், நீங்கள் யூதராக இருந்தால், நீங்கள் அங்கீகரிக்கப்பட்ட மதத்தின் ஒரு பகுதியாக இருந்தீர்கள் என்பதை நீங்கள் நினைவில் கொள்ள வேண்டும்; இது அனுமதிக்கப்பட்ட மதம் என அறியப்பட்டது. எனவே யூத கிறிஸ்தவர்களுக்கு அதிக துன்புறுத்தல்கள் வரவில்லை, ஏனென்றால் ”சரி, அவர்கள் யூத மதத்தின் ஒரு பகுதி” என்று ரோமர்கள் நினைத்தார்கள். ஆனால் ”ஆ, இந்தப் புதிய மதம் புறஜாதிகளையும் யூதர்கள் அல்லாதவர்களையும் உள்ளடக்கியதாகத் தெரிகிறது மற்றும் யூத மதத்திற்கு மாறாக வேறுபட்டதா?” என்று ரோம அதிகாரிகள் உணர ஆரம்பித்தால் என்ன நடக்கும்? திடீரென்று அது இனி பாதுகாப்பான அல்லது அனுமதிக்கப்பட்ட மதம் அல்ல என்று ரோம அதிகாரிகள் அதைப் பற்றி கவலைப்படலாம். இப்போது, அதுவே 60 களின் தொடக்கத்தில் ரோமில் நடக்கத் தொடங்கியது அல்லது அங்கீகரிக்கப்பட்டது. 59 ஆம் ஆண்டில், சிறிது சிறிதாக நீரோவிற்கு கோபம் அதிகமானது, அவருடைய ஆட்சியின் முதல் ஐந்து ஆண்டுகள் மிகவும் நன்றாக இருந்தன, ஆனால் அதன் பின்னர் அவர் 68 இல் இறக்கும் வரை, அவர் மேலும் மேலும் கணிக்க முடியாதவராக மாறி வந்தார். 60-ல் பவுல் ரோமுக்கு வந்தார், மேலும் அவர் கிறிஸ்துவுக்காக மரிக்கத் தயாராக இருக்கிறார், இந்த புதிய மதம் நீரோ பேரரசர் உட்பட அனைவருக்கும் ஏற்றது என்பதைக் காட்டத் தயாராக இருக்கிறார். நீரோ இதை எதிர்கொள்ளும்போது, எனக்கு பிடிக்காத ஒரு மதம் இங்கே உள்ளது என்பதை அவர் உணரத் தொடங்குகிறார். நான் பொறுப்பாக இருக்க வேண்டும், இங்கே இந்த கிறிஸ்தவர்கள், ”இயேசுவே ஆண்டவர்” என்று பிரகடனம் செய்கிறார்கள். எனவே, ஜூலை 18, கி.பி.64 அன்று ரோமில் ஒரு பெரிய தீ விபத்து ஏற்பட்டது, நீரோ பழியை இந்த புதிய குழுவின் மீது சுமத்துகிறார், இந்த புதிய பிரிவினர் கிறிஸ்தவர்கள் என்று அழைக்கப்படுகிறார்கள், அந்த கதை மிகவும் சோகமானது.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

Dr. பீட்டர் வாக்கர்

மாற்கு எழுதிக்கொண்டிருந்த ஆண்டுகளில், ரோமில் உள்ள சபை ரோம பேரரசர் நீரோவின் கீழ் உபத்திரவத்தை அனுபவித்தது. நீரோ கி.பி.54 முதல் 68 வரை ஆட்சி செய்தார். கி.பி.64 இல் ரோம் நகருக்கு தீ வைத்ததற்காக கிறிஸ்தவர்களை குற்றம் சாட்டி, அவர்களை கொடூரமான முறையில் தண்டித்ததற்காக அவர் பெயர் பெற்றவர்.

> நீரோவின் ஆட்சியின் கீழ், ரோம் சபையை கடுமையாக துன்புறுத்தியது. ஆரம்பத்தில், ரோம் ஒரு குடியரசாக அமைக்கப்பட்டது. பின்னர், ஜூலியஸ் சீசரின் படுகொலைக்குப் பிறகு, அகஸ்டஸ் தனது இராணுவத்தை வழிநடத்தினார், மேலும் ரோம் நகரத்தை ஆக்கிரமித்து செனட்டைக் கலைத்தார். எனவே, ரோம குடியரசு ரோமப் பேரரசாக மாறியது, அகஸ்டஸ் அதன் முதல் பேரரசரானார். இது ரோமர்களின் மிருகத்தனத்தின் வரலாற்றினுடைய தொடக்கத்தைக் குறிக்கிறது. உண்மையில், கிறிஸ்தவர்களைத் துன்புறுத்துவதில் நீரோ மோசமானவர் அல்ல. மற்ற பேரரசர்கள் கிறிஸ்தவத்தை இன்னும் கடுமையாகத் தாக்கினர், மேலும் பல கிறிஸ்தவர்கள் பாதிக்கப்பட்டனர் மற்றும் சிலுவைகளில் அறையப்பட்டு அல்லது எரித்து கொல்லப்பட்டனர், வரலாற்று பதிவுகள் இதை நமக்கு சொல்கின்றன. ஆரம்பகால சபையில் பலர் கொல்லப்பட்டனர், அவர்களின் மரணம் தேவனின் இரக்கம் மற்றும் நீதிக்கு சாட்சியாக இருந்தது.

Dr. ஸ்டீபன் சான்

இந்தக் காலகட்டத்தில் ரோமிலும் அருகாமையிலும் உள்ள கிறிஸ்தவர்களுக்கு வாழ்க்கை பல வழிகளில் கடினமாக இருந்தது. மாற்கு அவர்களின் சூழ்நிலைகளுக்கு பொருந்தும் வண்ணம் தனது சுவிசேஷத்தை வடிவமைத்தார் என்று நாம் பார்க்கிறோம். மாற்குவின் நோக்கத்தை விவரிக்க பல வழிகள் இருந்தாலும், துன்புறுத்தப்பட்ட ரோமில் உள்ள கிறிஸ்தவர்களை வலுப்படுத்த மாற்கு தனது சுவிசேஷத்தை எழுதினார் என்ற கருத்தை இந்தப் பாடத்தில் பார்ப்போம்.

கிறிஸ்துவுக்காக துன்பப்பட்ட ரோம கிறிஸ்தவர்கள் என்னென்ன கஷ்டங்களையும் சோதனைகளையும் சந்தித்தார்களோ, அவற்றை இயேசு ஏற்கனவே எதிர்கொண்டார் என்பதை அவர்கள் உறுதியாக நம்ப முடியும் என்பதை மாற்கு சுவிசேஷம் தெளிவுபடுத்தியது. அவர் ரோம நீதிமன்றத்தில் நியாயமற்ற முறையில் தண்டிக்கப்பட்டார். அவர் ரோம வீரர்களால்

தாக்கப்பட்டார். மேலும் அவர் ரோம சிலுவையில் அறையப்பட்டார். ஆனால் அவருடைய உபத்திரவத்தின் வழியாக, இயேசு வெற்றி பெற்றார். இயேசுவை உண்மையாகப் பின்பற்றினால், அவர்களும் வெற்றியாளர்களாக இருப்பார்கள் என்று மாற்கு தனது வாசகர்களுக்கு உறுதியளிக்க விரும்பினார். அவர்கள் பாடுபடுவார்கள். ஆனால் அவர்களுடைய துன்பங்கள் இயேசுவைப் போலவே மகிமைக்கான பாதையாக இருக்கும்.

இப்போது நாம் மாற்கு சுவிசேஷத்தின் பின்னணியைப் பார்த்தோம், அதன் அமைப்பு மற்றும் உள்ளடக்கத்தை இப்போது பார்ப்போம்.

# அமைப்பு மற்றும் உள்ளடக்கம்

பெரிய அளவில், மாற்கு சுவிசேஷம் ஐந்து முக்கிய பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது. முதலாவதாக, 1:1-13 இல் இயேசுவை மேசியா என்று ஒப்பீட்டளவில் சுருக்கமான அறிவிப்புடன் மாற்கு தனது சுவிசேஷத்தைத் தொடங்கினார். இரண்டாவதாக, 1:14–8:26 இல் உள்ள மேசியாவின் வல்லமையை விவரிக்கும் ஒரு பெரிய பகுதி கதை உள்ளது. மூன்றாவதாக, ஒரு குறுகிய, முக்கிய மையப்பகுதி 8:27-30 இல் உள்ள மேசியா பற்றிய அப்போஸ்தலர்களின் உறுதிமொழியை முன்வைக்கிறது. நான்காவதாக, 8:31–15:47 இல் உள்ள மேசியாவின் உபத்திரவத்தைப் பற்றி கதையின் மற்றொரு பெரிய பகுதி கையாள்கிறது. ஐந்தாவது, 16:1-8 இல் மேசியாவின் வெற்றியைப் பதிவு செய்யும் ஒரு குறுகிய முடிவுரை உள்ளது. மேசியாவைப் பற்றிய அறிவிப்பில் தொடங்கி, மாற்குவின் இந்தப் பகுதிகள் ஒவ்வொன்றையும் சற்று ஆழமாகப் பார்ப்போம்.

## மேசியாவைப் பற்றிய அறிவிப்பு

மாற்கு 1:1 இல் சுவிசேஷம் எவ்வாறு ஆரம்பிக்கிறது என்பதைக் கவனியுங்கள்:

> தேவனுடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவினுடைய சுவிசேஷத்தின் ஆரம்பம் (மாற்கு 1:1).

மாற்கு இயேசுவை “கிறிஸ்து” என்று குறிப்பிட்டபோது, மேசியா என்ற எபிரெய வார்த்தையின் கிரேக்க மொழிபெயர்ப்பைப் பயன்படுத்தினார். இதேபோல், தேவ குமாரன் என்ற வார்த்தை இயேசு தேவனுடைய மேசியா என்பதற்கு மற்றொரு அறிகுறியாகும்.

பழைய ஏற்பாட்டிலும், சமகால யூத இறையியலிலும், மேசியா தாவீது ராஜாவின் வழித்தோன்றலாக இருக்க வேண்டும், அவர் இஸ்ரவேலுக்கு ராஜ



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

சிங்காசனத்தை மீட்டெடுத்து பூமியில் தேவனின் ராஜ்யமாக தேசத்தை மாற்றுவார்.

இந்த ஆரம்ப அறிவிப்பைத் தொடர்ந்து, மாற்கு 1:2-11 இல் யோவான் ஸ்நானகன் மூலம் இயேசு ஞானஸ்நானம் பெற்ற காரியம் பற்றிய சுருக்கமான விவரம் உள்ளது. இயேசுவின் ஞானஸ்நானத்தின் முடிவில், பரிசுத்த ஆவியானவர் இயேசுவின் மீது இறங்கினார், மேலும் பரலோகத்திலிருந்து பிதாவாகிய தேவனின் குரல் கேட்கப்பட்டது, இயேசு அவருடைய நேச குமாரன் என்று அறிவிக்கப்பட்டது. இந்த வழியில், ஆவியானவரும் பிதாவும் இயேசு உண்மையில் நீண்டகாலமாக எதிர்பார்க்கப்பட்ட மேசியா என்பதை உறுதிப்படுத்தினர்.

> இயேசு காலத்து யூதர்கள் மேசியாவின் வருகையைப் பற்றி என்ன நினைத்தார்கள் என்று யோசிப்பது மிகவும் சுவாரஸ்யமானது. உண்மையில், அங்கு பலவிதமான நம்பிக்கைகள் இருந்தன. சவக்கடல் சுருள்களில் இருந்து சில ஆவணங்கள் கிடைத்தன, அவைகளில் இரண்டு மேசியாக்கள் வருவதை சிலர் நம்புவதைப் பற்றிய குறிப்புகள் உள்ளன, ஆசாரியனாகிய மேசியா மற்றும் ராஜ மேசியா ஆகிய இரண்டு மேசியாக்கள் வருவார்கள் என்ற குறிப்புகள் உள்ளன. மேசியா தாவீதின் குமாரனாக இருப்பார், மேலும் அவர் அரசியல் சமாதானத்தைக் கொண்டுவருவார், அவர் ரோமர்களை விரட்டுவார் என்பதே அவர்களின் பிரதான எதிர்பார்ப்பு ஆகும். இஸ்ரவேல் நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்படிந்தால் ராஜ்யம் வரும் என்று மத ஸ்தாபனம் நம்புவதாக நான் நினைக்கிறேன். அந்த விஷயத்தில் அவர்கள் உண்மையில் இயேசுவை ஒரு அச்சுறுத்தலாகக் கருதினர், ஏனென்றால் குறைந்தபட்சம் அவர்களின் பார்வையில் இயேசு பிரமாணத்திற்குக் கீழ்ப்படிவதாகத் தெரியவில்லை, ஆனால் அதை மீறுவதாகத் தெரிந்தார். எனவே அவர்கள் எதிர்பார்க்கும் அரசியல் இயந்திரம் அவரிடம் இல்லை, பின்னர் பிரமாணத்தின் அடிப்படையில், அவர்கள் எதிர்பார்த்ததை அவர் செய்யவில்லை, அதனால் அவர்கள் அவரால் அவதூறானார்கள் என்று நான் நினைக்கிறேன். உண்மையில், முடிவில், அவர்கள் இயேசுவை உபாகமம் 13 இன் அடிப்படையில் பார்த்தார்கள், அவர் அடையாளங்களையும் அற்புதங்களையும் செய்தவர், ஆனால் உண்மையில் ஒரு பொய்யான தீர்க்கதரிசி, எனவே அவர் கொல்லப்பட வேண்டும் என்று எண்ணினார்கள்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

Dr. தாமஸ் ஆர். ஸ்கிரைனர்

ஆனால், பலர் எதிர்பார்த்தது போன்ற மேசியா இயேசு இல்லை. பொதுவாக, முதல் நூற்றாண்டு யூதர்கள் மேசியா இஸ்ரவேலுக்குள் அணிவகுத்து வந்து அரசாங்கத்தைக் கைப்பற்றுவார் என்று நினைத்தார்கள். ஆனால் மாற்கு 1:12-13 இல், இயேசு ஞானஸ்நானம் பெற்ற உடனேயே, பரிசுத்த ஆவியானவர் சாத்தானால் சோதிக்கப்படுவதற்காக அவரை வனாந்தரத்திற்கு அனுப்பினார் என்பதை நாம் அறிந்துகொள்கிறோம். அவர் இறுதியில் வெற்றி பெறுவார். ஆனால் தேவனுடைய திட்டத்தின்படி, வெற்றிக்கான அவரது பாதை நீண்ட சிக்கல்களின் பாதையில் செல்லும்.

இயேசுவை மேசியாவாக அறிவித்ததைத் தொடர்ந்து, மாற்கு 1:14-8:26 இல் மேசியாவின் வல்லமையை விவரித்தார்.

## மேசியாவின் வல்லமை

மாற்குவினுடைய கதையின் இந்த பகுதியில், இயேசு தனது வல்லமையையும் அதிகாரத்தையும் மேசியாவாக வெளிப்படுத்தத் தொடங்கினார். இந்த ஊழியத்தைப் பார்க்கவும் அதன் மூலம் பயனடையவும் ஏராளமான மக்கள் கூடினர், ஆனால் இயேசுவின் வல்லமை அவர் கிறிஸ்து என்பதை நிரூபித்ததை அவர்கள் அங்கீகரிக்கவில்லை. உண்மையில், இந்த முழுப் பகுதியில் எங்கும் அவரை கிறிஸ்து என்று யாரும் குறிப்பிடவில்லை. இயேசு கூட தனது சொந்த அடையாளத்தைப் பற்றி வெளிக்காட்டாமல் இருந்தார், மேலும் அவர் மற்றவர்களையும் இதைப்பற்றி எதுவும் சொல்லாமல் இருக்கும்படி ஊக்குவித்தார்.

நிச்சயமாக, மாற்குவின் ரோம வாசகர்களில் முதல் வாசகர்கள் கிறிஸ்தவர்கள், எனவே இயேசுவே மேசியா என்பதை அவர்கள் ஏற்கனவே அறிந்திருந்தனர். ஆனால் கதையின் இந்த பகுதியில் மாற்குவின் உத்தி, இயேசுவைச் சுற்றியிருந்த கூட்டத்தின் பதற்றத்தை அவர்கள் உணர அனுமதித்தது, இந்த வல்லமையுள்ள மனிதர் உண்மையில் யார், அவர் என்ன செய்ய வந்தார் என்று அவர்கள் ஆச்சரியப்பட்டிருக்க வேண்டும்.

துரதிர்ஷ்டவசமாக, விமர்சன அறிஞர்கள் பெரும்பாலும் இயேசுவின் மௌனத்தை இயேசு தனது ஆரம்பகால ஊழியத்தின் போது அவரது மேசியா என்னும் பாத்திரத்தை சுயநினைவில் கொண்டிருக்கவில்லை என்பதற்கான அறிகுறியாக எடுத்துக் கொண்டனர். ஆனால் மாற்கு 1:11ல் நாம் பார்த்தது போல், இயேசுவின் ஞானஸ்நானத்தில் மேசியாவின் பாத்திரத்தை தேவனே அறிவித்தார். இதன் வெளிச்சத்தில், இயேசுவின் மௌனத்தை ஒரு உபாயமாக புரிந்துகொள்வது மிகவும் நல்லது. இயேசு ஒரு குறிப்பிட்ட இலக்கை நிறைவேற்றினார், மேலும் அதிகமான மக்கள் தம்மிடம் திரண்டால், அந்த இலக்கு தடைபடும் என்பதை அவர் அறிந்திருந்தார்.

மேசியாவின் வல்லமையை விவரிக்கும் மாற்குவின் கதையை நான்கு பகுதிகளாகப் பிரிக்கலாம். முதலில், மாற்கு ஒரு அறிமுகத்தை வழங்கினார், அது முழு கதைக்கும் தொனியை அமைத்தது. இரண்டாவதாக, கப்பர்நகூம் நகருக்கு அருகில் இயேசுவின் உள்ளூர் ஊழியத்தில் கவனம் செலுத்தினார். மூன்றாவதாக, இயேசுவின் ஊழியம் கலிலேயாவின் மற்ற பகுதிகளுக்கும் விரிவடைந்தது என்று அவர் விளக்கினார். நான்காவதாக, இயேசு இறுதியில் கலிலேயாவிற்கு அப்பால், பெரும்பாலும் புறஜாதிகள் வாழும் பகுதிகளுக்குச் சென்றார் என்று அவர் அறிவித்தார். மாற்கு 1:14-15 இல் உள்ள அறிமுகத்தில் தொடங்கி, இந்த மூன்று பிரிவுகளில் ஒவ்வொன்றையும் பார்ப்போம்.

## முன்னுரை

மாற்கு இயேசுவின் பிரசங்கத்தை மாற்கு 1:15 இல் சுருக்கமாகக் கூறிய விதத்தைக் கவனியுங்கள்:

> ”காலம் நிறைவேறிற்று,” ”தேவனுடைய ராஜ்யம் சமீபமாயிற்று. மனந்திரும்பி, சுவிசேஷத்தை விசுவாசியுங்கள்!” என்று [இயேசு] சொன்னார் (மாற்கு 1:15).

கலிலேயாவில் இயேசுவின் முக்கிய நோக்கம் தேவனுடைய ராஜ்யம் சமீபமாயிருக்கிறது என்ற நற்செய்தியைப் பிரசங்கிப்பதாகவும், மனந்திரும்பி விசுவாசிக்கும் அனைவருக்கும் அதன் ஆசீர்வாதங்கள் வழங்கப்படுவதாகவும் மாற்கு சுட்டிக்காட்டினார்.

மேசியாவின் வல்லமையைப் பற்றிய தனது பதிவு முழுவதும், கப்பர்நகூம் நகருக்கு அருகில் தொடங்கி, அங்கிருந்து பரவும் கலிலேயாவின் பிராந்தியத்திலும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் இயேசுவின் ஊழியத்தில் மாற்கு கவனம் செலுத்தினார். மற்ற சுவிசேஷங்களுடன் மாற்குவின் பதிவை ஒப்பிட்டுப் பார்த்தால், இயேசு மற்ற இடங்களில் ஊழியம் செய்த நேரத்தை மாற்கு தவிர்த்துவிட்டதாகத் தெரிகிறது. இயேசுவின் அனைத்துப் பயணங்களையும் பற்றிய விரிவான அறிக்கையை வழங்குவதற்குப் பதிலாக, கலிலேயா பகுதியில் இயேசுவின் செயல்பாடுகள் மற்றும் உத்திகளைப் பற்றி பேசுவதே மாற்குவின் குறிக்கோளாக இருந்தது என்பதை இந்த விடுவிப்புகள் சுட்டிக்காட்டின.

அறிமுகத்திற்குப் பிறகு, மாற்கு 1:16-3:6 இல் கலிலேயா பகுதியில் உள்ள கப்பர்நகூம் நகருக்கு அருகில் இயேசுவின் ஊழியத்தைப் பற்றி விவரித்தார்.

## கப்பர்நகூமிற்கு அருகில்

மாற்கு 1:16-20 இல் இயேசு தனது முதல் சீஷர்களை அழைத்ததாக அறிக்கை செய்வதன் மூலம் மாற்கு தொடங்கினார். இந்த பகுதியில், மக்கள் இயேசுவுக்கு பதிலளித்தது அவர்களின் தீவிரமான கீழ்ப்படிதலைக் காட்டுகிறது.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

இயேசு அவர்களைப் பின்தொடரச் சொன்னார், அதனால் அவர்களின் தொழிலை விட்டுவிட்டு அவருடைய சீஷர்களானார்கள்.

அடுத்ததாக, இயேசு மாற்கு 1:21-34 இல் கப்பர்நகூமில் போதனை செய்து அற்புதங்களைச் செய்து சுவிசேஷத்தை அறிவித்தார்.

இந்த நேரத்தில், இயேசுவின் புகழ் கலிலேயா முழுவதும் பரவத் தொடங்கியது, அவருடைய ஊழியம் முழுவதும் அது தொடர்ந்து பரவியது. அவருடைய புகழ் பெருகியதால், மக்கள் கூட்டம் இயேசுவைச் சுற்றி திரளத் தொடங்கியது, நற்செய்தியை அறிவிக்கும் மற்றும் நிரூபிக்கும் அவரது திறனை அது அடிக்கடி தடுக்கிறது. எனவே, தன்னை மேசியாவாக உயர்த்த வேண்டாம் என்று மற்றவர்களுக்கு அறிவுறுத்த ஆரம்பித்தார்.

இயேசு பின்னர் கப்பர்நகூமிலிருந்து புறப்பட்டு, மாற்கு 1:35-45 இல் நாம் காண்பது போல், அண்டை கிராமங்களில் போதிக்கவும் அற்புதங்களைச் செய்யவும் தொடங்கினார். இயேசு தனது போதனைகள் மற்றும் அற்புதங்கள் மூலம் தம்முடைய நற்செய்தியைப் பரப்புவதற்காக பக்கத்து கிராமங்களுக்குச் சென்றார். ஆனால், கப்பர்நகூமில் திரளான மக்கள் அவரை சுதந்திரமாக ஊழியம் செய்யவிடாமல் தடுத்ததற்காக அவர் அதைச் செய்தார். முன்பு செய்தது போல், தன்னைப் பற்றிய செய்திகளைப் பரப்ப வேண்டாம் என்று சந்தித்தவர்களை ஊக்குவித்தார்.

அடுத்ததாக, இயேசு கப்பர்நகூமுக்குத் திரும்பினார், அங்கு அவர் யூதத் தலைவர்களுடன் மோதினார், மாற்கு 2:1–3:6 இல் இதைப் பற்றி நாம் வாசிக்கிறோம்.

மாற்கு சுவிசேஷத்தின் இந்தப் பகுதி, பாவத்தை மன்னிக்க இயேசுவுக்கு இருக்கிற அதிகாரம், பாவிகளுக்கு ஊழியம் செய்வதை நியாயப்படுத்துதல் மற்றும் ஓய்வுநாளைப் பற்றிய அவருடைய போதனைகள் போன்ற விஷயங்களைக் கையாள்கிறது. ஆனால் இது அவரது வளர்ந்து வரும் புகழின் மற்றொரு விளைவையும் அறிமுகப்படுத்துகிறது: இயேசுவின் எதிர்ப்பாளர்கள் எண்ணிக்கையில் பெருகத் தொடங்கினர், மேலும் அவரை கடுமையாக எதிர்த்தனர். உண்மையில், இயேசுவின் மரணத்தை முன்னறிவிப்பதன் மூலம் இந்த பிரிவு முடிகிறது. மாற்கு 3:6 இல், இயேசுவின் எதிரிகள் மிகவும் கோபமடைந்து, அவர்களில் பலர் அவரைக் கொலை செய்யத் திட்டமிட்டனர் என்று மாற்கு அறிவித்தார்.

> இயேசு பிரசங்கம் செய்ததாலும், அவருடைய அற்புதங்களாலும் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. நாம் புதிய ஏற்பாட்டை வாசிக்கும்போது, மக்கள் ஏன் அவரை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்று நினைக்கிறோம்? அவர்கள் ஏன் அவருடைய வல்லமையைப் பார்க்க மாட்டார்கள்? அவருடைய போதனையை ஏன் கேட்க மாட்டார்கள்? ஆனால் கிறிஸ்துவின் போதனை… பல

விஷயங்கள் மக்களை அதை நிராகரிக்க வைத்தது. ஒன்று அவருடைய செய்திகளை அவர்கள் விரும்பவில்லை. அவர்கள் இந்த பூமியில் ஒரு ராஜ்யத்தை எதிர்பார்த்தனர். அவர் இருதயத்திற்குள் வந்து மக்களின் வாழ்க்கையை மாற்றும் ஒரு ராஜ்யத்தைப் பற்றி பேசினார், மக்களின் இருதயங்களில் தேவன் ஆட்சி செலுத்துவதைப் பற்றி இது பேசுகிறது. அவருடைய போதனை மனதைத் தாக்கியதே அதற்குக் காரணம். நிச்சயமாக, அவருடைய அற்புதங்கள் ஆழமாக வெறுக்கப்பட்டன, ஏனென்றால் அவருடைய போதனைகளுடன் உடன்படாத கிறிஸ்துவின் எதிரிகள் அவருடைய அற்புதங்கள் அவர் சொல்வதை ஏதோ ஒரு வகையில் சரிபார்த்ததாக அறிந்திருந்தனர். எனவே, பாவமுள்ள இருதயம் இயற்கையாகவோ அல்லது உடனடியாகவோ தேவனின் போதனைகளை ஏற்றுக்கொள்வதில்லை, கிறிஸ்துவின் ஊழியம் அதற்கு ஒரு தெளிவான உதாரணம், ஏனென்றால் இங்கே தேவன் மனிதர்களில் இருக்கிறார், ஆனால் மனிதர்கள் அவரை நிராகரிக்கிறார்கள்.

Dr. ஜெப் லோமேன்

நாம் அடிக்கடி நமது நிகழ்ச்சி நிரல்களுடன் தேவனிடம் வருகிறோம். அவர் எப்படி இருக்க வேண்டும், எப்படி செயல்பட வேண்டும் என்று நமது எதிர்பார்ப்புகள் உள்ளன. மேலும் அவர் நமது நிகழ்ச்சி நிரல்களை, நமது எதிர்பார்ப்புகளை மீறும் போது, பெரும்பாலும் நாம் அதை பொறுத்துக்கொள்வதில்லை. எனவே, மக்கள் தாங்கள் விரும்பிய ராஜ்யத்திற்கு பொருந்தாத ஒரு ராஜ்யத்தைப் பிரசங்கிக்கும்போது இயேசுவை வெறுப்பார்கள். மேசியா எப்படி இருக்க வேண்டும் என்ற அவர்களின் முன்கூட்டிய எதிர்பார்ப்புகளுக்குப் பொருந்தாத ஒரு மேசியாவாக அவர் வருகிறார். அதனால், அவர் அவர்களின் எதிர்பார்ப்புகளை சீர்குலைக்கிறார். மேலும் நமக்கு அது பிடிக்கவில்லை. சில சமயங்களில் இயேசு வெறுக்கப்பட்டார், ஏனென்றால் அவர் மதத் தலைவர்களை விட மிகவும் வித்தியாசமான திட்டத்துடன் வந்தார். அவர் ஒரு ராஜ்யத்தைப் பிரசங்கிக்க வந்தார், அது அவர்களின் மதத்தில் அவர்கள் கொண்டிருந்த அதிகாரம் மற்றும் முக்கியத்துவம் மற்றும் கௌரவம் ஆகியவற்றை அகற்றப் போகிறது, அதனால் அவர்கள் அதைச் செய்ய விரும்பவில்லை. எனவே, எந்த நேரத்திலும்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> நாம் நமது நிகழ்ச்சி நிரலுடன் தேவனிடம் வரும்போது, தாழ்மையான இருதயங்களுடனும், கற்பிக்கக்கூடிய இருதயங்களுடனும், அவர் நம் வழியில் எதைக் கொண்டு வந்தாலும் அவரை நம்புவதற்கு பதிலாக, தேவனுக்கு எதிராக இருக்க நம்மை அமைத்துக் கொள்கிறோம்.
>
> Dr. கே. எரிக் தோனேஸ்

இப்போது கப்பர்நகூமுக்கு அருகில் இயேசு செய்த காரியங்களை ஆய்வு செய்தோம், மாற்கு 3:7-6:13 இல் கலிலேயா பகுதி முழுவதும் அவர் எவ்வாறு தனது ஊழியத்தை விரிவுபடுத்தினார் என்று பார்ப்போம்.

## கலிலேயா பகுதி

இந்த கட்டத்தில், இயேசு புதிய பகுதிகளில் தேவனுடைய ராஜ்யத்தின் அருகாமையைப் பிரசங்கித்து, கப்பர்நகூமுக்கு அப்பால் சுற்றியுள்ள மற்ற பகுதிகளுக்கு போனார். இந்த பகுதிகளில் அவர் மனந்திரும்புதல் மற்றும் விசுவாசத்தைப் போதித்தபோது, அவர் தொடர்ந்து கூட்டத்தை ஈர்த்து, வலுவான எதிர்ப்பைப் பெற்றார்.

இந்த பகுதி மாற்கு 3:7-12 இல் இயேசு கூட்டத்திலிருந்து விலகியதில் தொடங்குகிறது. அதைக் குறைக்க அவர் முயற்சித்த போதிலும், இயேசுவின் புகழ் எல்லா இடங்களிலும் பரவிக்கொண்டிருந்தது என்பதை அழுத்தமாக சொல்வதன் மூலம் முழுப் பகுதிக்கும் இந்த பத்தியானது தொனியை அமைக்கிறது. மேலும் அவரைச் சுற்றி திரண்டிருந்த மக்கள் கூட்டம் அவர் ஊழியம் செய்வதை கடினமாக்கியது. இயேசு தனது ஊழியத்தை கலிலேயாவின் மற்ற பகுதிகளுக்கும் விரிவுபடுத்தியதற்கு இந்தக் கஷ்டம் ஒரு காரணமாகத் தோன்றுகிறது.

இந்தக் கதையின் அடுத்த பகுதி, மாற்கு 3:13-19 இல் நாம் வாசிக்கிறபடி, இயேசு தம்மைப் பின்பற்றியவர்களில் பன்னிரெண்டு பேரை அவருடைய சிறப்பு சீஷர்களாக நியமித்ததை அறிவிக்கிறது. சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதற்கும் அற்புதங்களைச் செய்வதற்கும் உதவ இயேசு இந்தப் பன்னிரண்டு சீஷர்களைத் தேர்ந்தெடுத்தார். ஆனால் இந்த சீஷர்களில் ஒருவர் இறுதியில் இயேசுவைக் காட்டிக் கொடுப்பார் என்பதையும் மாற்கு தனது வாசகர்களுக்கு நினைவூட்டினார். இயேசுவை எதிர்ப்பது அவருடைய எதிரிகளிடமிருந்து மட்டுமல்ல, அவருடைய நெருங்கிய சீஷர்களிடமிருந்தும் கூட வரும்.

இதற்குப் பிறகு, மாற்கு 3:20-35 இல் நாம் பார்க்கிறபடி, நியாயப்பிரமாண ஆசிரியர்களிடமிருந்தும் அவருடைய சொந்தக் குடும்பத்திலிருந்தும் இயேசு எதிர்கொண்ட எதிர்ப்பைப் பற்றி மாற்கு அறிக்கை செய்தார். இயேசு ராஜ்யத்தின் சுவிசேஷத்தை அற்புத வல்லமையுடன் அறிவித்தபோது, எல்லாத்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

தரப்பிலிருந்தும் எதிர்ப்பை எதிர்கொண்டார் என்பதை இந்தக் கதை நிரூபிக்கிறது. அவரை மேசியாவாக ஏற்றுக்கொள்வதற்குப் பதிலாக, அவர் பிசாசினால் ஆட்கொள்ளப்பட்டதாக வேதபாரகர்கள் நம்பினர். மேலும் அவரது சொந்த குடும்பத்தினர் அவருக்கு பைத்தியம் பிடித்து விட்டதாக நம்பினர்.

இதைத் தொடர்ந்து, இயேசு மாற்கு 4:1-34 இல் தேவனுடைய ராஜ்யத்தைப் பற்றிய உவமைகள் மூலம் சுவிசேஷத்தை அறிவித்தார். அவிசுவாசிகளால் சூழப்பட்டபோது இயேசு பொதுவாக உவமைகளில் கற்பித்தார். விசுவாசிகளுக்கு தேவனுடைய ராஜ்யத்தை வெளிப்படுத்தவும், விசுவாசியாதவர்களிடமிருந்து அதை மறைக்கவும் அவர் இதைச் செய்தார். மாற்கு 4:11-12 இல் அவர் தம் சீஷர்களிடம் கூறியது போல்:

> அதற்கு அவர்: தேவனுடைய ராஜ்யத்தின் இரகசியத்தை அறியும்படி உங்களுக்கு அருளப்பட்டது. புறம்பே இருக்கிறவர்களுக்கோ இவைகளெல்லாம் உவமைகளாகச் சொல்லப்படுகிறது. "அவர்கள் குணப்படாதபடிக்கும், பாவங்கள் அவர்களுக்கு மன்னிக்கப்படாதபடிக்கும், அவர்கள் கண்டும் காணாதவர்களாகவும், கேட்டும் உணராதவர்களாகவும் இருக்கும்படி, இப்படிச் சொல்லப்படுகிறது!" என்றார் (மாற்கு 4:11-12).

துரதிர்ஷ்டவசமாக, சில சமயங்களில் இயேசுவின் உவமைகளும் அவருடைய சீஷர்களைக் குழப்பியது. ஆனால் இது நடந்தபோது, அவர்கள் புரிந்துகொள்வதை உறுதிசெய்ய இயேசு தம்முடைய அர்த்தத்தை தனிப்பட்ட முறையில் விளக்கினார்.

மாற்குவின் கதையின் இந்த பகுதியில் உள்ள உவமைகளின் முக்கிய அம்சம் என்னவென்றால், சுவிசேஷத்தின் பரவல் மூலம் மெதுவான வளர்ச்சியின் நீண்ட செயல்முறைக்குப் பிறகுதான் தனது ராஜ்யத்தின் முழுமையைக் கொண்டுவருவார். இயேசு தேவனுடைய ராஜ்யத்தை பூமிக்குக் கொண்டு வந்தார். ஆனால் அவர் அதை ஒரு நீண்ட வழியில் செய்து கொண்டிருந்தார், அவர்களும் அவரைப் போலவே துன்பங்களையும் எதிர்ப்பையும் சந்திக்க வேண்டியிருக்கும்.

இயேசுவின் உவமைகளைப் பற்றிய மாற்குவின் தகவல்களுக்குப் பிறகு மாற்கு 4:35–5:43 இல் இயேசுவின் வல்லமையை வெளிப்படுத்தும் பல காட்சிகள் வருகின்றன. இங்கே, இயேசு வானிலையைக் கட்டுப்படுத்தினார், பிசாசுகளைத் துரத்தினார், நோய்களைக் குணப்படுத்தினார், மரித்தவர்களை உயிர்த்தெழுப்பினார் என்று மாற்கு அறிவித்தார். இந்த ஒவ்வொரு கதையிலும், மக்கள் ஆபத்தை எதிர்கொள்ளும் அச்சத்தில் இருந்தனர். ஆனால் இயேசு அற்புதமாக அவர்களைக் காப்பாற்றிய பிறகு, அவர்களின் பயம் உண்மையில் அதிகரித்தது, ஏனென்றால் இந்த வல்லமையுள்ள மனிதர் உண்மையில் யார் என்று அவர்கள் புரிந்து கொள்ளவில்லை.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

இயேசுவின் சீஷர்கள், சில சமயங்களில் இயேசு வியத்தகு செயல்களைச் செய்வதைக் காணும்போதும், அவர் அற்புதங்களைச் செய்வதைக் காணும்போதும் சுவிசேஷத்தில் பயத்தை வெளிப்படுத்துகிறார்கள். தேவன் செயல்படும் போது அவர்கள் பயத்தை வெளிப்படுத்துகிறார்கள். உதாரணமாக, மாற்கு 4 இல், சீஷர்கள் கடலில் பெரும் புயலின் மத்தியில் இருக்கிறார்கள். அலைகள் படகிற்குள் பாய்கின்றன, படகு மூழ்குவது போல் தெரிகிறது, இயேசு உறங்கிக்கொண்டிருக்கிறார். எனவே, அவர்கள் இயேசுவை எழுப்பி, படகை மீட்டெடுக்க உதவுவார் என்ற நம்பிக்கையில், அவர்கள், “கர்த்தாவே, நாங்கள் நீரில் மூழ்குவதைப் பற்றி நீங்கள் கவலைப்படவில்லையா?” என்று கேட்கிறார்கள். இயேசு எழுந்து, காற்றையும் அலைகளையும் அமைதியாக இருக்கச் சொன்னார். அதனால், அவர்கள் காப்பாற்றப்பட்டனர், அவர்கள் புயலுக்கு மிகவும் பயந்தார்கள், அவர்கள் மிகுந்த பயத்தில் நிறைந்திருந்தனர் என்று மாற்கு கூறுகிறார். சரி, அவர்கள் ஏன் பயப்படுகிறார்கள்? புயல் ஓய்ந்து விட்டது; தண்ணீர் அமைதியாக இருக்கிறது. அவர்கள் பயப்படுகிறார்கள், ஏனென்றால் காற்றையும் அலைகளையும் அமைதலாக்கக்கூடிய ஒரே நபர் காற்றையும் அலைகளையும் படைத்தவராகிய தேவன் தான் என்று அவர்களுக்குத் தெரியும். காற்றையும் அலைகளையும் அமைதிப்படுத்திய தேவனுடன் தாங்கள் படகில் இருப்பதை அவர்கள் உணர்ந்தனர். இது அவர்களுக்கு பயத்தை உருவாக்குகிறது, ஏனென்றால் இவர் என்ன வகையான தேவன் என்று அவர்களுக்கு இன்னும் தெரியாது என்று நான் நினைக்கிறேன். அவர்கள் ஒரு சுழலுக்காக தூக்கி எறியப்பட்டிருக்கிறார்கள், அவர்களுக்கு இயேசுவின் குணம் தெரியாது.

Dr. ப்ரான்க் தீல்மேன்

இந்த வல்லமைக் காட்சிகளைத் தொடர்ந்து, மாற்கு தனது சொந்த ஊரான நாசரேத்தில் இயேசு எதிர்கொண்ட எதிர்ப்பைப் பற்றி மாற்கு 6:1-6 இல் எழுதினார். இயேசுவின் ஊழியத்தின் இந்த கட்டத்தில் பலர் அவரை கடுமையாக எதிர்த்ததை இந்த கதை மீண்டும் வலியுறுத்துகிறது. அவருடைய சுவிசேஷம் வல்லமையுடன் பரவியபோதும், அவரைப் பின்தொடரும் கூட்டம் அதிகரித்தபோதும், அவருடைய சொந்த ஊரிலுள்ள மக்கள் அவரையும் அவருடைய நற்செய்தியையும் நிராகரித்தனர்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

இறுதியாக, மாற்கு 6:7-13 இல் பன்னிரண்டு சீஷர்களை அனுப்பியதன் மூலம் கலிலேயா பகுதியில் இயேசுவின் ஊழியத்தின் விவரம் முடிவடைகிறது. ராஜ்யத்தின் நற்செய்தியைப் பிரசங்கிக்கவும், பாலஸ்தீன தேசம் முழுவதும் அற்புதங்களைச் செய்யவும் இயேசு தனது 12 சீஷர்களை அனுப்பினார். ஆனால், சீஷர்கள் மனந்திரும்புதல் மற்றும் விசுவாசத்திற்கு ஏற்ற சுவிசேஷத்தைப் பரப்புகையில், மக்கள் அவருக்குப் பதிலளித்ததைப் போலவே அவர்களுக்கும் பதிலளிப்பார்கள் என்பதையும் இயேசு தெளிவுபடுத்தினார். சிலர் அவர்களை ஏற்றுக்கொள்வார்கள், ஆனால் சிலர் அவர்களை நிராகரிப்பார்கள். தேவனுடைய ராஜ்யம் எதிர்ப்பின் மத்தியிலும் வளர்கிறது என்று இயேசு தொடர்ந்து கற்பித்தார்.

கப்பர்நகூம் நகரம் மற்றும் கலிலேயாவை சுற்றியுள்ள பகுதிகளுக்கு அருகில் இயேசு செய்த சுவிசேஷ ஊழியத்தைப் பற்றிய காரியங்களைத் தந்த பிறகு, மாற்கு 6:14-8:26 இல் இயேசுவின் ஊழியத்தில் மேசியாவின் வல்லமை எப்படி இருந்தது என்பதில் கவனம் செலுத்தினார்.

## கலிலேயாவிற்கு அப்பால்

கலிலேயா பகுதிக்கு அப்பால் இயேசு செய்த ஊழியங்களை பதிவு செய்வதில், நாம் ஏற்கனவே பார்த்த சில கருப்பொருள்களை மாற்கு தொடர்ந்து வலியுறுத்தினார். ராஜ்யத்தின் பிரகடனத்தின் வல்லமை வாய்ந்த பரவலையும், உற்சாகமடைந்த மக்கள் கூட்டத்தின் எதிர்வினையையும், இயேசுவின் எதிரிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவதையும் அவர் அறிக்கை செய்தார்.

ஆனால் மாற்கு புதிய வழிகளில் சீஷர்கள் மீது கவனம் செலுத்தத் தொடங்கினார். வரவிருக்கும் கடினமான நாட்களுக்கு தங்களை தயார் படுத்தும் பொருட்டு இயேசு அவர்களுக்குப் பயிற்சி அளித்த வழிகளை அவர் வலியுறுத்தினார். மேலும் அவருடைய போதனையை அவர்கள் தவறாமல் புரிந்துகொண்ட விதங்கள் மற்றும் அவருக்கான தங்கள் கடமைகளில் தவறிய விதங்கள் குறித்து அவர் பேசினார்.

கலிலேயாவிற்கு அப்பால் இயேசு செய்த ஊழியத்தைப் பற்றிய மாற்குவின் அறிக்கை, மாற்கு 6:14-29 இல் இயேசுவின் வளர்ந்து வரும் புகழை வலியுறுத்துவதன் மூலம் தொடங்குகிறது.

கடந்த காலங்களில், கப்பர்நகூமைச் சுற்றியுள்ள பகுதிகளில் மட்டும் இயேசு தன் ஊழியத்தை செய்த போது, அவரது புகழ் கலிலேயா பகுதி முழுவதும் பரவியது. இப்போது அவரது புகழ் அவருக்கு முன்னால் தொடர்ந்தது. இயேசு கலிலேயாவின் புறநகரில் தங்கியிருந்ததால், அவருடைய புகழ் பாலஸ்தீனம் முழுவதும் பரவி, ஏரோது ராஜாவையும் சென்றடைந்தது. இயேசுவின் அடையாளத்தைப் பற்றிய கேள்வியைக் கேட்க மாற்கு இந்த வாய்ப்பையும் பயன்படுத்தினார். குறிப்பாக, ஏரோது ராஜா யோவானைக்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

கொன்றதால், இயேசு யோவான் ஸ்நானகனாக இருக்க முடியாது என்று மாற்கு விளக்கினார்.

அடுத்து, மாற்கு பல அற்புதங்களை மாற்கு 6:30-56 இல் குறிப்பிடுகிறார். இந்த பகுதி இயேசு கூட்டத்திலிருந்து விலகிச் செல்ல முயற்சிப்பதில் தொடங்குகிறது, ஆனால் பின்னர் அது மக்கள் கூட்டம் ஏன் முதலில் கூடியது என்பதை நிரூபிக்கும் பல வல்லமையான காரியங்களை விவரிக்கிறது. 5,000 பேருக்கும் 4,000 பேருக்கும் உணவளித்ததன் மூலமும், கலிலேயா கடலில் தண்ணீரில் நடந்து சென்றதன் மூலமும், குருடர்களையும் செவிடர்களையும் குணப்படுத்துவதன் மூலமும் இயேசு தம்முடைய வல்லமையை வெளிப்படுத்தினார். அவரது அற்புதங்கள் அனைத்து சிருஷ்டிப்புகளின் மீதும் அவரது மறுக்க முடியாத கட்டுப்பாட்டை வெளிப்படுத்தின. இந்த வல்லமை வாய்ந்த அற்புதங்களின் காரணமாக, ஜனங்கள் இயேசு எங்கு சென்றாலும் அவரைப் பின்தொடர்ந்தனர். சில சமயங்களில் அவர்களும் அவருக்கு முந்திச் சென்றனர்.

இயேசுவின் அற்புதங்களைத் தொடர்ந்து, பரிசேயர்களின் தொடர்ச்சியான எதிர்ப்பை மாற்கு 7:1-23 இல் குறிப்பிடுகிறார். இயேசுவும் பரிசேயர்களும் பழைய ஏற்பாட்டு நியாயப்பிரமாணம், மரபுகளின் மதிப்பு மற்றும் பரிசுத்தத்தின் தன்மை ஆகியவற்றைக் கடைப்பிடிப்பதற்கான சரியான வழி குறித்து மோதினர். இதன் விளைவாக, இயேசுவுக்கும் செல்வாக்கு மிக்க யூதர்களுக்கும் இடையே பதற்றம் அதிகரித்தது.

கடைசியாக, மாற்கு 7:24-8:26 இல் மற்றொரு பிரிவு அற்புதங்களை மாற்கு அறிவித்தார். இந்தப் பகுதி இயேசு கூட்டத்தைத் தவிர்க்கவும் தடுக்கவும் முயற்சிப்பதைப் பற்றிய அறிக்கைகளுடன் தொடங்கி முடிவடைகிறது. இந்த அறிக்கைகளுக்கு இடையில், யூதர்கள் மற்றும் புறஜாதிகள் மத்தியில் இயேசு பல அற்புதங்களைச் செய்ததாக அது தெரிவிக்கிறது. மேலும் சில புறஜாதிகள் அவர் மீது விசுவாசம் வைத்திருந்ததையும் அது பதிவு செய்கிறது.

இந்த அற்புதங்களின் பட்டியலின் நடுவில், இயேசுவினுடைய சீஷர்களின் குறைபாடுகளுக்கு மாற்கு விசேஷித்த கவனம் செலுத்தினார். அவருடைய ஊழியத்தின் ஆரம்பத்தில், மாற்கு 4:13 இல் நாம் பார்க்கிறபடி, விதைப்பவனின் உவமையை சீஷர்கள் புரிந்துகொள்ளத் தவறிவிட்டனர். இந்த கட்டத்தில், அவருடைய சில போதனைகளை அவர்களால் இன்னும் புரிந்து கொள்ள முடியவில்லை. எனவே, இயேசு அவர்களை நேரடியாக எதிர்கொண்டார். மாற்கு 8:14-17 இல் மாற்குவின் பதிவைக் கவனியுங்கள்:

> படகில் தங்களிடம் இருந்த ஒரு அப்பத்தைத் தவிர, வேறு அப்பங்களைக் கொண்டுவர சீஷர்கள் மறந்துவிட்டார்கள். “கவனமாக இருங்கள்” என்று இயேசு அவர்களை எச்சரித்தார். ”நீங்கள் பரிசேயருடைய புளித்தமாவைக்குறித்தும் ஏரோதின்

> புளித்தமாவைக்குறித்தும் எச்சரிக்கையாயிருங்கள்."என்று கற்பித்தார். அதற்கு அவர்கள்: "நம்மிடத்தில் அப்பங்கள் இல்லாதபடியால் இப்படிச் சொல்லுகிறார்" என்று தங்களுக்குள்ளே யோசனைபண்ணிக்கொண்டார்கள். இயேசு அதை அறிந்து, அவர்களை நோக்கி: "உங்களிடத்தில் அப்பங்கள் இல்லாதபடியினால் நீங்கள் யோசனைபண்ணுகிறதென்ன? இன்னும் சிந்தியாமலும் உணராமலும் இருக்கிறீர்களா?" என்றார் (மாற்கு 8:14-17).

இயேசு ஆவிக்குரிய சீர்கேட்டைப் பற்றி பேசிக்கொண்டிருந்தார், ஆனால் அவருடைய சீஷர்கள் அவர் தங்கள் வயிற்றுக்கு தேவையான அப்பத்தைப் பற்றி பேசுவதாக நினைத்தார்கள். இயேசு ஏன் அவர்களிடம் விரக்தியடைந்திருப்பார் என்பதைப் பார்ப்பது எளிது.

மேசியாவாக இயேசுவின் வல்லமையைப் பற்றிய மாற்குவின் அறிக்கை முழுவதும், இயேசுவின் அற்புதங்களும் போதனைகளும் அவர் உண்மையில் கிறிஸ்து என்பதை உறுதிப்படுத்தியது. அப்படியென்றால், ஏன் இத்தனை பேர் அவரை எதிர்த்தார்கள்? ஏன் அவரை நிராகரித்தார்கள்? அவருடைய சீஷர்கள் கூட அவரைப் புரிந்துகொள்வதற்கும் பின்பற்றுவதற்கும் ஏன் இவ்வளவு சிரமப்பட்டார்கள்? அதற்குக் காரணம், இயேசு மக்கள் எதிர்பார்த்த மாதிரியான மேசியா அல்ல. அவர்கள் எதிர்பார்த்தபடி அரசியல் மேலாதிக்கத்திற்கு உயருவதற்குப் பதிலாக, அவர் தனது வல்லமையைப் பயன்படுத்தி சுவிசேஷத்தைப் பிரசங்கித்து மற்றவர்களின் தேவைகளுக்கு ஊழியம் செய்தார்.

> ரோமர்களை துரத்தி அவர்களை தோற்கடித்து, எருசலேமில் தேவனுடைய ராஜ்யத்தை மையமாக நிறுவும் ஒரு அரசியல் மற்றும் இராணுவ மேசியாவை யூதர்கள் எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர் என்று முதல் நூற்றாண்டிலிருந்து வரும் சான்றுகள் கூறுகின்றன. எனவே அந்த வகையில் அது மிகவும் தேசியவாதமாக இருந்தது. அந்த தேசிய உணர்வை நிறைவேற்றப் போகிறார் என்பதற்கான அறிகுறிகளை இயேசு காட்டவில்லை; அதற்கு பதிலாக அவர் ஒரு பெரிய தரிசனத்தை கொண்டிருந்தார். இது ரோமர்களைப் பற்றியது அல்ல; அது உண்மையில் சிருஷ்டிப்பைப் பற்றியது. சிருஷ்டிப்பு ஒரு வீழ்ச்சியடைந்த நிலையில் இருந்தது, மற்றும் இயேசு வீழ்ச்சியை மாற்றியமைக்க வந்தார், பூமியில் தேவனுடைய ராஜ்யத்தை மீண்டும் **நிறுவ** வந்தார். மேலும் அந்த ராஜ்யம் பாவத்தின் தோல்வியையும் சாத்தானின் தோல்வியையும், மரணத்தின் தோல்வியையும் குறிக்கிறது. எனவே, இயேசு அரசியல் மற்றும் வெறும் இராணுவ

வெற்றியை விட மிகப் பெரிய ஒன்றைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

Dr. மார்க் எல். ஸ்ட்ராஸ்

யூத மக்கள் சுமார் ஐந்நூறு அல்லது அறுநூறு ஆண்டுகளாக யாரோ ஒருவர் இஸ்ரவேலுடைய ராஜ்யத்தை மீட்டெடுப்பார் என்று எதிர்பார்க்கிறார்கள். அவர்களுக்கு ஒரு ராஜா இல்லை; அவர்களுக்கு சொந்த சுதந்திரமும் இல்லை. எனவே, முதல் நூற்றாண்டு பாலஸ்தீனத்தில் நிறைய பதற்றம் உள்ளது, இயேசு ராஜ்யத்தை அறிவித்து, அவர் தான் மேசியா என்று சூசகமாக சொல்லி வந்த போது, அவர் சொல்வதைக் கேட்க அவர்கள் மிகவும் கூச்சத்துடன் இருந்தார்கள். அவர்கள் என்ன எதிர்பார்த்தார்கள்? சரி, யாராவது தேவாலயத்தை மீட்டெடுக்கப் போகிறார்கள் என்று எதிர்பார்த்தார்கள்; தேவாலயம் உண்மையில் இருந்ததா என்பதைக் குறித்து பல சந்தேகங்கள் இருந்தன. இப்போது அது புறஜாதி ராஜாவான ஏரோது மூலம் மீண்டும் கட்டப்பட்டது. அது உண்மையில் தேவன் நினைத்த தேவாலயமா என்ற சந்தேகம் இருந்தது. ஆனால் அதற்கும் மேலாக, தேவன் இஸ்ரவேலை மீட்பதற்காகவும், பழைய ஏற்பாட்டில் அவர் செய்த வாக்குத்தத்தங்களை நிறைவேற்றுவதற்காகவும் அவர்கள் ஏங்கினார்கள். கடவுள் தனது வாக்குத்தத்தங்களை எங்கே நிறைவேற்றப் போகிறார்? அதைத்தான் அவர்கள் குறிப்பாகத் தேடிக்கொண்டிருந்தார்கள், இங்கே நாம் ரோம ஆக்கிரமிப்பின் கீழ் இருக்கிறோம், நிச்சயமாக தேவன் தனது வாக்குத்தத்தங்களை நிறைவேற்றப் போகிறார் என்றால், அவர் ரோமர்களை அகற்றப் போகிறார் என்று அவர்கள் எண்ணியிருக்கலாம். மேலும் அவர்கள் அரசியல் சுதந்திரத்தை எதிர்பார்த்திருக்கலாம். அப்படியானால், புதிய ஏற்பாட்டில் இயேசு தான் மேசியா என்றும், அவர்தான் தேவாலயத்தை மீட்டெடுக்கப் போகிறார் என்றும் உண்மையில் அவர் உண்மையான ஆலயமாக இருக்கப் போகிறார் என்றும் கூறுகிறார். ராஜ்யத்தைக் கொண்டுவரப் போகிறார். ஆனால் உண்மையில் அது அரசியல் ரீதியாக சுதந்திரமான யூத ராஜ்யமாக இருக்கப் போவதில்லை. உண்மையில், ராஜாவாகிய இயேசு கிறிஸ்து உலகம் முழுவதும் கர்த்தராக இருக்கிறார் என்ற செய்தியாக இது இருக்கும். எனவே, அவர்கள் எதிர்பார்ப்பதை விட இது சற்று



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> வித்தியாசமானது, ஆனால் இது வாக்குத்தத்தம் பண்ணப்பட்டவற்றின் ஆழமான நிறைவேறுதலாகும்.
>
> Dr. பீட்டர் வாக்கர்

மேசியாவான இயேசுவைப் பற்றி பன்னிரண்டு சீஷர்கள் உணர்ந்த அதே பதற்றத்தை மாற்குவின் அசல் வாசகர்களும் அனுபவித்திருக்கலாம். ரோமில் உள்ள சபை கிறிஸ்தவம் நல்ல வரவேற்பைப் பெற்ற காலத்தில் ஸ்தாபிக்கப்பட்டது. ஆரம்பகால சபையைப் போலவே, இயேசு பூமியில் தனது ராஜ்யத்தை முழுமைப்படுத்த ஒப்பீட்டளவில் விரைவாக திரும்புவார் என்று அவர்கள் எதிர்பார்த்திருக்கலாம். ஆனால் அதற்கு பதிலாக, கடந்து சென்ற ஆண்டுகள் நீரோவின் கீழ் பயங்கரமான துன்பங்களையும் துன்புறுத்தலையும் கொண்டு வந்தன. எனவே, தம்மைப் பின்பற்றுபவர்கள் எதிர்பார்க்கும் விஷயங்களை அவர் எப்போதும் செய்யாவிட்டாலும், இயேசு எப்போதும் வல்லமை வாய்ந்த மேசியாவாக இருப்பார் என்பதை மாற்கு தெளிவுபடுத்தினார். அவர் வல்லமை வாய்ந்த மேசியா என்பதால், சரியான நேரத்தில், அவர் வாக்குத்தத்தம் செய்தபடி அவர் தனது ராஜ்யத்தை வெற்றிகரமாக நிறைவாக்குவார் என்று விசுவாசிகள் நம்பலாம். ஆனால் இதற்கிடையில், அவர் இன்னும் கர்த்தராக இருக்கிறார், மேலும் நாம் எதிர்கொள்ளும் எந்த பிரச்சனையிலும் அவரால் நமக்கு உதவ முடியும்.

மேசியாவின் வல்லமையை விவரிக்கும் மாற்குவின் நீண்ட கதைக்குப் பிறகு, அவருடைய சுவிசேஷத்தின் மூன்றாவது முக்கிய பகுதியான 8:27-30 ல் அப்போஸ்தலர்கள் மேசியாவைப் பற்றிய உறுதிமொழியைப் பதிவுசெய்யும் ஒரு சிறு அத்தியாயத்திற்கு வருவோம்.

## மேசியாவைப் பற்றிய அப்போஸ்தலர்களின் உறுதிமொழி

பிலிப்புவில் உள்ள செசரியாவுக்குச் செல்லும் வழியில் இயேசு தம் சீஷர்களிடமிருந்து தாம்தான் கிறிஸ்து என்று ஒப்புக்கொண்ட பிரபலமான காட்சி இதுவாகும். மேலும் கிட்டத்தட்ட மாற்கு சுவிசேஷம் சார்ந்த எல்லா அறிஞர்களும் அது மாற்கு சுவிசேஷத்தின் மையப் பகுதி என்பதை ஒப்புக்கொள்கிறார்கள்.

மாற்கு சுவிசேஷத்தின் முதல் வசனத்தில், “தேவனுடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவைப் பற்றிய சுவிசேஷத்தின் ஆரம்பம்” என்று மாற்கு எழுதினார். இயேசு மேசியாவான ”கிறிஸ்து” ஆவார். ஆனால் அந்த வசனத்திலிருந்து, ”கிறிஸ்து” என்ற வார்த்தை மாற்கு சுவிசேஷத்தில் வேறு எங்கும் வரவில்லை. இயேசுவை கிறிஸ்து என்று மாற்கு சொல்லவில்லை. சீஷர்கள் அவரை கிறிஸ்து என்று அழைத்ததாகவோ அல்லது அவரைக்

கண்டவர்கள் அவர் கிறிஸ்து என்று ஊகித்ததாகவோ அல்லது பிசாசுகள் கிறிஸ்து என்ற வார்த்தையைப் பயன்படுத்தியதாகவோ அவர் தெரிவிக்கவில்லை.

உண்மையில், ஏறக்குறைய இயேசுவை அடையாளம் காண முயற்சித்த அனைவருமே தோல்வியடைந்தார்கள். அவர் ஒரு அதிசயம் செய்பவர், அல்லது ஒரு தீர்க்கதரிசி, அல்லது யோவான் ஸ்நானகன், அல்லது ஒரு பைத்தியம், அல்லது பெயல்செபூல் என்கிற பிசாசு பிடித்தவர் என்று அவர்கள் நினைத்தார்கள். ஆனால் இந்த நேரத்தில், அவர் உண்மையில் யார் என்பதை ஒப்புக்கொள்ளும்படி தம் சீஷர்களை அழுத்த வேண்டிய நேரம் இது என்று இயேசு முடிவு செய்தார். மாற்கு 8:27-29 இல் அவர்களின் உரையாடலைக் கவனியுங்கள்:

> அவர் தம்முடைய சீஷர்களை நோக்கி: ”ஜனங்கள் என்னை யார் என்று சொல்லுகிறார்கள்?” என்று கேட்டார். அதற்கு அவர்கள்: ”சிலர் உம்மை யோவான்ஸ்நானன் என்றும், சிலர் எலியா என்றும், வேறு சிலர் தீர்க்கதரிசிகளில் ஒருவர் என்றும் சொல்லுகிறார்கள்” என்றார்கள். ”அப்பொழுது அவர்: நீங்கள் என்னை யார் என்று சொல்லுகிறீர்கள்?’ என்று கேட்டார். பேதுரு பிரதியுத்தரமாக: ”நீர் கிறிஸ்து” என்றான் (மாற்கு 8:27-29).

8 அதிகாரங்களின் சான்றுகளுக்குப் பிறகு, அப்போஸ்தலர்கள் இறுதியாக இயேசு கிறிஸ்து, மேசியா, தேவனுடைய ராஜ்யத்தைக் கொண்டுவருபவர் என்று தங்கள் நம்பிக்கையை உறுதிப்படுத்தினர்.

அப்போஸ்தலர்கள் மேசியாவை உறுதிப்படுத்திய பிறகு, மாற்கு சுவிசேஷத்தின் நான்காவது பெரிய பகுதி மேசியாவின் உபத்திரவங்களைக் கையாள்கிறது. இந்த பகுதி மத்தேயு 8:31–15:47 வரை நீண்டுள்ளது.

அவருடைய சுவிசேஷத்தின் முதல் பாதியில், இயேசுவின் வல்லமை வாய்ந்த ஊழியம் அவர்தான் கிறிஸ்து என்ற மகிமையான உறுதிமொழிக்கு எப்படி இட்டுச் சென்றது என்பதில் மாற்கு கவனம் செலுத்தினார். ஆனால் இந்த கட்டத்தில், இயேசுவின் மேசியா ஊழியத்தின் வேறுபட்ட அம்சமான ‘எருசலேமில் அவர் பட்ட பாடுகள் மற்றும் மரணம்’ என்பதை மாற்கு வலியுறுத்தத் தொடங்கினார்.

## பாடுபடுகிற மேசியா

மேசியாவின் துன்பத்தைப் பற்றிய மாற்குவின் பதிவு மூன்று முக்கிய பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது, அவரியாவன: தம்முடைய துன்பங்களுக்கும் மரணத்திற்கும் இயேசுவின் சீஷர்களைத் தயார்படுத்துதல், எருசலேமில் யூதத் தலைவர்களுடனான அவரது மோதல், அவரது பாடுகளையும் மரணத்தையும்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

தூண்டுதல், இறுதியாக பாடுகள் மற்றும் மரணத்தின் அனுபவம். மாற்கு 8:31–10:52 இல் அவருடைய ஆயத்தத்தில் தொடங்கி, இந்தப் பிரிவுகள் ஒவ்வொன்றையும் ஆராய்வோம்.

## ஆயத்தம்

இயேசு தனது சீஷர்களைத் தயார்படுத்துவதை விவரிப்பதை மூன்று முக்கிய பகுதிகளாகப் பிரிக்கலாம், ஒவ்வொன்றும் அவருடைய பாடுகள், மரணம் மற்றும் உயிர்த்தெழுதல் ஆகியவற்றை முன்னறிவிப்பதில் தொடங்குகிறது. முதல் பகுதி, மாற்கு 8:31–9:29 இல் இயேசுவை ராஜ்யத்தின் கர்த்தராகக் குறிப்பிடுகிறது.

தேவனுடைய மகிமையான ராஜ்யத்தை பூமிக்குக் கொண்டுவருவதற்கான இயேசுவின் எதிர்பாராத உத்தியின் அறிக்கையுடன் மாற்கு தொடங்கினார் - அதாவது இயேசுவின் பாடுகள், மரணம் மற்றும் உயிர்த்தெழுதல் - இவைகளை மாற்கு 8:31-9:1 இல் விளக்கினார். இந்தப் பகுதியில் அவருடைய போதனைகள் முழுவதும், இயேசு தம்முடைய பாடுகளைப் பற்றிப் பேசினார், மேலும் அவருடைய சுவிசேஷ ஊழியத்தைத் தொடரும்போது அவர்களும் துன்பப்பட வேண்டியிருக்கும் என்று அவருடைய சீஷர்களை எச்சரித்தார்.

இதற்குப் பிறகு, மாற்கு 9:2-13 இல் உள்ள மறுரூபமாகுதல் என்று பொதுவாக அறியப்படும் ஒரு நிகழ்வைக் குறிப்பிடுவதன் மூலம் இயேசுவின் தனித்துவமான அதிகாரத்தைப் பற்றி மாற்கு பேசினார். இந்த நிகழ்வில், இயேசுவின் மகிமை பேதுரு, யாக்கோபு மற்றும் யோவான் ஆகியோருக்குத் தெரியும். மோசேயும் எலியாவும் இயேசுவுடன் தோன்றினர், இது இயேசு நியாயப்பிரமாணம் மற்றும் பழைய ஏற்பாட்டின் தீர்க்கதரிசிகளின் போதனைகளை உறுதிசெய்து தொடர்ந்தார் என்பதைக் குறிக்கிறது. ஆனால் மோசே மற்றும் எலியாவை விட இயேசுவை மதிக்கவும் அவருக்கு கீழ்ப்படியவும் தேவன் சீஷர்களுக்கு கட்டளையிட்டார். இந்த நிகழ்வு இயேசுவின் சீஷர்களை எல்லாவற்றுக்கும் மேலாக இயேசுவுக்கு விசுவாசமாக இருக்க நினைவூட்டி, இயேசுவிடம் அவர்கள் விசுவாசமாக இருத்தல் என்பது தேவனுக்கும் அவருடைய பழைய ஏற்பாட்டு வெளிப்பாட்டிற்கும் விசுவாசமாக இருப்பதன் தூய்மையான வடிவம் என்பதை ஊக்குவிப்பதன் மூலம் அவர்களை தயார்படுத்தியது.

இறுதியாக, மாற்கு 9:14-29 இல் பிசாசுகளைக் கட்டுப்படுத்தும் திறனை வெளிப்படுத்துவதன் மூலம் இயேசுவின் தனித்துவமான வல்லமையின் மீது கவனம் செலுத்தினார். இயேசுவின் சீஷர்களால் ஒரு கடினமான பிசாசை விரட்ட முடியவில்லை, மேலும் அத்தகைய பிசாசுகளை ஜெபத்தின் மூலம் மட்டுமே துரத்த முடியும் என்று இயேசு கற்பித்தார். ஆனால் ஒரு எளிய கட்டளையின் மூலம் இயேசுவால் பிசாசுகளை துரத்த முடிந்தது. இந்த வழியில், அவர் மற்ற அனைவரையும் விட தான் உயர்ந்தவர் என்பதைக் காட்டினார்,



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

மேலும் தனது சித்தத்தை நிறைவேற்ற வரம்பற்ற வல்லமையைக் கொண்டிருப்பதை தனது சீஷர்களுக்கு உறுதி செய்தார். அவர் கொல்லப்பட்டபோது அவர்கள் அனுபவிக்கும் சந்தேகங்கள் மற்றும் அச்சங்கள் இருந்தபோதும், அவருடைய வல்லமை அவர்மீது உள்ள நம்பிக்கையில் உறுதியாக நிற்க அவர்களை ஊக்கப்படுத்தியிருக்க வேண்டும்.

இயேசுவின் பாடுகள், மரணம் மற்றும் உயிர்த்தெழுதலுக்கான ஆயத்தம் பற்றிய மாற்குவின் இரண்டாம் பகுதி தேவனுடைய ராஜ்யத்தின் மதிப்புகளைப் பற்றியது, மேலும் இது மாற்கு 9:30-10:31 இல் காணப்படுகிறது.

எருசலேமுக்கு போவதற்கான இயேசுவின் ஆயத்தத்தைப் பற்றிய மாற்குவின் ஒவ்வொரு பகுதியைப் போலவே, இது இயேசுவின் பாடுகள், மரணம் மற்றும் உயிர்த்தெழுதல் ஆகியவற்றை முன்னறிவிப்பதில் தொடங்குகிறது. அந்த நிகழ்வுகளுக்கான சீஷர்களின் ஆயத்தத்தை மாற்கு இன்னும் வலியுறுத்திக் கொண்டிருந்தார் என்பதை பார்க்க இது நமக்கு உதவுகிறது. இந்த முன்னறிவிப்புக்குப் பிறகு, மனிதர்களைப் போலவே தேவன் விஷயங்களை நியாயந்தீர்ப்பதில்லை என்பதை விளக்கி இயேசு தம் சீஷர்களைத் தயார்படுத்தினார். எனவே, அவர்கள் என்ன கஷ்டப்பட்டாலும், அவர்களுக்கு என்ன விசித்திரமான விஷயங்கள் நடந்தாலும், அவர்கள் உலகம் செய்யும் விதத்தில் நியாயந்தீர்க்க முடியாது. மாறாக, தேவன் தம்முடைய ராஜ்யத்தைக் கொண்டுவரவும் இயேசுவை மகிமைப்படுத்தவும் இந்த நிகழ்வுகளைப் பயன்படுத்துகிறார் என்பதை அவர்கள் உறுதிப்படுத்த வேண்டும்.

மாற்கு 9:30-31 இல் இயேசுவின் முன்னறிவிப்புக்குப் பிறகு, ராஜ்யத்தின் மதிப்புகள் பற்றிய இயேசுவின் போதனைகளை மாற்கு அறிக்கை செய்தார். இந்த பகுதியில், வாழ்க்கையின் ஐந்து பகுதிகளில் உலக உள்ளுணர்வுகள் தேவனுடைய சத்தியத்துடன் எவ்வாறு மோதுகின்றன என்பதை இயேசு நிரூபித்தார். முதலாவதாக, இயேசு மாற்கு 9:32-42 இல் கனத்தைப் பற்றி பேசினார், தேவனுடைய ராஜ்யத்தில் மிகவும் மதிக்கப்படுபவர்கள் இந்த வாழ்க்கையில் குறைவாக மதிக்கப்படுபவர்கள் என்று சுட்டிக்காட்டினார்.

இரண்டாவதாக, இயேசு மாற்கு 9:43-50 இல் மதிப்பைப் பற்றி பேசினார். குறிப்பாக, இந்த வாழ்க்கையில் அந்த விஷயங்கள் எவ்வளவு மதிப்புமிக்கதாகத் தோன்றினாலும், தேவனுடைய ராஜ்யத்தின் இலக்குகளைத் தொடர தடையாக இருக்கும் எதையும் அகற்றும்படி அவர் தம்மைப் பின்பற்றுபவர்களுக்கு அறிவுறுத்தினார்.

மூன்றாவதாக, இயேசு மாற்கு 10:1-12 இல் திருமணத்தைப் பற்றி பேசினார். மனித சட்டம் உள்ளுணர்வாக மிகவும் நியாயமானது என்று தோன்றினாலும் கூட, திருமணம் மற்றும் விவாகரத்து ஆகியவை இறுதியில் மனித சட்டத்தை விட தேவனின் சட்டத்தின்படி கணக்கிடப்பட வேண்டும்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

நான்காவதாக, இயேசு மீண்டும் சிறு பிள்ளைகளைப் பற்றி மாற்கு 10:13-16 இல் பேசினார். இயேசு முன்பு கூறியது இருந்தபோதிலும், அவருடைய சீஷர்கள் குழந்தைகளை அவரை அணுகவிடாமல் தடுத்தனர். அதற்கு பதிலளிக்கும் விதமாக, தேவன் ஏற்கனவே இந்த குழந்தைகளுக்கு ராஜ்யத்தை கொடுத்தார் என்று இயேசு அவர்களுக்கு நினைவூட்டினார், அதனால் குழந்தைகளை மறுப்பதன் மூலம் சீஷர்கள் தேவனை எதிர்க்கிறார்கள்.

ஐந்தாவது, இயேசு மாற்கு 10:17-31 இல் செல்வத்தைப் பற்றி பேசினார். பணத்தின் மீதான நாட்டம் தேவனுடைய ராஜ்யத்தின் மதிப்புகளைத் தழுவுவதைத் தடுக்கிறது என்று இயேசு சொன்னபோது அதிர்ச்சியடைந்த பணக்கார இளம் ஆட்சியாளரைப் பற்றிய நன்கு அறியப்பட்ட கதை இது.

இந்த போதனையின் ஒவ்வொரு பிரிவுகளிலும், தேவனுடைய ராஜ்யத்தின் மதிப்புகளை இயேசு விளக்கினார், இதனால் அவருடைய துன்புறுத்தப்பட்ட மரணத்தை ஏற்றுக்கொள்வதற்கு அவருடைய சீஷர்கள் சிறப்பாக தயாராக இருப்பார்கள், அதே போல் அவர்கள் தம்மைப் பின்பற்றுபவர்களாக அவர்கள் தாங்க வேண்டிய கஷ்டங்களையும் ஏற்றுக்கொள்கிறார்கள்.

எருசலேமுக்கு செல்வதற்கான இயேசுவின் ஆயத்தத்தைக் குறித்த மாற்குவின் மூன்றாம் பகுதி, மாற்கு 10:32-52 இல் தேவனுடைய ராஜ்யத்தில் தலைமைத்துவத்தைப் பற்றி பேசுகிறது. மாற்கு 10:32-34 இல் அவருடைய பாடு, மரணம் மற்றும் உயிர்த்தெழுதல் ஆகியவற்றை முன்னறிவித்த பிறகு, இயேசு ராஜ்யத்தில் தலைமைத்துவ கேள்வியை மூன்று பகுதிகளாகக் கூறினார். முதலாவதாக, மாற்கு 10:35-40 இல் யாக்கோபும் யோவானும் அவருடைய துன்பத்தில் பங்குகொள்ள வேண்டும் என்று அவர் கூறினார். அவர்கள் ஒரே பாத்திரத்தில் குடித்து, அதே ஞானஸ்நானம் பெறுவார்கள். இந்த உருவகங்கள், இயேசுவின் சீஷர்கள் அவருக்குச் செய்த சேவையின் காரணமாக அவருடைய துன்பங்களில் பங்குகொள்ள வேண்டியிருக்கும் என்பதை மறைமுகமாகக் குறிப்பிடுகின்றன.

இரண்டாவதாக, மாற்கு 10:40-45 இல் இயேசு ராஜ்யத்தில் இருக்கிற தலைமைத்துவத்தை சேவை என்று விவரித்தார். ராஜ்யத்தில் உள்ள மதிப்புகளைப் பற்றி பேசும்போது அவர் இந்த யோசனையை இரண்டு முறை குறிப்பிட்டார். ஆனால் அதற்கான காரணத்தை அவர் விளக்கியது இதுவே முதல் முறை. கிறிஸ்தவத் தலைவர்கள் ஊழியக்காரர்களாக இருக்க வேண்டும், ஏனென்றால் அவர்கள் கிறிஸ்துவின் மாதிரியைப் பின்பற்றுகிறார்கள்.

மூன்றாவதாக, குருடனான பர்திமேயுவிடம் இரக்கம் காட்டுவதன் மூலம், தலைமைத்துவமும் சேவையும் ஒன்றாய் இருக்க வேண்டும் என்று இயேசு நிரூபித்தார். ஊழியம் செய்யும் தலைவர்கள் ராஜ்யத்தில் அதிக வெகுமதியைப் பெற வேண்டும் என்பதற்காக தியாகங்களைச் செய்யக்கூடாது, ஆனால் அவர்கள் சேவை செய்பவர்களிடம் உண்மையிலேயே இரக்கம் காட்டுகிறவர்களாக இருக்க வேண்டும்.

> கிறிஸ்தவத் தலைவர்கள் வித்தியாசமாக இருக்கவும், தங்கள் மக்களுக்கு ஊழியராக இருக்கவும் இயேசு அழைக்கிறார். இந்த அற்புதமான வேத பகுதியில், மாற்கு சுவிசேஷம் 10:45 இல், சுற்றியுள்ள கிரேக்க-ரோம கலாச்சாரத்திலிருந்து வேறுபட்டதாக தம்மைப் பின்பற்றுகிறவர்களின் தலைமைத்துவம் இருக்க வேண்டும் என்று இயேசு வலியுறுத்துகிறார். மாற்குவின் நாளில் தலைமைத்துவத்தின் முன்னுதாரணமானது ரோமர்கள் தங்கள் மக்கள் மீது அதிகாரம் மற்றும் மேலாதிக்கத்தை வெளிப்படுத்துவதாகும். மேலும் இயேசு, "[நான்] ஊழியம் கொள்ளும்படி வராமல் ஊழியம் செய்யவும் அநேகரை மீட்கும் பொருளாக ஜீவனைக் கொடுக்கவும் வந்தேன்" என்றார். எனவே, இயேசு, தம்மைப் பின்பற்றுபவர்களுக்கு அவருடைய தலைமைத்துவ வகையைப் பின்பற்றவும், ஒரு ஊழியக்காரனாக வழிநடத்தவும், மாற்குவின் நாளில் மிகவும் பரவலாக இருந்த ரோம ஆதிக்கத்தின் முன்னுதாரணத்தைப் பின்பற்ற வேண்டாம் என்றும் கட்டளையிடுகிறார்.
>
> Dr. கிரிகோரி ஆர். பெர்ரி

தேவனுடைய ராஜ்யத்தில் உலகத்தின் தலைமைத்துவ மாதிரியை மாதிரியாகக் கொள்ள முடியாது என்று இயேசு வலியுறுத்தினார். மாறாக, அது பாடுகளின் அவருடைய சொந்த முன்மாதிரியைப் பின்பற்ற வேண்டும்.

சில வழிகளில், ரோமில் உள்ள மாற்குவின் வாசகர்களுக்கு இது வருத்தமளிக்கும் செய்தியாக இருந்திருக்க வேண்டும். அவர்களின் துன்பம் அசாதாரணமானது, விரைவில் கடந்து போகும் என்று அவர்களுக்கு உறுதியளிக்கும் பதிலாக, கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்களுக்கு துன்பமே தரநிலை என்று மாற்குவின் சுவிசேஷம் அவர்களுக்கு உறுதியளித்தது. ஆனால் அதே நேரத்தில், இந்த செய்தி ஒரு ஊக்கமளிக்கும் ஒன்றாகவும் இருந்திருக்க வேண்டும். சபையின் பாடுகள் கிறிஸ்துவின் வெற்றிக்கான திட்டத்தின் ஒரு பகுதியாகும். ரோமர் 8:18 இல் பவுல் எழுதியது போல:

> இக்காலத்துப் பாடுகள் இனி நம்மிடத்தில் வெளிப்படும் மகிமைக்கு ஒப்பிடத்தக்கவைகள் அல்லவென்று எண்ணுகிறேன் (ரோமர் 8:18).

இயேசு தம் சீஷர்களைத் தயார்படுத்தியதைப் பற்றி கூறிய பிறகு, மாற்கு 11:1-13:37 இல் யூதத் தலைவர்களுடன் இயேசுவின் மோதலைப் பற்றி எழுதினார்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

## எதிர்கொள்ளுதல்

மாற்கு கூறுகிற எதிர்கொள்ளுதலைப் பற்றிய பதிவு இரண்டு முக்கிய பகுதிகளாக பிரிக்கப்பட்டுள்ளது: முதலாவதாக, 11:1–12:44 இல் உள்ள எதிர்ப்பைக் குறித்த கதைகள். இரண்டாவதாக, 13:1-37 இல் உள்ள ஒலிவ மலை சொற்பொழிவு.

அவருடைய சுவிசேஷத்தின் இந்தப் பகுதி முழுவதும், யூதத் தலைவர்களை இயேசு எப்படி கோபமூட்டினார் என்பதை மாற்கு விவரித்தார். மாற்கு சுவிசேஷத்தின் முந்தைய பகுதிகளில், இயேசு யூதத் தலைவர்களுடன் எதிர்கொள்ளுதலை எதிர்பார்க்கவில்லை; அவரது இரக்கத்திற்கு மக்கள் எதிர்ப்பு தெரிவித்ததால் அவர் முதன்மையாக எதிர்ப்பை எதிர்கொண்டார். ஆனால் இந்த பகுதியில், இயேசு சிலுவையில் அறையப்படுவதற்காக தீவிரமாக எதிர்ப்பை நாடினார் என்று மாற்கு தெரிவித்தார்.

முதலாவதாக, மாற்கு 11:1-11 இல் எருசலேமுக்குள் இயேசுவின் வெற்றிகரமான நுழைவு அவரை மேசியா மற்றும் இஸ்ரவேலின் உண்மையான ராஜா என்று பகிரங்கமாக அறிவித்தது.

அடுத்ததாக, மாற்கு 11:12-14, 20-25 இல் உள்ள பட்டுப்போன அத்தி மரமாக இஸ்ரவேலைக் கண்டனம் செய்ததும், 15-19 வசனங்களில் அவருடைய ஆலயத்தைச் சுத்தப்படுத்துதலும், யூதத் தலைவர்களின் தார்மீக நிலையை நேரடியாகத் தாக்கி, மக்கள் மீதான அவர்களின் அதிகாரத்தையும் செல்வாக்கையும் குறைமதிப்பிற்கு உட்படுத்தியது.

மாற்கு 11:27-12:12ல் உள்ள பிரதான ஆசாரியர்கள், நியாயப்பிரமாண ஆசிரியர்கள் மற்றும் மூப்பர்களுடனும் இயேசு வாதிட்டார். அவருடைய அதிகாரத்திற்கு அவர்கள் அளித்த சவாலை முறியடித்த பிறகு, யூதத் தலைமை தேவனுக்கு எதிரான கலகம் என்று குற்றம் சாட்டி திராட்சைத் தோட்டக் குத்தகைதாரர்களின் உவமையைச் சொன்னார். இந்த கட்டத்தில், அவர்கள் அவரைக் கைது செய்யத் தயாராக இருந்தனர், ஆனால் கூட்டத்தைப் பற்றிய அவர்களின் பயம் அவர்களை பயப்படுத்தியது.

அடுத்து, இயேசு மாற்கு 12:13-17 இல் ரோம வரிகள் குறித்து பரிசேயர்கள் மற்றும் ஏரோதியர்களுடன் வாதிட்டார்.

இதற்குப் பிறகு, மாற்கு 12:18-27 இல், உயிர்த்தெழுதலைப் பற்றி வேதம் கற்பிப்பதை சதுசேயர்கள் தவறாகப் புரிந்துகொண்டார்கள் என்பதை இயேசு நிரூபித்தார்.

இறுதியாக, அவர் மாற்கு 12:28-44 இல் உள்ள நியாயப்பிரமாண ஆசிரியர்களைத் தாக்கினார். அவர்களில் சிலருக்குச் நியாயப்பிரமாணம் தெரியும் என்று இயேசு ஒப்புக்கொண்டாலும், ஒட்டுமொத்தமாக அவர்கள் பேராசையினாலும் உலக லட்சியத்தினாலும் கட்டுப்படுத்தப்பட்டதாக அவர் வலியுறுத்தினார்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

ஏதோ ஒரு வகையில், ஆசாரியர்கள், நியாயப்பிரமாண போதகர்கள், பரிசேயர்கள், ஏரோதியர்கள் மற்றும் சதுசேயர்கள் ஆகிய செல்வாக்கு மிக்க யூதர்களின் ஒவ்வொரு தரப்பினருடனும் இயேசு பகிரங்க எதிர்கொள்ளுதலை மேற்கொண்டார். ஒவ்வொரு குழுவும் அவரை வெறுப்பதற்கும், அவரது மரணத்தைத் தேடுவதற்கும் அவர்களுக்கு ஒரு காரணத்தைக் கொடுத்தார், அவர்கள் தன்னைக் கொல்லத் தூண்டினார்.

யூதத் தலைமையுடனான இயேசுவின் எதிர்கொள்ளுதலின் இரண்டாவது முக்கியப் பகுதி, இயேசுவுக்கும் அவருடைய சீஷர்களுக்கும் இடையேயான உரையாடலாகும். இந்த சொற்பொழிவு ஒலிவ மலையில் நடந்ததால் பொதுவாக ஒலிவ மலை சொற்பொழிவு என்று அழைக்கப்படுகிறது. பரவலாகப் பேசினால், இது மாற்கு 13:1-37 இல் வருகிறது. இந்த பகுதியில், இயேசு தம் சீஷர்கள் எதிர்காலத்தில் அவர்கள் எதிர்கொள்ளும் கஷ்டங்களைப் பற்றி எச்சரித்தார், அதனால் அவர்கள் பாதுகாவலர்களால் பிடிபடாமல் இருக்க முடியும். அவரைப் பற்றி சாட்சியமளிக்க அவர்கள் ஆட்சியாளர்களுக்கு முன் இழுக்கப்படுவார்கள் என்று அவர்களுக்குக் கற்பித்தார். அவர்கள் அடிக்கப்படுவார்கள். அவர்கள் வெறுக்கப்படுவார்கள். அவர்களின் குடும்பங்கள் சிதைந்துவிடும். அவர்கள் இயற்கை பேரழிவுகளையும் பெரும் இன்னல்களையும் சந்திக்க நேரிடும். உண்மையில், அவர் திரும்பும் வரை உபத்திரவமும் துன்பமும் சபையின் குணாதிசயமாக இருக்கும் என்பதை அவர் தெளிவுபடுத்தினார்.

ஆனால் இயேசு தம் சீஷர்களுக்கு தேவனுடைய ராஜ்யத்தின் இறுதி வெற்றியை உறுதியளிப்பதன் மூலம் அவர்களுக்கு மிகுந்த நம்பிக்கையை அளித்தார். உதாரணமாக, மாற்கு 13:26-27 இல், அவர்கள் தமக்கு உண்மையுள்ளவர்களாக இருக்கும் வரை, அவர் தம்முடைய ராஜ்யத்தை வல்லமையிலும் மகிமையிலும் முழுமையாக்கும்போது அவர்களுக்குக் கிடைக்கும் மாபெரும் வெற்றியை அவர்களுக்கு நினைவுபடுத்தினார்.

கணிக்கத்தக்க வகையில், இயேசு தம் சீஷர்களிடம் சொன்ன வார்த்தைகள் யூதத் தலைவர்களை அவருக்கு எதிராகத் தூண்டிக்கொண்டே இருந்தன. உதாரணமாக, மாற்கு 13:1-2 இல், ஆலயம் அழிக்கப்படும் என்று இயேசு தம் சீஷர்களுக்குக் கற்பித்தார். ஆனால் மாற்கு 14:58 இல் நாம் பார்க்கிறபடி, அவருடைய வார்த்தைகள் கேட்கப்பட்டு தவறாகப் புரிந்துகொள்ளப்பட்டன, அதனால் அவருடைய விசாரணையின் போது அவர் ஆலயத்தை அழிக்க திட்டமிட்டதாக பொய்யாகக் குற்றம் சாட்டப்பட்டார்.

இயேசுவின் சீஷர்களைத் தயார்படுத்துதல் மற்றும் எருசலேமில் யூதத் தலைவர்களுடன் எதிர்கொள்ளுதல் ஆகியவற்றின் அடிப்படையில் மேசியாவின் பாடுகளைப் பற்றிய மாற்குவின் கணக்கைப் பார்த்தோம், மாற்கு 14:1–15:47 இல் இயேசுவின் பாடு மற்றும் மரணத்தின் அனுபவத்திற்குத் திரும்ப நாம் தயாராக இருக்கிறோம்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

## அனுபவம்

இயேசுவின் பாடு மற்றும் மரணத்தின் உண்மையான அனுபவத்தின் பதிவு யூதாஸின் காட்டிக்கொடுத்தல், பேதுரு இயேசுவை மறுத்தலித்ததைப் பற்றிய கணிப்பு, சீஷர்கள் கெத்செமனேயில் இயேசுவைப் பார்த்து ஜெபிக்கத் தவறியது, இயேசு கைது செய்யப்படுதல், இரண்டு சோதனைகள் மற்றும் பேதுருவின் மறுதலிப்பு, இறுதியாக இயேசு சிலுவையில் அறையப்பட்டு அடக்கம் செய்யப்படுதல் ஆகிய நன்கு அறியப்பட்ட நிகழ்வுகளால் நிரம்பியுள்ளது.

இவை இருண்ட, அச்சுறுத்தும் அதிகாரங்கள் ஆகும். மனநிலை தீங்கை முன்னறிவிக்கிறது. யூதத் தலைவர்களின் தோல்வி, மக்கள் கூட்டத்தின் தோல்வி, யூத மற்றும் ரோம சட்ட அமைப்புகளின் தோல்வி மற்றும் சீஷர்களின் தோல்வி என அவர்கள் தோல்வியால் நிறைந்துள்ளனர். துன்புறுத்தப்பட்ட ரோம சபைக்கு எழுதுகையில், கிறிஸ்தவத்தின் எருசலேமினுடைய பிரசவ வேதனை ரோமில் இருந்ததைப் போலவே கடுமையானதாக இருந்தது என்பதை மாற்கு தெளிவுபடுத்தினார்.

இயேசுவின் பாடுகள் மற்றும் மரண அனுபவத்தைப் பற்றிய மாற்குவின் பதிவை, மாற்கு 14:1-11 இல் அடக்கத்திற்காக அபிஷேகம் செய்ததில் தொடங்கி நான்கு முக்கிய பகுதிகளாகப் பிரிக்கலாம். இந்த பகுதியில், மாற்கு சில முக்கியமான விவரங்களைப் பதிவு செய்துள்ளார். முதலாவதாக, பிரதான ஆசாரியர்களும், நியாயப்பிரமாண போதகர்களும் இயேசுவைக் கைதுசெய்து கொல்ல வழி தேடுகிறார்கள் என்று அவர் கூறினார். இரண்டாவதாக, ஒரு ஸ்திரீ மிகவும் விலையுயர்ந்த வாசனை திரவியத்தால் இயேசுவை அபிஷேகம் செய்தாள், மேலும் அவர் அடக்கத்திற்காக அவரை அபிஷேகம் செய்ததாகக் கூறினாள். இந்த வழியில், அவர் உடனடியாக எதிர்காலத்தில் கொல்லப்படுவார் என்று இயேசு சுட்டிக்காட்டினார். மூன்றாவதாக, யூதாஸ் ஸ்காரியோத்து இயேசுவை பிரதான ஆசாரியர்களுக்கும் நியாயப்பிரமாண போதகர்களுக்கும் காட்டிக்கொடுக்க சதி செய்யத் தொடங்கினான். இயேசுவின் பாடுகள் மற்றும் மரணம் பற்றிய கதையின் திருப்புமுனையாக இதை நாம் பார்க்கலாம். அவரது மரணம் ஒரு தெளிவற்ற அச்சுறுத்தல் அல்ல, ஆனால் உடனடி உண்மையாகும்.

அடுத்து, மாற்கு 14:12-42 இல் இயேசு தனது சீஷர்களுடன் கடைசியாகச் சென்ற நேரங்களைப் பற்றிக் கூறினார். மாற்கு 14:12-31 இல் இயேசுவும் அவருடைய சீஷர்களும் கடைசி இராப்போஜனத்திற்குத் தயாராகி உண்பதில் மாற்குவின் கதையின் இந்தப் பகுதி தொடங்குகிறது. இந்த போஜன பந்தியின் போதுதான் இயேசு கர்த்தருடைய இராப்போஜனம் என்ற கிறிஸ்தவ கட்டளையை நிறுவினார். அவர் தனது பாடு மற்றும் மரணத்தின் மூலம் அவர்களுக்கு உதவ சில இறுதி ஆயத்தங்களை தனது சீஷர்களுக்கு வழங்கவும் இந்த நேரத்தை பயன்படுத்தினார். உதாரணமாக, அவர்கள்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

அனைவரும் தம்மிடமிருந்து விலகிச் செல்வார்கள் என்று அவர் அவர்களை எச்சரித்தார், மேலும் அவர் பேதுருவின் மறுதலிப்புகளை முன்னறிவித்தார்.

மாற்கு 14:32-42 இல் நாம் பார்க்கிறபடி, கடைசி இராப்போஜனத்திற்குப் பிறகு, அந்தக் குழு கெத்செமனே தோட்டத்திற்குச் சென்றது. இந்த பத்தியின் படி, இயேசு ஆழ்ந்த மன உளைச்சலுக்கு ஆளானார், மேலும் அவர் மரணம் அடையும் அளவிற்கு துக்கத்தில் மூழ்கினார். அவர் சிலுவையில் அறையப்படுவதை எதிர்பார்த்து மிகவும் வேதனைப்பட்டார் என்பது தெளிவாகிறது.

இயேசுவின் பாடுகள் மற்றும் மரணத்தின் அனுபவத்தைப் பற்றிய மாற்குவின் அறிக்கையின் மூன்றாவது பகுதி, மாற்கு 14:43-15:15 இல் இயேசுவின் கைது மற்றும் சோதனைகளின் விவரமாகும். மாற்கு 14:43-52 இல் இயேசுவின் சீஷனான யூதாஸ் ஸ்காரியோத்து காட்டிக்கொடுத்ததில் இந்தப் பகுதி தொடங்குகிறது. இது மாற்கு 14:53-65 இல் யூத தலைமையின் முன் அவரது விசாரணையுடன் தொடர்கிறது. அடுத்து, மாற்கு 14:66-72 இல் இயேசுவை அறிந்திருந்தும் பின்பற்றியும் பேதுரு அவரை மறுதலித்த அறிக்கையைப் படிக்கிறோம். இறுதியாக, மாற்கு 15:1-15 இல் ரோம கவர்னரான பிலாத்துவின் முன் அவரது விசாரணையைப் பற்றி வாசிக்கிறோம். இந்த அவமானகரமான அனுபவங்களின் முடிவில், இயேசு சாட்டையால் அடிக்கப்பட்டார், பின்னர் சிலுவையில் அறையப்படுவதற்காக ரோம போர் சேவகர்களிடம் ஒப்படைக்கப்பட்டார்.

இயேசுவின் பாடுகள் மற்றும் மரணத்தின் அனுபவத்தைப் பற்றிய மாற்குவின் அறிக்கையின் நான்காவது பகுதி, மாற்கு 15:16-47 இல் இயேசு சிலுவையில் அறையப்பட்டதை உள்ளடக்கியது. இயேசு ஒரு சாதாரண குற்றவாளியைப் போல அடிபட்டு, அவமானப்படுத்தப்பட்டு, சிலுவையில் அறையப்பட்டு கொல்லப்படுவதற்காக ரோம வீரர்களிடம் ஒப்படைக்கப்படுவதில் இருந்து தொடங்குகிறது. மனித கண்ணோட்டத்தில், அவரது துன்பம் மிகப்பெரியது.

ரோமர்களின் கைகளில் இயேசு இந்தத் துன்புறுத்தலுக்கு ஆளானார் என்ற உண்மை, இந்த நிகழ்வுகளை மாற்குவின் அசல் பார்வையாளர்களான ரோம கிறிஸ்தவர்களுடன் வலுவாக இணைத்திருக்கும். அவர்கள் தங்கள் கர்த்தரின் துன்பங்களுக்கும் தங்களின் சொந்த துன்பங்களுக்கும் இடையே உள்ள ஒற்றுமைகளை விரைவாகக் கண்டிருப்பார்கள், மேலும் அவர்கள் தங்கள் சொந்த சிரமங்களைத் தாங்கிக் கொள்வதற்கு அவருடைய தைரியத்தை ஒரு உத்வேகமாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

ஆனால் இயேசுவின் பாடுகளின் மிக மோசமான பகுதி என்னவென்றால், உலகத்தின் பாவம் அவர் மீது சுமத்தப்பட்டது, மேலும் அவர் பிதாவாகிய தேவனின் கோபத்திற்கு ஆளானார். இறுதியாக, அவர் மரித்த பிறகு, அவர் ஒரு கல்லறையில் வைக்கப்பட்டார், அவரது உடல் அடக்கம் செய்யத் தயாராக இல்லை, ஏனெனில் ஒய்வுநாளுக்கு முன் நேரம் இல்லை.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

இப்போது நாம் மேசியாவின் அறிவிப்பு, மேசியாவின் வல்லமை, மேசியாவைப் பற்றிய அப்போஸ்தலர்களின் உறுதிமொழி மற்றும் மேசியாவின் பாடு ஆகியவற்றைப் பார்த்தோம், இறுதியாக மாற்கு 16:1-8 இல் உள்ள மேசியாவின் வெற்றியைப் பற்றிப் பார்க்க திரும்புவதற்கு நாம் தயாராக இருக்கிறோம். இதில் மாற்கு நமது கர்த்தருடைய உயிர்த்தெழுதலை விவரித்தார்.

## மேசியாவின் வெற்றி

இந்த பகுதியின் உள்ளடக்கத்திற்கு வருவதற்கு முன், மாற்கு சுவிசேஷம் 16:8 இல் முடிவடைகிறது என்று ஏன் சொல்கிறோம் என்பதை பார்க்க வேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக, நமது வேதாகமங்களில் பெரும்பாலானவை இந்த அதிகாரத்தில் இருபது வசனங்களைக் கொண்டுள்ளன. ஆனால் இந்த வேதாகமங்களில் பெரும்பாலானவை மாற்கு சுவிசேஷத்தின் மிகவும் நம்பகமான பழங்கால கையெழுத்துப் பிரதிகளில் 9-20 வசனங்கள் இல்லை என்று குறிப்புகள் உள்ளன.

மாற்குவின் பண்டைய கிரேக்க கையெழுத்துப் பிரதிகளில், மூன்று வெவ்வேறு முடிவுகள் உள்ளன. ஒரு சில கையெழுத்துப் பிரதிகள் வசனம் 8 இல் முடிவடைகின்றன. இரண்டாவது குழு கையெழுத்துப் பிரதிகள் வசனம் 20 இல் முடிகின்றன. மூன்றாவது குழு பிரதிகளில் 8 ஆம் வசனத்திற்குப் பிறகு இரண்டு வாக்கியங்கள் வருகின்றன.

அனைத்து ஆதாரங்களையும் கவனமாக மதிப்பீடு செய்ததன் மூலம், பெரும்பாலான அறிஞர்கள் மாற்கு தனது சுவிசேஷத்தை வசனம் 8 உடன் முடித்தார் என்று முடிவு செய்தனர். மிகத் தொன்மையான மற்றும் மிக முக்கியமான கையெழுத்துப் பிரதி மரபுகள், அசலாக குறுகிய முடிவை ஆதரிக்கின்றன.

"அவர்கள் பயந்தார்கள்" என்ற வாக்கியத்துடன் மாற்கு சுவிசேஷத்தை முடித்தார் என்பதை ஒரு எழுத்தாளர் சங்கடமாக உணர்ந்ததால் மற்ற இரண்டு வாக்கியங்களும் சேர்க்கப்பட்டதாக பல அறிஞர்கள் நம்புகிறார்கள். ஆனால் இந்த எழுத்தாளரின் அசௌகரியம் ஆதாரமற்றது. உண்மையில், பயம், பிரமிப்பு மற்றும் திகைப்பு ஆகியவற்றின் கருப்பொருள் இந்த சுவிசேஷம் முழுவதும் ஓடுகிறது. இந்த காரணத்திற்காக, இந்த குறிப்பிட்ட சுவிசேஷத்தை முடிவுக்கு கொண்டுவர பயத்தின் முக்கியத்துவமே மிகவும் பொருத்தமான வழியாகும். உண்மையில், இது மாற்குவின் அசல் வாசகர்களின் அனுபவங்களுடனும் நன்றாகப் பொருந்துகிறது. இயேசுவின் உயிர்த்தெழுதலுக்குப் பிறகு அவர்கள் உபத்திரவத்தை எதிர்கொண்டபோது, இயேசுவின் ஆரம்பகால சீஷர்களும் பயத்தை அனுபவித்ததை அறிந்து அவர்கள் நிச்சயமாக ஆறுதல் அடைந்தார்கள்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

இப்போது மாற்கு 16:1-8 இல் உள்ள இயேசுவின் உயிர்த்தெழுதலைப் பற்றிய விவரத்திற்கு வருவோம். மாற்குவின் உயிர்த்தெழுதல் பற்றிய விவரங்கள் மற்ற சுவிசேஷங்களில் உள்ள விவரங்களை விட சிறியது, ஆனால் இந்த சுருக்கமானது இந்த சுவிசேஷத்தின் சுருக்க விவரத்திற்கு ஏற்றவாறு உள்ளது. சுவிசேஷத்தைத் திறந்த மேசியாவின் அறிவிப்பும் மிகக் குறுகியதாக இருந்தது, மேலும் சுவிசேஷத்தின் மையப்பகுதியாக இருக்கும் மேசியாவைப் பற்றிய அப்போஸ்தலர்களின் உறுதிமொழியும் அப்படியே இருந்தது.

மேசியாவின் வெற்றியைப் பற்றிய இந்த பகுதி, இயேசு மரித்து அடக்கம் செய்யப்பட்ட மூன்றாம் நாளில் அவருடைய சரீரத்திற்கு அபிஷேகம் செய்வதற்காக அவருடைய கல்லறைக்கு வந்த ஸ்திரீகளிலிருந்து தொடங்குகிறது. ஒரு தேவதூதர் அவர்களை சந்தித்தார், அவருடைய செய்தி தெளிவாகவும் நேரடியாகவும் இருந்தது. இயேசு தம் ஊழியத்தில் பலமுறை முன்னறிவித்தபடியே மரணத்தை வென்று உயிர்த்தெழுந்தார். மாற்கு 16:6-8 இல் உள்ள சுவிசேஷத்தின் முடிவைக் கவனியுங்கள்:

> ”பயப்படாதிருங்கள்,” “சிலுவையில் அறையப்பட்ட நசரேயனாகிய இயேசுவைத் தேடுகிறீர்கள்; அவர் உயிர்த்தெழுந்தார்! அவர் இங்கேயில்லை. இதோ, அவரை வைத்த இடம்….” என்று தேவதூதன் கூறினான். நடுக்கமும் திகிலும் அவர்களைப் பிடித்தபடியால், அவர்கள் சீக்கிரமாய் வெளியே வந்து, கல்லறையை விட்டு ஓடினார்கள். அவர்கள் பயந்திருந்தபடியினால் ஒருவருக்கும் ஒன்றும் சொல்லாமற்போனார்கள் (மாற்கு 16:6-8).

மாற்குவினுடைய கதையின் பின்னணியில் ஸ்திரீகளின் பதில் முற்றிலும் யூகிக்கக்கூடியது: அவர்கள் பயந்தார்கள். இந்த சுவிசேஷத்தில் கிட்டத்தட்ட அனைவரும் தேவனுடைய வல்லமை வாய்ந்த பிரசன்னத்திற்கு பிரமிப்பு, ஆச்சரியம் மற்றும் பயத்துடன் பதிலளித்தனர்.

> இது மாற்குவின் புரிதலாகும். இங்கே பெண்கள் சென்று அவருடைய உயிர்த்தெழுதலை அறிவிக்கும்படி கட்டளையிடப்பட்டிருக்கிறார்கள், அதற்கு பதிலாக அவர்கள் பயந்து ஓடிப்போய் யாரிடமும் எதுவும் சொல்லவில்லை. இங்கே நாம் இரண்டாயிரம் ஆண்டுகளுக்குப் பிறகு இதைப் படிக்கிறோம், அது கதையின் முடிவு அல்ல என்பது நமக்குத் தெரியும்; தேவனின் சத்தியம் வென்றது என்பதை நாம் அறிவோம், எனவே வேதத்தில் மனித தோல்வி தேவனுடைய நோக்கங்களுடன் முரண்படுவதை நாம் மீண்டும் மீண்டும் பார்க்கிறோம்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

Dr. ராபர்ட் எல். ப்ளம்மர்

தேவனுடைய மக்கள் இந்த வாழ்க்கையில் பலவீனத்தை அனுபவிப்பார்கள். மேலும் அவர்களுக்கு தேவைகளும் இருக்கும். ரோமில் இருந்த மாற்குவின் அசல் வாசகர்களுக்கு இது உண்மையாக இருந்தது, மேலும் இது காலங்காலமாக சபைக்கு உண்மையாகவே இருந்து வருகிறது. ஆனால் சுவிசேஷத்தின் நற்செய்தி என்னவென்றால், தேவனுடைய ராஜ்யம் வந்துவிட்டது என்பது தான். மேசியா தேவ மக்களின் எதிரிகளை வென்றார். இறுதி எதிரியாகிய மரணம் கூட வெல்லப்படும். இந்த காரணத்திற்காக, தேவனுடைய மக்கள் ராஜ்யத்தின் சுவிசேஷத்தின் எதிரிகளை தைரியமாக எதிர்கொள்ள முடியும். வெற்றி ஏற்கனவே நம்முடையது.

மாற்கு சுவிசேஷத்தின் பின்னணி மற்றும் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கம் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, அதன் முக்கிய கருப்பொருள்கள் சிலவற்றைப் பார்க்க நாம் தயாராக இருக்கிறோம்.

# முக்கிய கருப்பொருள்கள்

இயேசு மேசியா அல்லது கிறிஸ்து என்ற அடையாளம் சந்தேகத்திற்கு இடமின்றி மாற்கு தனது சுவிசேஷத்தில் தொடர்புபடுத்திய மிக முக்கியமான கருப்பொருளாகும். தங்கள் பாவங்களிலிருந்து தங்களைக் காப்பாற்றவே இயேசு உண்மையில் வந்திருக்கிறார் என்பதை அவருடைய வாசகர்கள் அறிந்திருப்பதை மாற்கு உறுதிசெய்ய விரும்பினார். மரணத்தை வென்ற ராஜா இயேசு ஆவார். அவர் வல்லமை வாய்ந்தவர், அச்சுறுத்துபவர், தடுக்க முடியாதவர், மகிமையானவர். தேவனுடைய ராஜ்யத்தை பூமிக்குக் கொண்டு வந்து அவர்களை மீட்க வந்த மீட்பர் அவர். அவர்கள் அவரை இனி பார்க்க முடியாது என்ற போதிலும், அவருடைய கட்டுப்பாட்டில் தான் எல்லாம் இருந்தது, மேலும் அவர் தொடங்கிய இரட்சிப்பை முடிக்க அவர் திரும்பி வருவதாக உறுதியளித்தார்.

இந்த பாடத்தில் நம் நோக்கங்களுக்காக, இயேசுவாகிய மேசியா என்கிற கருப்பொருளை இரண்டு பகுதிகளாகப் பிரிப்போம். முதலில், இயேசுவை பாடுபடும் ஊழியக்காரராகக் கருதுவோம். இரண்டாவதாக, வெற்றிகொள்ளும் மேசியா ராஜா என்ற அவரது அடையாளத்தைப் பார்ப்போம். இயேசு பாடுபடுகிற ஒரு ஊழியர் என்கிற அவரது பாத்திரத்துடன் ஆரம்பிக்கலாம்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

# பாடுபடுகிற ஊழியர்

இயேசு ஊழியக்காரர் என்பது பற்றிய நமது விவாதம் மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்படும். முதலில், மேசியாவைப் பற்றிய சில யூதர்களின் எதிர்பார்ப்புகளைக் குறிப்பிடுவோம். இரண்டாவதாக, பாடுபடும் ஊழியராக இயேசுவின் ஊழியத்தின் தன்மையை சுருக்கமாக எடுத்துரைப்போம். மூன்றாவதாக, இயேசுவினுடைய மேசியாவின் இந்த அம்சத்திற்கு தனது வாசகர்கள் எப்படி பதிலளிக்க வேண்டும் என்று மாற்கு விரும்பிய சரியான பதிலைப் பற்றி பேசுவோம். இயேசுவின் காலத்தில் பொதுவாக இருந்த மேசியாவைக் குறித்து யூதர்களுக்கு இருந்த எதிர்பார்ப்புகளை முதலில் பார்ப்போம்.

## எதிர்பார்ப்புகள்

கிறிஸ்துவின் காலத்திற்கு நூற்றுக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பு, பெரும்பாலான இஸ்ரவேலர்கள் வாக்குத்தத்த தேசத்திற்கு வெளியே வாழ்ந்தனர். தேசத்தில் தங்கியிருந்தவர்கள் புறஜாதி ஆட்சியாளர்களின் கொடுங்கோன்மையின் கீழ் துன்பப்பட்டனர். முதலில் அது பாபிலோனியர்கள், பின்னர் மேதியர்கள் மற்றும் பெர்சியர்கள், பின்னர் கிரேக்கர்கள், இறுதியாக ரோமர்கள். இந்த நீண்ட துன்ப வரலாறு, யூத இறையியலாளர்கள் பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனங்களை வலியுறுத்த வழிவகுத்தது, இறுதியில் இஸ்ரவேலின் ராஜ்யத்தை மீட்டெடுக்க தேவன் ஒரு மேசியாவாகிய மீட்பரை அனுப்புவார்.

யூத மேசியா நம்பிக்கைகள் பல்வேறு வடிவங்களை எடுத்தன. உதாரணமாக, ரோம அதிகாரிகளுக்கு எதிராக கிளர்ச்சி செய்வதன் மூலம் இஸ்ரவேல் மேசியாவின் நாளைக் கொண்டுவர வேண்டும் என்று தேவன் விரும்புகிறார் என்று செலோத்தேயர்கள் நம்பினர். தேவன் தனது எதிரிகளை அழித்து மக்களை மீட்டெடுக்க இயற்கைக்கு அப்பாற்பட்ட முறையில் தலையிடுவார் என்று வெவ்வேறு கடைசி கால நம்பிக்கை குழுக்கள் நம்பின. இஸ்ரவேல் பிரமாணத்திற்குக் கீழ்ப்படியும் வரை தேவன் தலையிட மாட்டார் என்று நம்பிய பரிசேயர்களைப் போன்ற சடங்காச்சார கொள்கையாளர்களும் இருந்தனர். எனவே, இயேசுவின் நாளில், தங்கள் மேசியா வருவார் என்று ஏங்கிக் காத்திருந்தவர்கள் பலர் இருந்தனர்.

இயேசு தாழ்மையான பாடுபடும் ஊழியராக வந்தார். யூத மேசியானிய நம்பிக்கைகளைக் கொண்டிருந்தவர்கள் பல நூற்றாண்டுகளுக்கு முன்பு தாவீது ஆட்சி செய்த ராஜ்யத்தைப் போலவே மேசியாவின் ஆட்சியின் கீழ் உடனடி பூமிக்குரிய அரசியல் ராஜ்யத்தை எதிர்பார்த்தனர். ஆனால் இயேசு தனது பூமிக்குரிய ஊழியத்தின் போது இந்த வகையான ராஜ்யத்தை நிறுவ முயற்சிக்கவில்லை. இதனால் பலர் அவரை மேசியாவாக ஏற்றுக்கொள்ளவில்லை.

சுவாரஸ்யமாக, மேசியா ஒரு பாடுபடுகிற வேலைக்காரன் என்ற செய்தி புதியதல்ல. பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசி ஏசாயா, மேசியாவுக்கான இந்த பாத்திரத்தை குறிப்பிட்டார், குறிப்பாக ஏசாயா 53 இல் வரும் நபர் இயேசு என்று புதிய ஏற்பாடு இயேசுவைக் குறிக்கிறது. இயேசு பாடு பட்டு சேவை செய்யாமல் இருந்திருந்தால், அவர் பழைய ஏற்பாட்டு தேவைகளை மேசியாவாக பூர்த்தி செய்திருக்க மாட்டார் என்று கூட சொல்லலாம். ஆகவே, அவரை தகுதியில்லாத கிறிஸ்துவாக கருதக்கூடாது. இயேசுவின் பாடுபடும் சேவை அவர் உண்மையிலேயே கிறிஸ்து என்பதற்கு சான்றாகும். ஆனால் இயேசு வாழ்ந்த காலத்தில் இந்த பழைய ஏற்பாட்டின் கருப்பொருளை சிலர் மட்டுமே உணர்ந்தனர். அவர்களில் பெரும்பாலோர் மேசியாவைப் பற்றிய சமகால யூத ஊகங்களில் மிகவும் உறுதியாக இருந்தனர், அவர் வந்தபோது அவரை அடையாளம் காணவில்லை.

> பழைய ஏற்பாட்டில் மேசியாவின் கருத்து மிகவும் முக்கியமானது என்பது தெளிவாகிறது. மேசியா அபிஷேகம் செய்யப்பட்டவர், அபிஷேகம் செய்யப்பட்ட ராஜா. உண்மையில் இஸ்ரவேல் கீழ்ப்படிந்து மனித ராஜா வேண்டும் என்று சொல்லாமல் இருந்திருந்தால், கிறிஸ்து எப்படி வந்திருப்பார் என்று ஆச்சரியப்படுவது சுவாரஸ்யமானது. ஆனால் அவர்கள் ராஜா வேண்டும் என்றார்கள். ஆகவே, தங்களுடைய மக்களைப் பற்றிக் கவலைப்படாத, உலகில் தேவனுடைய நீதியை நிலைநாட்டாத, சுயநலம் கொண்ட “அபிஷேகம் செய்யப்பட்டவர்களின்” இந்த வாரிசு உங்களுக்கு இருந்தது. எனவே பழைய ஏற்பாட்டில் இந்த ஏக்கம் வெளிப்படுகிறது. ”ஓ, ஒரு மேசியாவின் தகுதியுடையவர் நமக்கு மேசியாவாக இருக்க முடியாதா?” வரவிருக்கும் ராஜாவைப் பற்றிய இந்த படம் உங்களிடம் உள்ளது, ஆனால் குறிப்பாக ஏசாயாவில் இந்த வரவிருக்கும் ராஜாவுக்கும் பரிசுத்த ஆவிக்கும் இடையே ஒரு கவர்ச்சிகரமான தொடர்பு உள்ளது. பழைய ஏற்பாட்டின் மக்கள் ஒரு மேசியாவுக்காக ஏங்குவது மட்டுமல்லாமல், பரிசுத்த ஆவியானவர் வந்து தங்களை நியாயப்பிரமாணத்திற்கு கீழ்ப்படியச் செய்ய அவர்கள் ஏங்குகிறார்கள். எனவே, குறிப்பாக ஏசாயா, மேசியாவிற்கும் பரிசுத்த ஆவிக்கும் இடையிலான உறவை சித்தரிக்கும் வழிகளைப் பார்ப்பது சுவாரஸ்யமானது. அவர் ஆவியால் நிரப்பப்படுவார்; அவர் ஆவியால் அபிஷேகம் செய்யப்பட்டவர். அவர் ஆவியின் மூலம் பேசுபவர். ஆகவே, உயிர்த்தெழுந்த இயேசு அவர்களிடம், “பிதாவின் வாக்குத்தத்தத்திற்காக எருசலேமில் காத்திருங்கள்” என்று சொன்னபோது



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> அப்போஸ்தலர்கள் ஆச்சரியப்பட்டதாகத் தெரியவில்லை. அது போல், "ஆ, கடைசியாக மேசியா சொல்வார் என்று நாம் எதிர்பார்த்த ஒன்றை மேசியா சொன்னார்: 'நான் பரிசுத்த ஆவியானவரை அனுப்பப் போகிறேன்.'" தேவனுடைய நீதியின் இந்த யுகத்தையும் ஆவியின் யுகத்தையும் கொண்டு வர மேசியா என்ன விலை கொடுக்க வேண்டும் என்பதை அவர்கள் புரிந்துகொள்ளவில்லை. அவர்கள் ஏசாயா 53 யை ஏசாயா 11 உடன் இணைக்கவில்லை. இந்த நீதியும் சமாதானமுமான வாழ்க்கையையும் ஆவியினுடைய வாழ்வின் ராஜ்யத்தையும் கொண்டுவருவதற்கு மேசியா மரிக்க வேண்டும் என்ற உண்மையை அவர்கள் இணைக்கவில்லை.
>
> Dr. ஜான் ஆஸ்வால்ட்

இந்த யூதர்களின் எதிர்பார்ப்புகளை மனதில் கொண்டு, இயேசு பாடுபடுகிற ஊழியர் என்கிற காரியத்தைப் பார்ப்போம்.

## இயேசுவின் ஊழியம்

இயேசு ஒரு ஆச்சரியமான மேசியாவாக இருந்தார், ஏனென்றால் அவர் மரணத்தின் மூலம் வெற்றி பெற்றார். இந்த சுவிசேஷத்தின் ஆரம்பத்தில், மாற்கு இயேசுவானவர் சிலுவையில் அறையப்படுவதற்கு வழிவகுத்த மோதல்களைப் பற்றி குறிப்பிடுகிறார். சுவிசேஷத்தின் இரண்டாம் பாதி முதலில் இயேசு அனுபவிக்கப்போகும் பாடு மற்றும் மரணத்தின் கருப்பொருளால் ஆதிக்கம் செலுத்துகிறது, பின்னர் அவரது உண்மையான பாடு மற்றும் மரணத்தைக் குறித்த காரியங்கள் உள்ளன.

இயேசுவின் பாடுகளை வலியுறுத்துவதற்கு இணையாக அவருடைய சேவைக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. அவர் பலவிதமான மக்களைக் குணப்படுத்தினார் மற்றும் பலருக்கு சேவை செய்தார். பாவிகளை மீட்பதற்காக தன் ஜீவனை மீட்கும் பொருளாகக் கொடுத்தார். தேவனுடைய மக்களுக்கு நன்மை செய்வதற்காக அவர் ஒவ்வொரு முறையும் தேவனுடைய சித்தத்திற்குக் கீழ்ப்படிந்தார்.

பாடு மற்றும் சேவையின் இந்த கருப்பொருள்களை மாற்கு வல்லமை வாய்ந்த முறையில் இணைத்த ஒரு இடம் மாற்கு 10:35-45 ஆகும். இந்த பத்தியில், யாக்கோபு மற்றும் யோவான் இயேசுவின் ராஜ்யத்தில் கனத்திற்குரிய இடங்களை இயேசுவிடம் கேட்டார்கள். பின்னர் மற்ற பத்து சீஷர்களும் இதனால் கோபமடைந்தனர். ஆனால் இயேசு அவர்கள் பன்னிரண்டு பேரையும் கடிந்து கொண்டார். அவர் அவர்களை ஊழிய வாழ்க்கைக்கு அழைத்தார், மேலும் தனது சொந்த வாழ்க்கையை ஒரு முன்மாதிரியாக வழங்கினார்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

பவுல் சொல்வது போல, தலைவர்கள் ஊழிய வாழ்க்கையில் தீவிரமாக ஈடுபடுவதும் மற்றவர்களுக்கு சேவை செய்வதும், மற்றவர்களுக்கு ஆதரவளிப்பதும், மற்றவர்களை ஆயத்தப்படுத்துவதும் பிறருக்காக தங்களைத் தாங்களே வார்ப்பதற்கு தயாராக இருப்பதும் தான் ஊழிய தலைமைத்துவம் என்பதாகும். எனவே தலைவர் என்பவர் கட்டளைகளை கொடுப்பவர் மட்டுமல்ல, அவர் ஒரு தலைவராக அந்த கட்டளைகளை கடைப்பிடித்து இலக்குகள் மற்றும் குறிக்கோள்களை நிறைவேற்றுகிறார். ஊழிய உழைப்பைப் பற்றி பேசும்போது பவுல் சொன்னதை அது எனக்கு நினைவூட்டுகிறது. அங்கு அவர் தனது சக ஊழியர்கள் அனைவரும் இந்த விஷயத்தில் கடுமையாக உழைத்ததாக கூறினார். ஊழிய தலைமைத்துவத்தின் அர்த்தம் என்ன என்பதை இது நமக்கு தெளிவுபடுத்துகிறது, மக்கள் மத்தியில் இறங்கி, சுமைகளைத் தாங்கி அதை மீட்க வேண்டும் என்பது தான் இதன் அர்த்தமாகும்.

Rev. லேரி காக்ரெல்

மாற்கு 10:45 இல் இந்த வகையான தலைமைத்துவத்திற்கான இயேசுவின் விளக்கத்தைக் கவனியுங்கள்:

> மேலும் இயேசு, "[நான்] ஊழியம் செய்யும்படி வராமல், ஊழியம் செய்யவும், [என்] பலரை மீட்கும் பொருளாக ஜீவனைக் கொடுக்கவும் வந்தேன்" என்றார் (மாற்கு 10:45).

தலைமைத்துவம் என்பது தேவனுக்கும் வழிநடத்தப்பட்டவர்களுக்கும் சேவை செய்யும் ஒரு காரியம் என்பதை இயேசு தெளிவுபடுத்தினார். தலைமைத்துவம் என்பது பெருமைக்கான வாய்ப்பு அல்ல. மாறாக, இது தலைவர்களுக்குத் துன்பத்தையே அடிக்கடி விளைவிக்கிறது. சொல்லப்போனால், மற்றவர்களுக்குச் சேவை செய்வதே இறுதியில் மரணத்திற்கு வழிவகுக்கும் என்பதை இயேசு அறிந்திருந்தார். ஆனால் இது அவர் ஏற்றுக்கொண்ட பணியாகும். அதையே பின்பற்றும்படி சீஷர்களுக்குக் கட்டளையிட்டார்.

பழைய ஏற்பாட்டில் தீர்க்கதரிசனமாக கூறப்பட்ட பாடுபடும் ஊழியர் இயேசு என்ற செய்தியைச் **சொ**ல்வதில் மாற்கு குறிப்பாக ஆர்வமாக இருப்பதாகத் தெரிகிறது. சுவிசேஷத்தின் முதல் பாதியில், ராஜாவாக இயேசுவின் பங்கு மிகவும் வலியுறுத்தப்பட்டது, இரண்டாவது பாதியில் நாம் இயேசுவின் பாடுகள் மற்றும் மரணத்தைப் பற்றிப்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

பார்க்கிறோம். “அப்படியே, மனுஷகுமாரனும் ஊழியங்கொள்ளும்படி வராமல், ஊழியஞ்செய்யவும், அநேகரை மீட்கும்பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்தார்” என்கிற மாற்கு 10:45 தான் முக்கிய வசனம் ஆகும். அந்த குறிப்பிட்ட வசனம், சீஷர்கள் அப்படிப்பட்ட ஊழியர்களாக இருக்க ஊக்குவிக்கப்படும் சூழலில் வருகிறது, உண்மையில் நம்முடைய உரிமைகளைப் பயன்படுத்தாமல், சுவிசேஷத்தின் முன்னேற்றத்திற்காகவும் ராஜ்யத்தின் முன்னேற்றத்திற்காகவும் அவற்றை ஒதுக்கி வைப்பதற்கு இயேசுவே நமக்கு முன்மாதிரி ஆவார். சீஷர்கள் அடிக்கடி செய்ய விரும்புவதைப் போல, பரலோகத்தில் சிறந்த இருக்கைகளை நாம் எவ்வாறு தேடக்கூடாது என்பதற்கான ஒரு மாதிரியை மாற்கு குறிப்பாக நமக்குத் தருகிறார். மாறாக, மற்றவர்களுக்காகத் தன்னைத்தானே தியாகம் செய்த கிறிஸ்துவின் மாதிரியை நாம் பின்பற்றுகிறோம், அதைத்தான் நாம் பின்பற்றுகிறோம்.

Rev. Dr. சைமன் வைபர்ட்

அப்படியானால், இயேசு கட்டளையிடும் இந்த வகையான ஊழிய தலைமைத்துவம் எப்படி இருக்கும் என்று நாம் சிந்தித்துப் பார்த்தால், இயேசு அந்த வகையான தலைமைத்துவத்தை எவ்வாறு வெளிப்படுத்துகிறார் என்பதை சுவிசேஷங்களில் காணலாம். வெவ்வேறு நபர்களையும் அவர்களின் தேவைகளையும் சந்திக்கும் போது அவர்கள் சொல்வதை மிகவும் நன்றாக அவர் கேட்கிறார் என்பது தான் அவர் செய்கிற முதல் விஷயம். அவர்கள் இருக்கும் இடத்தில் சந்திக்கிறார். அவர் அவர்களின் வாழ்க்கையின் பொருள் தேவைகள், அவர்களின் வாழ்க்கையின் உணர்ச்சித் தேவைகள் ஆகியவைகளில் கவனம் செலுத்துகிறார்; அவர்கள் வார்த்தைகளை மட்டுமல்ல, வரிகளுக்கு இடையில் என்ன சொல்கிறார்கள் என்பதையும் அவர் உண்மையில் கேட்கிறார். உதாரணமாக, மாற்கு சுவிசேஷத்தில், தன் மகன் பல ஆண்டுகளாக பிசாசுகளால் துன்புறுத்தப்பட்ட தந்தையுடனான சந்திப்பை நாம் காணலாம், அதாவது அவன் தன்னைத்தானே கீறிக்கொள்கிறான், அவனுக்கு பிழைப்போம் என்கிற நம்பிக்கை இல்லை. ”தயவு செய்து என் **அவிசுவாசத்**தைப் போக்க உதவுங்கள்”என்று அவர்

> கூறுகிறார். ஆகவே, அவரைக் கடிந்துகொள்வதற்குப் பதிலாக, இயேசு அவருக்குப் பதிலளித்தார், மேலும் அவர் அவனது மகனைக் குணப்படுத்துகிறார். பின்னர் இயேசு எங்கே போகிறார்? என்று நாம் சுவிசேஷத்தின் பாதையைப் பார்க்கிறோம். இயேசு தம்மைப் பின்பற்றுபவர்களுக்காகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்க, அவர்களுடைய பாவங்களுக்காக எருசலேமுக்குச் செல்கிறார். இந்த தியாக அன்பின் வெளிப்பாடு, அன்றைய கலாச்சாரத்தின் அடிப்படையில் தனக்கென இருக்கிற எல்லா பெருமைகளையும் ஒதுக்கி தன்னைப் பின்பற்றுபவர்களுக்காக தனது ஜீவனைக் கொடுக்கிறது. ஆகவே, இயேசு இந்த சுவிசேஷத்தில், அவர் சந்திக்கும் மக்களை கவனித்து, கேட்கும் விதம், இது தான். பின்னர் அவர் தனது ஜீவனைக் கொடுக்க எருசலேமுக்குச் செல்கிறார். அது தான் ஊழிய தலைமைத்துவம் என்பதாகும்.
>
> Dr. கிரிகோரி ஆர். பெர்ரி

யூதர்களின் மேசியா எதிர்பார்ப்புகள் மற்றும் இயேசுவின் ஊழியத்தை மனதில் கொண்டு, கிறிஸ்துவாக இயேசுவின் அடையாளத்தின் இந்த அம்சத்திற்கு மாற்கு தனது வாசகர்கள் பெற விரும்பிய பதில்களை பரிசீலிப்போம்.

## சரியான பதில்

தம்மைப் பின்பற்றுபவர்கள் துன்பப்படுவார்கள் என்று இயேசு கற்பித்தார். சமூகத்தில் எதிர்ப்பை சந்திக்க நேரிடும். அவர்களுக்கு தங்கள் குடும்பத்தினருடன் மோதல் உண்டாகும். அவர்கள் பிசாசுகளால் சோதிக்கப்பட்டு துன்புறுத்தப்படுவார்கள். அவர்கள் துன்புறுத்தப்படுவார்கள், சிலர் கொல்லப்படுவார்கள். ஆனால் அவர்களுக்கு இன்னும் விசுவாசமும் விடாமுயற்சியும் தேவைப்பட்டது. மாற்கு 12:30 இல் இயேசு இந்தக் கருத்தை எவ்வாறு சுருக்கமாகக் கூறினார் என்பதைக் கவனியுங்கள்.

> உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும், உன் முழு மனதோடும், உன் முழுப் பலத்தோடும் அன்புகூருவாயாக என்பதே பிரதான கற்பனை (மாற்கு 12:30).

இங்கே, இயேசு உபாகமம் 6:5 யைக் குறிப்பிட்டு, தம்முடைய மக்களின் வாழ்க்கையில் தேவனுடைய கோரிக்கைகளின் முழுமையை

வலியுறுத்தினார். நம் வாழ்வின் ஒவ்வொரு அம்சத்திலும் நாம் தேவனுக்கு நம்மை முழுமையாக அர்ப்பணிக்க வேண்டும்.

இயேசுவைப் பின்பற்றுவதில் தியாகமும் உபத்திரவமும் அடங்கும். ஆனால், நாம் அவருக்கு முழுவதுமாக அர்ப்பணிப்புடன் இருக்க வேண்டும் என்றும், அவருடைய ராஜ்யத்திற்காக உலகம் வெறுக்கும் வழிகளில் வாழத் தயாராக இருக்க வேண்டும் என்றும் அவர் இன்னும் எதிர்பார்க்கிறார்.

ஒரு உதாரணமாக, மாற்கு 10:17-31 இல் உள்ள பணக்கார, இளம் தலைவனின் கதையைக் கவனியுங்கள். அவர் இயேசுவிடம் வந்து நித்திய ஜீவனைப் பெற என்ன செய்ய வேண்டும் என்று கேட்டார், மேலும் இயேசு அவரிடம் தனது உடைமைகளை விற்று ஏழைகளுக்குக் கொடுக்கும்படி கூறினார். ஆனால் இயேசுவின் கோரிக்கைகள் பணக்கார இளம் ஆட்சியாளரால் சமாளிக்க முடிந்ததை விட அதிகமாக இருந்தன, அதனால் அவர் திகைத்துப் போய்விட்டார். “ஐசுவரியவான் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிப்பதைக் காட்டிலும், ஒட்டகமானது ஊசியின் காதுக்குள் நுழைவது எலிதாயிருக்கும்” என்பதால் ஆச்சரியப்பட வேண்டியதில்லை என்று இயேசு தம் சீஷர்களிடம் கூறினார். தம்மைப் பின்பற்றுபவர்கள் குடும்பம், வீடுகள் மற்றும் உடைமைகளை விட்டுச் செல்ல தயாராக இருக்க வேண்டும் என்று அவர் கூறினார். அவர்கள் உபத்திரவப்பட தயாராக இருக்க வேண்டும். அவருக்காக அவர்கள் ஜீவனைக் கொடுக்கக் கூட தயாராக இருக்க வேண்டும். மாற்கு 8:34-35 இல் இயேசு கூறியது போல்:

> ஒருவன் என் பின்னே வர விரும்பினால், அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன். தன் ஜீவனை இரட்சிக்க விரும்புகிறவன் அதை இழந்துபோவான், என்னிமித்தமாகவும் சுவிசேஷத்தினிமித்தமாகவும் தன் ஜீவனை இழந்து போகிறவன் அதை இரட்சித்துக்கொள்ளுவான் (மாற்கு 8:34-35).

ஒரு வழியில் அல்லது வேறு வழியில், ஒவ்வொரு கிறிஸ்தவருக்கும் ஒரு சிலுவை உள்ளது. ஆனால் இரட்சிப்பின் மகிமைக்காகவும் ஆசீர்வாதத்திற்காகவும் நாம் ஜீவனையும் கொடுக்கலாம்.

> ஏனென்றால், ஒருபுறம், சிலுவையை எடுத்துக் கொள்ளுங்கள் என்று இயேசு கூறினார், ஆனால் பேதுருவின் வாழ்க்கையில் நாம் பார்க்கும்போது, அவர் சிலுவையை சுமப்பதற்கு பதிலாக ஒரு வாளை எடுக்கிறார். அவர் பிரதான ஆசாரியரின் காதை வெட்டினார். வாளா அல்லது சிலுவையா? என்பது பல நூற்றாண்டுகளாக சபைக்கு இருக்கும் ஒரு குழப்பம் ஆகும். நாம் மனித புத்திசாலித்தனத்தை அல்லது மனித வழிமுறைகளை

> அல்லது மனித ஞானத்தை பின்பற்றுகிறோமா? அல்லது நம்மையே மறுத்து இயேசுவைப் பின்தொடர்ந்து சுயத்திற்கு மரிக்கிறோமா? தேவன் தம்முடைய குமாரன் மூலம் அளிக்கும் மகிமை சிலுவையின் வழியாக மட்டுமே கிடைக்கும் என்பதை இயேசு தெளிவுபடுத்தினார். எனவே நாம் எப்படி சமரசம் செய்யலாம், எங்கு சமரசம் செய்யலாம் என்பது கேள்வி அல்ல, ஆனால் உண்மையில், நாம் இயேசுவைப் பின்பற்றுகிறோமா? என்பது தான் கேள்வி. இயேசுவின் வழி சிலுவையின் வழி என்பதை மக்கள் புரிந்துகொண்டு, அவரைப் பின்பற்றுவது என்பது சுயமாக மரிப்பதும், அவருக்காக வாழ்வதும் ஆகும் என்பதை மக்கள் உணர்ந்து அந்த நோக்கத்தில் உறுதியாக இருக்கும்போது, இந்த சமரசம், சமரசம் இல்லாமை, ஒற்றுமை மற்றும் ஒற்றுமையின்மை போன்றவை பெரிய விஷயமாக நமக்குத் தெரியாது. கிறிஸ்தவ வாழ்க்கையின் சிலுவை வடிவ இயல்பில் நாம் கவனம் செலுத்தும் போது இந்த விஷயங்கள் பெரியவை அல்ல.
>
> – Rev. மைக்கேல் ஜே. குளோடோ

சீஷத்துவம் என்பது கடினமான பாதை. உண்மையில், இயேசுவின் கூற்றுப்படி, தேவனுடைய ராஜ்யத்தில் நுழைவது உண்மையில் சாத்தியமற்றது. மாற்கு 10:27 இல் இயேசு தம் சீஷர்களுக்கு எப்படி ஊக்கமளித்தார் என்பதைக் கவனியுங்கள்.

> இயேசு அவர்களைப் பார்த்து: மனுஷரால் இது கூடாததுதான், தேவனால் இது கூடாததல்ல; தேவனாலே எல்லாம் கூடும் என்றார் (மாற்கு 10:27).

அவர் எதிர்பார்க்கும் தீவிர வழியில் இயேசுவுக்குக் கீழ்ப்படிய நமக்கு பலம் இல்லை. ஆனால் தேவனுக்கு வல்லமை உள்ளது. நாம் அவருடைய ராஜ்யத்தில் நுழைவதை உறுதி செய்வதற்காக அவர் நமக்குள் இருக்கும் அந்த வல்லமையைப் பயன்படுத்துகிறார்.

> நாம் செய்யக்கூடிய மிக மோசமான காரியங்களில் ஒன்று, கிறிஸ்துவில் வளரவும், பரிசுத்தப்படுத்தப்படவும், பரிசுத்தத்திலும் நீதியிலும் வளரவும், ஆவியின் வல்லமையை பயன்படுத்தாமல் இருப்பது தான். அது தேவனுக்குப் பிரியமானதல்ல, அது நம்மை இரட்சித்த தேவனை நம்மை பரிசுத்தப்படுத்த விடாமல் இருப்பது அவரில் சார்ந்திருத்தல் அல்ல. எனவே ஆவியின் செயல்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> மற்றும் வல்லமை, நம் வாழ்வில் இருந்து வெளிவரும் எந்தவொரு நன்மைக்கும், நம் வாழ்வில் எந்த வளர்ச்சிக்கும் முற்றிலும் அவசியம். ஆச்சரியமான விஷயம் என்னவென்றால், அவருடைய மனிதத்தன்மையில் இயேசு நமக்கு முன்மாதிரியாக இருப்பதால், அவருடைய வாழ்க்கையில் நாம் பார்ப்பது இது தான். பரிசுத்த ஆவியானவர் கிறிஸ்துவின் வாழ்க்கையில் வந்து செயல்படுகிறார், மற்றும் பலப்படுத்தி வழிநடத்துகிறார், அவருடைய ஊழியத்தின் தொடக்கத்தில் ஞானஸ்நானத்தில் அவரை அபிஷேகம் செய்கிறார், அதற்கு முன்பே, பரிசுத்த ஆவியானவர் கன்னியின் வயிற்றில் தேவனை ஒரு மனிதனாக பிறக்க வைக்கிறார். ஆவியானவர் அவரைச் சோதிக்கும்படி வனாந்தரத்திற்கு அழைத்துச் செல்வதைக் காண்கிறோம். ஆவியானவர் வந்து அவருக்குப் பணிவிடை செய்கிறார். ஆவியானவர் கிறிஸ்துவின் வாழ்க்கையில் வல்லமையளிக்கும் செயலை செய்கிறார். எனவே, இது நிச்சயமாக கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்களின் வாழ்க்கையில் வல்லமையளிக்கும் வேலையாகும்.
>
> Dr. கே. எரிக் தோனேஸ்

ரோமில் இருந்த தனது அசல் வாசகர்கள் தங்கள் பாடுகளும் உபத்திரவமும் அவர்கள் கிறிஸ்துவை உண்மையாக பின்பற்றுபவர்கள் என்பதற்கான அடையாளம் என்பதை அறிந்து கொள்ள வேண்டும் என்று மாற்கு விரும்பினார். இது இயேசுவின் ராஜ்யத்திற்கான திட்டத்தின் ஒரு பகுதியாக இருந்தது. இந்த உண்மையால் அவரது வாசகர்கள் ஊக்குவிக்கப்பட வேண்டும் என்று மாற்கு விரும்பினார். அவர்கள் தங்கள் துன்பங்களை தைரியத்துடனும் நம்பிக்கையுடனும் எதிர்கொள்ளும் வகையில், இயேசுவுக்கு வல்லமை அளித்தது போல், அவர்களுடைய பாடுகளின் வழியாக முன்னேறி செல்ல தேவன் அவர்களுக்கு வல்லமை அளிப்பார் என்ற நம்பிக்கை அவர்களுக்கு இருக்க வேண்டும் என்று அவர் விரும்பினார்.

இயேசு இன்னும் மெதுவாக தனது ராஜ்யத்தை கொண்டு வருகிறார்; அந்த நோக்கத்திற்காக அவர் இன்னும் தனது மக்களின் பாடுகளை ஒரு வழிமுறையாகப் பயன்படுத்துகிறார்; மேலும் நாம் இன்னும் சகித்துக்கொள்ள நமக்கு அவர் பெலன் தருகிறார். இயேசுவுக்காகவும் அவருடைய ராஜ்யத்திற்காகவும் பாடுபடுவது நம் உற்சாகத்தைக் குறைக்கக் கூடாது; அது நமக்கு ஆறுதலாகவும் ஊக்கமாகவும் இருக்க வேண்டும். நாம் அவருடைய ஊழியர்களாக இருப்பதால் துன்பப்படுகிறோம். ஒரு நாள் நமது பாடுகளுக்கு புரிந்து கொள்ள முடியாத ஆசீர்வாதங்களுடன் வெகுமதி அளிக்கப்படும் என்று



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

நாம் உறுதியாக நம்புகிறோம் - நாம் அனுபவிக்கும் சிரமங்களுக்கும் அதிகமான ஆசீர்வாதங்கள் நமக்குக் கிடைக்கும்.

தேவனுடைய ராஜ்யத்தை பூமிக்குக் கொண்டுவரும் ஜெயங்கொள்ளும் ராஜாவாக இருக்கும் அவரின் பாத்திரமே இயேசுவினுடைய அடையாளத்தின் இரண்டாவது அம்சமாகும்.

## ஜெயங்கொள்ளும் ராஜா

மேசியா தாவீது ராஜாவின் சந்ததியாக இருப்பார் என்றும், தாவீதின் சிங்காசனத்தின் மகிமையை மீட்டெடுத்து இஸ்ரவேலை என்றென்றும் ஆள்வதே அவரது பணி என்றும் பழைய ஏற்பாடு தெளிவாக்கியது. இது சங்கீதம் 89, 110 மற்றும் 132 போன்ற இடங்களில் தீர்க்கதரிசனமாக கூறப்பட்டதையும், மாற்கு 12:35 இல் உறுதிப்படுத்தப்பட்டதையும் காண்கிறோம். எனவே இயேசு, கிறிஸ்து அல்லது மேசியா என அடையாளம் காணப்பட்ட போதெல்லாம், அவரது ராஜ அந்தஸ்தும் உறுதிப்படுத்தப்பட்டது. உதாரணமாக, இதனால்தான் அவர் மாற்கு 10:47-48 இல் “தாவீதின் குமாரன்” என்று அழைக்கப்பட்டார். மேலும் இயேசுவே மாற்கு 14:61-62-ல் சனகெரிப் சங்கம் முன் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டபோதும், மாற்கு 15:2 இல் பிலாத்துவால் விசாரிக்கப்பட்டபோதும் தன்னை மேசியா ராஜா என்று வெளிப்படையாகக் கூறினார்.

ஜெயங்கொள்ளும் ராஜாவாக இயேசுவின் கதாபாத்திரத்தின் மூன்று அம்சங்களை மாற்கு வலியுறுத்தினார். இயேசு தம்முடைய ராஜ்யத்தை அறிவித்தார் என்ற உண்மையை நாம் கருத்தில் கொள்வோம். அவர் தனது வல்லமையையும் அதிகாரத்தையும் வெளிப்படுத்தியிருப்பதைக் காண்போம். அவர் தனது எதிரிகளை வென்றார் என்பதை நாம் கவனிப்போம். இயேசு தம்முடைய ராஜ்யத்தை அறிவித்தார் என்பதிலிருந்து ஆரம்பிக்கலாம்.

### பிரகடனப்படுத்தப்பட்ட ராஜ்யம்

மாற்கு இயேசுவின் சுவிசேஷ ஊழியத்தை மாற்கு 1:14-15 இல் சுருக்கமாகக் கூறிய விதத்தை நினைவுகூருங்கள், அங்கு அவர் இந்த அறிக்கையை அளித்தார்:

> யோவான் காவலில் வைக்கப்பட்ட பின்பு, இயேசு கலிலேயாவிலே வந்து, தேவனுடைய ராஜ்யத்தின் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தார். ”காலம் நிறைவேறிற்று,” ”தேவனுடைய ராஜ்யம் சமீபமாயிற்று. மனந்திரும்பி, சுவிசேஷத்தை விசுவாசியுங்கள்!” என்றார் (மாற்கு 1:14-15).

இயேசுவின் பிரசங்க ஊழியத்தின் மைய நோக்கம், தேவனுடைய ராஜ்யம் சமீபமாயிருக்கிறது, மனந்திரும்பி விசுவாசிக்கிற அனைவருக்கும் அதன்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

ஆசீர்வாதங்கள் வழங்கப்படும் என்ற நற்செய்தி அல்லது நற்செய்தியை அறிவிப்பதாகும்.

இயேசுவும் தம்முடைய ராஜ்யத்தின் இரகசியங்களைத் தம் சீஷர்களுக்குக் கற்பித்து அறிவித்தார். உண்மையில், அதனால்தான் அவர் அடிக்கடி உவமைகளில் கற்பித்தார் - தெரிந்தெடுக்கப்பட்டவர்களுக்கு ராஜ்யத்தின் ரகசியங்களை வெளிப்படுத்தவும், அதே நேரத்தில் மற்றவர்களிடமிருந்து மறைக்கவும் உவமைகளில் பேசினார். மாற்கு 4:11-12 இல் இயேசு தம் சீஷர்களிடம் கூறியதைக் கவனியுங்கள்.

> அதற்கு அவர்: தேவனுடைய ராஜ்யத்தின் இரகசியத்தை அறியும்படி உங்களுக்கு அருளப்பட்டது. புறம்பே இருக்கிறவர்களுக்கோ இவைகளெல்லாம் உவமைகளாகச் சொல்லப்படுகிறது. "அவர்கள் குணப்படாதபடிக்கும், பாவங்கள் அவர்களுக்கு மன்னிக்கப்படாதபடிக்கும், அவர்கள் கண்டும் காணாதவர்களாகவும், கேட்டும் உணராதவர்களாகவும் இருக்கும்படி, இப்படிச் சொல்லப்படுகிறது!" என்றார் (மாற்கு 4:11-12).

உண்மையில் இயேசு அடிக்கடி தேவனுடைய ராஜ்யத்தை விவரித்தார். உதாரணமாக, மாற்கு 10 இல், குழந்தைகள் போன்று எளிதாக ராஜ்யத்திற்குள் நுழையக்கூடியவர்களையும், பணக்காரர்கள் போன்று பெரும் சிரமத்துடன் மட்டுமே நுழையக்கூடியவர்களையும் அடையாளம் காட்டினார்.

வெற்றிகொள்ளும் ராஜாவாக இயேசுவினுடைய கதாபாத்திரத்தின் இரண்டாவது அம்சம் என்னவென்றால், தேவனுடைய பூமிக்குரிய ராஜ்யத்தின் தலைவராக அவர் தனது வல்லமையையும் அதிகாரத்தையும் வெளிப்படுத்தினார் என்பதே.

## வெளிப்படுத்தப்பட்ட வல்லமை மற்றும் அதிகாரம்

இயேசு தம்முடைய ராஜ வல்லமையையும் அதிகாரத்தையும் முதன்மையாக தம்முடைய அற்புதங்கள் மூலம் வெளிப்படுத்தினார். உதாரணமாக, சிருஷ்டிப்பு அவருடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்தது என்று மாற்கு 4:41 கூறுகிறது. மாற்கு 1:24, 3:11, மற்றும் 5:7 போன்ற இடங்களில் நாம் பார்க்கிறபடி, பிசாசுகள் அவரை தேவனின் குமாரனாக அடிக்கடி அடையாளம் கண்டுகொண்டன. இயற்கையின் மீதும் பிசாசுகளின் மீதும் தம்முடைய சித்தத்தை நிறைவேற்றும் இயேசுவின் திறமை, தேவனுடைய ராஜ்யத்தை பூமிக்குக் கொண்டுவரவே அவர் வந்திருக்கிறார் என்பதற்கு வலுவான நிரூபணம். அவருடைய அதிசயமான குணப்படுத்துதலிலும் இதுவே உண்மையாகும். ராஜ்யத்தின் ஆசீர்வாதங்கள் ஜீவன் மற்றும் ஆரோக்கியத்தை உள்ளடக்கியது. எனவே, இயேசு மக்களைக் குணமாக்கியபோது, அவருடைய



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

அரச பாக்கியத்தின்படி, அவர்களுக்கு ராஜ்ய ஆசீர்வாதங்களை விநியோகித்தார்.

> இயேசு குறைந்தபட்சம் மூன்று காரணங்களுக்காக அற்புதங்களைச் செய்தார்: ஒன்று அவர் தனது இரக்கத்தைக் காட்ட விரும்புகிறார், அதாவது பாடுபடுகிறவர்களுக்கு தேவன் காட்டும் தயவு. ஆகவே, அவர் மக்களைக் குணப்படுத்துகிறார், ஏனென்றால் அவர் இரக்கத்தால் தூண்டப்பட்டு, அவர்கள் மீது பரிதாபப்படுகிறார். அவர் அவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய விரும்புகிறார், ஆனால் அதைச் செய்வதன் மூலம், அவர் யார் என்ற உண்மையை விளம்பரப்படுத்துகிறார், அவர் மேசியா ஆவார் மற்றும் அவர் ராஜ்ய இரட்சிப்பைக் கொண்டு வருகிறார். ஆகவே, அற்புதங்கள் அவருடைய அடையாளத்தைக் குறிக்கின்றன, அவர் தேவன் என்பதையும், அதனால் அவர் இவற்றைச் செய்ய முடியும் என்பதையும் வெறுமனே சுட்டிக்காட்டாமல், அவர் மேசியா என்பதைச் சுட்டிக்காட்டுகின்றன. எனவே மூன்றாவது அம்சம் என்னவென்றால், அற்புதங்கள் மேசியாவின் இரட்சிப்பு வந்துவிட்டது என்பதைக் குறிக்கிறது. தேவனால் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட யுகம் வரலாற்றில் உடைந்துவிட்டது, இப்போது நாம் பின்வாங்குகிறோம் அல்லது நோய்களைக் கொண்டுவரும் சாபத்தைத் திரும்பப் பெற்றுள்ளோம், எனவே அவர் மக்களைக் குணப்படுத்துகிறார். உணவு மற்றும் பானங்கள் மீதான வரம்புகளை நீக்கி உணவு மற்றும் ஏராளமான திராட்ச ரசத்தை வழங்குகிறார், அதனால் அற்புதங்கள் வரலாற்றில் தேவனுடைய மாற்றங்களைக் கொண்டு வருகின்றன, ஏனென்றால் அவர் மேசியாவாக இருக்கிறார், மேலும் இதை நம் வாழ்வில் கொண்டு வருவதே அவருடைய பணியாகும்.
>
> Dr. ஜான் இ. மெக்கின்லே

அற்புதங்களைச் செய்வதைத் தவிர, இயேசு தம்முடைய ராஜரீக வல்லமையையும் அதிகாரத்தையும் மற்ற வழிகளிலும் காட்டினார். உதாரணமாக, மாற்கு 1:16-20 இல், சீஷர்கள் தங்கள் வீடுகளையும், குடும்பங்களையும், வணிகங்களையும் விட்டு தம்மைப் பின்பற்றும்படி இயேசு அவர்களை தைரியமாக அழைத்தார். அவர் புத்திசாலித்தனமான ஆலோசனைகளை மட்டும் கொடுக்கவில்லை; அவர் வாழ்க்கையை மாற்றும் காரியங்களை அவர்களிடம் எதிர்பார்க்கவும் செய்தார். உண்மையில்,



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

சுவிசேஷத்தைக் கேட்கும் அனைவருக்கும் அவர் கொடுக்கும் அதே கட்டளை இதுவாகும், மேலும் அவர் தொடர்ந்து அதே பதிலை எதிர்பார்க்கிறார். ஒவ்வொரு மனிதனும் இயேசுவுக்குக் கீழ்ப்படியக் கடமைப்பட்டுள்ளனர், தங்கள் வாழ்க்கையை அவருக்கு அர்ப்பணித்து, அவர் எங்கு சென்றாலும் அவரைப் பின்பற்றுகிறார்கள்.

மாற்கு 2:3-12 இல் உள்ள திமிர்வாதக்காரனின் பாவங்களை மன்னித்தது, இயேசுவின் அதிகாரத்திற்கு மறக்கமுடியாத உதாரணம் ஆகும். தேவனால் மட்டுமே பாவங்களை மன்னிக்க முடியும் என்பது இயேசுவுக்கும் மற்ற அனைவருக்கும் தெரியும். ஆனால் ஆச்சரியமாக, தேவனிடம் மன்னிப்பு கேட்கும்படி இயேசு அந்த மனிதரிடம் சொல்லவில்லை; ஆனால் அந்த மனிதனின் பாவங்களை அவர் அதிகாரப்பூர்வமாக மன்னித்தார். இதன் விளைவாக, இந்த அறிக்கை அந்த மனிதனின் மன்னிப்புக்கான உத்தரவாதம் மட்டுமல்ல, அது இயேசுவின் ராஜ அதிகாரமும் ஆகும். மனிதனின் பாவங்களை மன்னிப்பதன் மூலம், தேவனுடைய ராஜ்யத்தில் நீதியை நிர்வகிப்பதற்கான தெய்வீக அதிகாரம் தனக்கு இருப்பதாக இயேசு நிரூபித்தார். அவரை மன்னித்த உடனேயே அவரைக் குணப்படுத்தியதன் மூலம், அவருடைய செய்தி உண்மையிலேயே தேவனிடமிருந்து வந்தது என்பதை இயேசு நிரூபித்தார்.

நிச்சயமாக, பாவங்களை மன்னிப்பதற்கான இயேசுவின் அதிகாரம், நாம் அவரைப் பின்பற்றுவதற்கான மிகப்பெரிய காரணங்களில் ஒன்றாகும். அவர் மூலமாக, நம்முடைய பாவங்கள் நீக்கப்பட்டு, நாம் தேவனோடு ஒப்புரவாக முடியும். அவருடைய எதிரிகளாக இருப்பதற்குப் பதிலாக, நாம் அவருடைய ராஜ்யத்தின் உண்மையுள்ள குடிமக்களாக இருக்க முடியும், அதனுடன் வரும் எல்லா நித்திய ஆசீர்வாதங்களையும் நாம் பெற்றுக்கொள்ளுவோம்.

ஜெயங்கொள்ளும் ராஜாவாக இயேசுவினுடைய கதாபாத்திரத்தின் மூன்றாவது அம்சம், அவர் தனது எதிரிகளை வென்றார் என்பதுதான்.

## ஜெயங்கொள்ளப்பட்ட எதிரிகள்

இயேசுவின் வாழ்நாளில் பல எதிரிகள் இருந்தனர்: அவரை எதிர்த்த யூத தலைவர்கள், அவரை நிராகரித்த அவிசுவாசிகள், அவரால் துரத்தப்பட்ட பிசாசுகள் மற்றும் பிற எதிரிகள். மேலும் அவர் தனது எதிரிகளுடன் மோதிய ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், அவர் வெற்றி பெற்றார். அவர் அவர்களின் வாதங்களை முறியடித்தார்; அவர் அவர்களின் சதிகளைத் தவிர்த்தார்; அவர் மக்களை ஒடுக்குமுறையிலிருந்து விடுவித்தார். அவர் தனது சொந்த நோக்கங்களை நிறைவேற்ற அவர்களின் சதிகளைப் பயன்படுத்தினார், அவரை சிலுவையில் அறைய அனுமதித்தார், இதனால் அவர் பாவத்திற்கு பரிகாரம் செய்ய முடியும். இந்த வெற்றிகள் அனைத்தும் இயேசு உண்மையிலேயே மேசியா என்பதை நிரூபித்தன, தேவனுடைய ராஜ்யத்தை பூமிக்குக் கொண்டுவர தாவீதின் வழியில் வந்த ராஜா இவர் தான்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

மாற்கு அடிக்கடி குறிப்பிடும் எதிரிகளில் ஒன்று பிசாசுகள். சொல்லப்போனால், மற்ற எந்த சுவிசேஷ எழுத்தாளரையும் விட, பிசாசு மற்றும் சாத்தானின் மீது இருந்த இயேசுவின் வல்லமைக்கு மாற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தார். இயேசு பிசாசுகளைக் கட்டுப்படுத்துவதில் மாற்கு தன் வாசகர்களை கவனம் செலுத்த வைத்தார்.

இயேசுவுக்கும் பிசாசுகளுக்கும் இடையே நடந்த இந்த மோதல், இயேசு தேவனுடைய ராஜ்யத்தைக் கொண்டுவந்தார் என்பதற்குச் சான்றாக இருந்தது என்று மாற்கு கூறுகிறார். ராஜ்யம் வந்து விட்டதால் போராட்டம் இல்லாமல் அமைதியான வாழ்வு இருக்கும் என்பது இதன் அர்த்தமல்ல. மாறாக, இயேசுவின் ராஜ்யம் பொல்லாத ராஜ்யத்தினுடைய பிசாசின் வல்லமைகளுடன் போரிடவும் இறுதியில் அதை தோற்கடிக்கவும் வந்திருக்கிறது என்பதை அது மறைமுகமாக உணர்த்தியது. ரோமில் உள்ள கிறிஸ்தவர்களுக்கு, அவர்கள் பட்ட துன்பங்கள் ஒரு பெரிய ஆவிக்குரிய போரின் ஒரு பகுதியாக இருந்தன. அவர்கள் ஒரு காலத்திற்கு ஒடுக்கப்பட்டு துன்புறுத்தப்பட்டாலும், அவர்கள் வெற்றிபெறும் பக்கத்திலேயே இருந்தனர், ஒரு நாள் அவர்கள் முழுமையான வெற்றியைப் பெறுவார்கள். நமக்கும் அதுவே உண்மை.

ஆனால் பிசாசுகள் மீதான இயேசுவின் வல்லமை எவ்வளவு ஆச்சரியமாக இருந்ததோ, மரணத்தின் மீதான அவருடைய மிகப்பெரிய வெற்றியும் அப்படியே இருந்தது, இதை பவுல் 1 கொரிந்தியர் 15:26 இல் ”கடைசி சத்துரு” என்று அழைத்தார். நாம் பார்த்தது போல், இயேசு மரிப்பதற்கு முன்பு, அவருடைய மரணம் அவருடைய வெற்றிக்கு வழியாக இருக்கிறது என்று அவர் தனது சீஷர்களுக்கு பலமுறை விளக்கினார். மரணம் அவருடைய எதிரியாக இருந்தது. ஆனால் இயேசு இந்த எதிரியை வென்று தனது சொந்த நோக்கங்களுக்காக பயன்படுத்துவார்” மாற்கு 14:24-25 இல் கடைசி ராப்போஜனத்தின் போது இயேசு தம் சீஷர்களுக்கு எப்படி உறுதியளித்தார் என்பதை ஒரு உதாரணத்திற்காக கவனியுங்கள்.

> “இது அநேகருக்காகச் சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது. ”நான் தேவனுடைய ராஜ்யத்தில் நவமான ரசத்தைப் பானம்பண்ணும் நாள்வரைக்கும் திராட்சப்பழரசத்தை இனி நான் பானம்பண்ணுவதில்லையென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்” என்றார் (மாற்கு 14:24-25).

ஒரு மென்மையான மேய்ப்பராக, இயேசு தம்முடைய மரணம் மனச்சோர்வுக்கு ஒரு காரணமாக இல்லாமல், பாவத்தின் மீதும் அதன் விளைவுகளின் மீதும் தேவனுடைய உடன்படிக்கையின் வெற்றியாக இருக்கும் என்று வாக்குத்தத்தம் அளித்தார். தம்முடைய சீஷர்களுடன் பகிர்ந்துகொள்ளும் கடைசி போஜனமாக இது இருக்காது என்றும் இயேசு



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

உறுதியளித்தார். நடக்கவிருந்த அனைத்து பயங்கரமான விஷயங்களுக்குப் பிறகு – அதாவது, அவர் கைது செய்யப்படுதல், சோதனைகள், துன்பம் மற்றும் மரணம் ஆகியவற்றுக்குப் பிறகு – அவரது ராஜ்யம் அதன் அனைத்து மகிமையிலும் முழுமையடையும் போது அவர் அவர்களுடன் மீண்டும் போஜனம் பண்ணுவார். அந்த காலத்தில் இருந்த மாற்குவின் அசல் வாசகர்கள் முதல் இந்த நாள் சபை வரை, கர்த்தருடைய இராப்போஜனத்தைக் கொண்டாடும் நமது கொண்டாட்டங்கள், கிறிஸ்துவின் வெற்றி இறுதியில் நம் எல்லா துன்பங்களையும் வெல்லும் என்பதை நமக்கு நினைவூட்டுகிறது. ஒரு நாள், இயேசுவோடு ஒரு வெற்றி விருந்தை கொண்டாடுவதன் மூலம் நாம் வெகுமதி பெறுவோம்.

இயேசு நம்மைப் பாவத்திலிருந்து மீட்பதற்காக, சிலுவையில் அறையப்படுதல், மரணம், அடக்கம் செய்தல் ஆகியவற்றில், மரணம் தன்மீது அதிகாரம் செலுத்த ஒரு காலத்திற்கு அனுமதித்தார். ஆனால் அவர் அந்த அதிகாரத்தின் கீழ் இருக்கவில்லை. அவரது உயிர்த்தெழுதலில், அவர் மரணத்தை கூட வென்றார், அவர் கிறிஸ்து என்பதை சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபித்தார், தனது ராஜ்யத்தை பூமியில் மீட்டெடுக்க மேசியா ராஜாவாகிய கிறிஸ்துவை தேவன் அனுப்பினார்.

ஆனால் இயேசு ராஜாவாக வந்தார் என்றால், அவர் தோல்வியடைந்தார் என்று அர்த்தமா? இந்தக் கேள்வி, எல்லாக் காலங்களிலும் பல கிறிஸ்தவர்களைக் கவலையடையச் செய்ததைப் போலவே, மாற்குவின் உபத்திரவப்படும் வாசகர்களையும் தொந்தரவு செய்திருக்க வேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக, இயேசு இப்போது பூமியில் ஆட்சி செய்வதை நாம் காணவில்லை. மேசியா ராஜா செய்ய வேண்டிய அனைத்தையும் அவர் நிறைவேற்றியதாகத் தெரியவில்லை.

> மாற்கு சுவிசேஷத்தில், புத்தகத்தின் முதல் பாதியில், இயேசுவின் அரசாட்சி மிகவும் வலுவாக வலியுறுத்தப்பட்டுள்ளது, எனவே வியாதிகளின் மீது தமக்கு அதிகாரம் இருப்பதை இயேசு நிரூபிக்கிறார். இயற்கையின் மீது தனக்கு அதிகாரம் உண்டு என்பதை நிரூபித்தார். மக்களை தன்னை பின்தொடர வைக்க முடியும் என்பதை நிரூபித்தார். நம்மிடையே ஒரு தேவனாகிய ராஜா செய்ய வேண்டும் என்று நீங்கள் எதிர்பார்க்கும் அனைத்தையும் அவர் செய்வார். குறிப்பாக மாற்கு சுவிசேஷத்தில், இயேசு தாம் ராஜா என்று அறிவித்து உறுதிப்படுத்தி சீஷர்களின் மனதில் மெதுவாக இடம்பெறும் தருணத்தில் தான் நிராகரிக்கப்படுவேன் என்றும் மரிப்பேன் என்றும் இயேசு கூறுவது அவர்களுக்கு ஆச்சரியத்தை தந்தது. ஆரம்பத்தில், நான் நினைக்கிறேன், ராஜா தங்களுக்குள் சேவை செய்பவராக வர வேண்டும் என்ற எண்ணத்தை அவர்கள்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> புரிந்துகொள்வது மிகவும் கடினமாக இருந்தது, ஆனால் உண்மையில், பின்னோக்கிப் பார்த்து, வரவிருக்கும் ராஜாவைக் குறித்த தீர்க்கதரிசனங்களை நீங்கள் ஒன்றாகச் சேர்க்கலாம். ஏசாயா 53 போன்ற பகுதிகள் வரும் ராஜாவைப் பற்றி பேசுகின்றன, அவர் பாடுபட்டு மரிப்பார் என்று கூறுகின்றன. மனித பாவத்திற்கான மீட்கும் விலையை செலுத்துவதற்காக அவர் அதைச் செய்கிறார் என்றும், மனிதகுலத்தின் பாவங்களுக்கு பரிகாரம் செய்வதற்காக சிலுவையில் தனது மாட்சிமையை ஒதுக்கி வைப்பார் என்றும் இயேசு நம்பினார். ஆனால் நிச்சயமாக, அது கதையின் முடிவல்ல, ஏனென்றால் கிறிஸ்து மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்தார், அவர் பரலோகத்திற்கு உயர்த்தப்பட்டார், இப்போது அவர் எல்லா சிருஷ்டிப்புகளுக்கும் ராஜாவாக அந்த இடத்தை ஆக்கிரமித்துள்ளார், மேலும் அவர் ஜீவனுள்ளவர்களுக்கும் மரித்தவர்களுக்கும் நீதிபதியாக வருவார்.
>
> Rev. Dr. சைமன் வைபர்ட்

இயேசு முதல் நூற்றாண்டில் பெரும்பாலான மக்கள் எதிர்பார்த்த மேசியா அல்ல, இன்று பெரும்பாலான மக்கள் விரும்பும் மேசியா அவர் அல்ல. அவர் பாடுகள் நிறைந்த அடிமைத்தனமான வாழ்க்கையை வாழ்ந்தார், மேலும் அவர் தனது ராஜ்ய மக்களையும் அதை அனுபவிக்க அழைத்தார். மாற்கு 4 இல் விதைப்பவர் மற்றும் கடுகு விதை பற்றிய அவரது உவமைகளில், இயேசு தம்மைப் பின்பற்றுபவர்கள் உபத்திரவங்களால் தொந்தரவு செய்யப்படுவார்கள் என்றும், அவருடைய ராஜ்யம் தோற்கடிக்கப்படுவது போல் தோன்றும் என்றும் போதித்தார்.

ஆனால் சிலரிடம் ராஜ்யத்தின் வார்த்தை வேரூன்றி பலனளிக்கிறது என்றும் அவர் கற்பித்தார். அவர்கள் கீழ்ப்படிதலில் தேவனுடைய ராஜ்யத்தைத் தழுவுகிறார்கள். அவர்கள் இயேசுவைப் பின்பற்றி, தேவனுடைய ராஜ்யத்தைப் பெருக்குகிறார்கள்.

ராஜ்யம் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது; அது மெதுவாக வளரும்; அது பாடுபடவும் செய்கிறது. ஆனால் இறுதியில், தேவனுடைய ராஜ்யம் அதன் முழுமையிலும் வரும். மாற்கு 4:22 இல் இயேசு கூறியது போல்:

> வெளியரங்கமாகாத அந்தரங்கமுமில்லை, வெளிக்கு வராத மறைபொருளுமில்லை (மாற்கு 4:22).

அவருடைய அசல் வாசகர்களுக்கும் நமக்கும் மாற்குவின் செய்தி தெளிவாக உள்ளது. உபத்திரவம், துன்பம் மற்றும் எதிரிகளுக்கு எதிராகப்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

போராடி, தேவனுடைய ராஜ்யம் மர்மமான முறையில் வளர்கிறது. ஆனால் அது தேவனின் கால அட்டவணையின்படி நிச்சயமாக வளர்கிறது. தேவனுடைய ராஜ்யத்தையும் இயேசுவின் ஊழியத்தையும் நிறுத்த முடியாது. ஒரு நாள், இயேசு தான் ஆரம்பித்ததை முடிக்க திரும்புவார். அவர் தனது எல்லா எதிரிகளையும் இறுதியாகவும் முழுமையாகவும் தோற்கடிப்பார், மேலும் நாமும் மகிமைப்படுத்தப்படுவோம், ஒருபோதும் முடிவடையாத நித்திய வாழ்க்கையின் இறுதி நிலைக்குள் நுழைவோம். அந்த நேரத்தில், பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனங்கள் அனைத்தும் நிறைவேறும். அவர் எல்லாவற்றையும் சாதிப்பார்.

# முடிவுரை

இந்தப் பாடத்தில், மாற்கு சுவிசேஷத்தின் பின்னணியை அதாவது மாற்கு புத்தகத்தின் எழுத்தாளர், அவரது அசல் வாசகர்கள் மற்றும் அவர் எழுதப்பட்ட சூழ்நிலை ஆகியவற்றைக் கருத்தில் கொண்டோம். அவருடைய சுவிசேஷத்தின் கட்டமைப்பையும் உள்ளடக்கத்தையும் நாம் ஆராய்ந்தோம். அதன் இரண்டு முக்கிய கருப்பொருள்களான இயேசு பாடுபடுகிற வேலைக்காரன் மற்றும் வெற்றிகொள்ளும் ராஜா என்ற அடையாளம் ஆகியவற்றில் நாம் கவனம் செலுத்தியுள்ளோம். இந்தக் கருத்துக்களை மனதில் கொண்டு இந்த சுவிசேஷத்தைப் படித்தால், நாம் மாற்குவை இன்னும் முழுமையாகப் புரிந்துகொள்வதையும், நவீன உலகில் நம் சொந்த வாழ்க்கையில் எப்படி இதிலுள்ள பாடங்களை நடைமுறையில் கொண்டுவர முடியும் என்பதையும் காணலாம்.

மற்ற சுவிசேஷங்களில் எப்போதும் வலியுறுத்தப்படாத இயேசுவின் குணாதிசயங்கள் மற்றும் ஊழியத்தின் அம்சங்களை மாற்கு சுவிசேஷம் சிறப்பித்துக் காட்டுகிறது. இது இயேசுவை ஒரு வல்லமை வாய்ந்த, ஆற்றல் மிக்க, சுறுசுறுப்பான எஜமானராக நமக்குக் காட்டுகிறது. ஆனால், இயேசு தம்முடைய வல்லமையிலும்கூட, பாடுபடுகிற வேலைக்காரனின் பாத்திரத்தை மனப்பூர்வமாக ஏற்றுக்கொண்டார் என்பதையும் இது நமக்குக் காட்டுகிறது. மேலும் கர்த்தருடைய உதாரணத்திற்கு நாம் பதிலளிக்க மாற்கு நம்மை அழைக்கிறார். நாம் வியப்புடன் இயேசுவின் பாதத்தில் விழவும், அமைதியாக அவர் சொல்வதைக் கேட்கவும், தீவிரமான கீழ்ப்படிதலுடன் அவருடைய வார்த்தைகளுக்கு பதிலளிக்கவும் அவர் விரும்புகிறார். இயேசுவைப் போலவே நாமும் தேவனுடைய ராஜ்யத்திற்காகப் பாடுபடத் தயாராக இருக்க வேண்டும் என்று அவர் விரும்புகிறார். இயேசு தம்முடைய எதிரிகளை சிலுவையின் மூலம் ஜெயித்தபோது, அவர் நமக்கான வெற்றியையும் உறுதிப்படுத்தினார் என்பதை அறிந்து, நாம் உற்சாகப்படுத்தப்பட வேண்டும் என்று அவர்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

விரும்புகிறார். அந்த நம்பிக்கையில் தான், இயேசு மகிமையில் திரும்பும் நாள் வரை, அவருடைய ராஜ்யத்தின் நிறைவில் அந்த வெற்றியை பெற்றுக்கொள்வதற்கு நாம் விசுவாசத்தில் நிலைத்திருக்கிறோம்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.